# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 77 சோபகிருது வருடம், புரட்டாதி மாதம் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை

(06.10.2023) ஹிஜ்ரி 1445, ரபிஉல் அவ்வல் - 20, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## சிவனொளிபாதமலைக்கு செல்ல கட்டணம் அறவீடு

அநீதியான செயற்பாடு என்கிறார் பெங்கமுவே தம்மதின்ன தேரர்



02 பக்கம்

## தியலபேவில் மண்சரிவு

### மாத்தறை மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதி பணிப்பு



மாத்தறை மாவட்டம் அக்குரஸ்ஸ, தியலபே பிரதேசத்தில் நேற்று மாலை பாரிய மண்சரிவு அனர்த்தம் பதிவாகியுள்ளது. அந்தப் பிரதேசத்தில் இருந்த 21குடும்பங்கள் பாதுகாப்பான பிரதேசங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், நாட்டில் நிலவும்...

» 02 பக்கம்



# ‘நாம் 200’ நிகழ்வு நவம்பர் 2ஆம் திகதி

மலையக மக்களுக்கு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ‘நாம் 200’ நிகழ்வு நவம்பர் 2ஆம் திகதி கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது என்று இ.தொ.காவின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள்,...

02 பக்கம்

- ★ இந்திய அரசின் 10ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்கான ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படும்
- ★ ‘சௌமியபூமி’ எனும் திட்டத்தின் கீழ் காணி சீர்திருத்த ஆணைக்குழு ஊடாக பத்திரம் வழங்க திட்டம்

அமைச்சர் ஜீவன் தொண்டமான் அறிவிப்பு

## பேராயருடன் முரண்பாடு இல்லை ஆயர்கள் சங்கம் அறிவிப்பு

''உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குதல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை நிலைநாட்டுதல் என்பன தொடர்பில் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கும் ஆயர்கள் சங்கத்துக்கும் இடையில் எந்தவிதமான கருத்து முரண்பாடும் இல்லை'' என்று ஆயர்கள் சங்கத்தின் தலைவர் கலாநிதி ஹெர்ட் எந்தனி பெரேரா தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

# நாட்டிலிருந்து வெளியேறாதீர்!

### சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலை வருடாந்த பட்டமளிப்பு விழாவில் ஜனாதிபதி ரணில் மக்களிடம் வேண்டுகோள்



நாட்டை, பொருளாதார சவால்களிலிருந்து மீட்டெடுத்து போட்டித் தன்மைமிக்க பொருளாதாரத்தை நோக்கி நகர்த்துவதற்காக மனித வளத்தை ஒன்றுதிரட்ட வேண்டுமெனவும் சவால்களுக்கு மத்தியில் நாட்டை விட்டுச் செல்வதா, இல்லையா என்பதை அறிவார்ந்த சமூகம் சிந்திக்க வேண்டியது அவசியமெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

02 பக்கம்



## மின் விசிறியில் தலை மோதுண்டு மாணவன் உயிரிழப்பு

03 பக்கம்



### உஷ்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மன்னார் எம்.பி. சார்ள்ஸ் நிர்மலநாதன் தமிழகத்துக்குச் சென்று அங்குள்ள அகதி முகாம்களில் உள்ள இலங்கை அகதிகளை சந்திக்க முயற்சிகளை எடுத்தாராம். ஆனால் அவருக்கு அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை.

அகதிகளை வைத்து ஏதாவது அரசியல் செய்துவிடுவார்கள் என்று கருதி இந்திய மத்திய அரசு இதற்கான அனுமதியை வழங்கவில்லையாம்.

## தேசிய பொறிமுறையில் நம்பிக்கையில்லை

### ஈஸ்டர் தின தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுலாக்குமாறு ரணிலிடம் சஜித் கோரிக்கை



நாங்கள் ஒருபோதும் சர்வதேச விசாரணை அவசியமென்று கூறவில்லை. ஆனால், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் விவகாரத்தில் தேசிய பொறி முறையினூடாக தீர்வு கிடைக்கு மென்ற நம்பிக்கையும் எங்களுக்கு இல்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடுகள் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு மாறிவிடுகின்றன. எனவே, இந்த தாக்குதல் சம்பவத்தின் பின்னால் மறைந்துள்ள உண்மையை வெளிக்கொண்டுவர ஜனாதிபதி ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி புதிய கோணத்தில் விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும்.

02 பக்கம்

## பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்களுக்கு இடமளியேன்

### மத்தும பண்டாரவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை வேண்டுமென்கிறார் டயனா



பெண்களுக்கு பாலியல் துன்புறுத்தல் செய்யும் உரிமை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இல்லை. இனிமேல், சபையில் ஆளுங்கட்சியினராக இருந்தாலும் சரி, எதிர்த்தரப்பினராக இருந்தாலும் சரி பெண்களுக்கு எதிராக பாலியல் ரீதியான துன்புறுத்தல் செய்யக் கூடாது. அதனை மீறி செயற்பட்டால்...

02 பக்கம்

## உணவுத் தட்டுப்பாட்டுக்கான அபாயம்

### நடவடிக்கை எடுக்குமாறு அமரவீர அதிகாரிகளுக்கு அவசர பணிப்பு



நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக, உணவுத் தட்டுப்பாட்டுக்கான அபாயநிலை ஏற்பட்டுள்ளதாக கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

உணவுப் பயிர்செய்கையை அதிகரித்தல் தொடர்பான வேலைத்திட்டம் குறித்து கமத்தொழில் அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் கடந்த காலங்களில் நிலவிய கடும் வறட்சியினால் சுமார் 70 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளது.

இதேவேளை, தற்போது சில மாகாணங்களில் நிலவும் தொடர்ச்சியான மழையுடன் கூடிய காலநிலையினால் அறுவடைக்கு தயாராகவிருந்த நூற்றுக்கணக்கான ஏக்கர் நெற்செய்கையும் பாதிப்படைந்துள்ளது.

அதேபோன்று, மரக்கறிச் செய்கையும் தற்போது நிலவும் காலநிலையினால் அழிவடைந்துள்ளது. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 15 ஆயிரம் ஏக்கரில் செய்கை பண்ணப்பட்டிருந்த பாசிப்பயறு செய்கையும் அழிவடைந்துள்ளது. ஹம்பாந்தோட்டையில் மேற்கொள்ளப்படும் பாசிப்பயறு உற்பத்தியானது தேசிய மொத்த பாசிப்பயறு தேவையில் 40 சதவீதத்தை பூர்த்தி செய்யக்கூடியதாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

## வங்கி வைப்பு – கடன் வட்டி வீதங்கள் குறைப்பு

வங்கிகளுக்கான மத்திய வங்கியின் வைப்பு வசதிக்கான வட்டியை 10 சதவீதத்தாலும் கடன்வழங்கல் வசதிக்கான வட்டியை 11 சதவீதத்தாலும் 100 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபை அறிவித்துள்ளது.

நாணயக்கொள்கைச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது நாணயக்கொள்கை மீளாய்வு நேற்று முன்தினம் (04) இடம்பெற்றது.


இக்கூட்டத்தின்போதே இதுதொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தாழ்ந்தளவான பணவீக்கம் மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் சாதகமான பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பன உள்ளடங்கலாக தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற அபிவிருத்திகளின் உன்னிப்பான பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதனைத்தொடர்ந்து நடுத்தர காலத்தில் பணவீக்கத்தை எதிர்பார்க்கப்படுகின்ற 05 சதவீத மட்டத்தில் உறுதிநிலைப் படுத்துவதுடன்...

02 பக்கம்

## இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் டோவலுடன் மொரகொட சந்திப்பு



இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவின் பதவிக்காலம் நிறைவடைந் துள்ளது.

தனது பதவிக் காலத்தை நிறைவு செய்த அவருக்கு இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலின் அலுவலகத்தில் நேற்று (05) பிரியாவிடை நிகழ்வொன்றும் இடம் பெற்றுள்ளது.

02 பக்கம்

## கொத்து, ப்ரைட் ரைஸ், தேநீர் விலை அதிகரிப்பு



சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலைகளை அதிகரிக்க அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, தேநீர் கோப்பையொன்றின் விலை 10 ரூபாவாலும் கொத்துரொட்டியின் விலை 20 ரூபாவாலும் ப்ரைட் ரைஸ் ஒரு பொதியின் விலை 50 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷண ரெக்ஷான் தெரிவித்தார்.

02 பக்கம்

## தேர்தலுக்கு பங்களிப்பேன்

### மஹிந்த ராஜபக்ஷ சொல்கிறார்



அனைவரதும் எதிர்பார்ப்புக்கமைய நாட்டில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் காட்டாயம் தனது பங்களிப்பை வழங்க தயாராக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று (05) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்கம் தொடர்ச்சியாக பொருட்களின் விலைகளை அதிகரிப்பது மாத்திரமல்லாமல் கட்டண அதிகரிப்பையும் செய்து வருகிறது.

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



எல்லோரும் வெளிநாட்டுக்கு போய்விட்டா தேர்தலில வாக்களிக்க யாரும் இருக்க மாட்டாங்கள் என்று ரணில் ஐயா நினைச்சிட்டார் போல...

## தேசிய பொறிமுறையில்...

இதுவே, தற்போது ரணிலின் கடமையாகும். அந்த விசாரணைகளுக்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பும் முக்கியமானது என்று தாம் நம்புவதாக எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (05) சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்ற அமர்வு நேற்று ஆரம்பித்தபோது விசேட கோரிக்கையொன்றை முன்வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. மின் கட்டணத்தையும் மூன்றாவது முறையாகவும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலைமைகளால் மக்களால் வாழ முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தின் கொள்கைகள் பொருளாதாரத்தை குறுகியதாக்கியுள்ளது. வருமான முறை குறைவடையும்போது மக்கள் எவ்வாறு வாழ்வாதாரத்தை முன்னெடுப்பார்கள். இந்தக் கேள்விக்கு பதிலளிக்க வேண்டும்.

நாடு பாரிய வீழ்ச்சி அடைந்துள்ளது. கடந்த 12 வருடங்களில் 3,765 யானைகள் உயிரிழந்துள்ளன. கடந்த 09 மாதங்களில் 290 யானைகளும் செப்டெம்பர் மாதத்தில் மாத்திரம் 20 யானைகளும் உயிரிழந்துள்ளன. மறுபுறம் வனஜீவராசிகள் அமைச்சு இதுவரையில் மின் கட்டணத்தை செலுத்தவில்லை. கடந்த 48 மணிநேரத்தில் (நேற்று) 11 பேர் காணாமல் போயுள்ளனர். அவர்களுள் ஐவர் சிறுவயதினராக இருக்கின்றனர்.

எமது நாடு போதைப்பொருளுக்கான சொர்க்கமாக மாறியுள்ளதாக வைத்தியர் திராஜ் பெரேரா தெரிவித்துள்ளார். நாட்டிலுள்ள போதைப்பொருட்களில் தற்போது புதிதாக சம்பி என்ற போதைப்பொருளும் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பி என்ற போதைப்பொருளைப் பாவிப்போரின் உடல் நிலைமை மிகவும் மோசமடையும். இதுவொரு பாரதூரமான பிரச்சினையாகும்.

இலங்கையில் 10 பேரில் 06 பேர் அபாய நிலையில் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டம் தெரிவித்துள்ளது. 221 இலட்சம் மக்கள் தொகையில் 123 இலட்சம் பேர் அபாய நிலையில் இருக்கிறார்கள். இவ்வாறான பிரச்சினைகள் இருக்கும்போது எந்தவொரு பிரச்சினையும் இல்லாதது போன்றே இந்த அரசாங்கம் செயற்பட்டு வருகிறது. அவர்கள் நினைத்தபடி கட்டணத்தை அதிகரித்து பொருளாதாரத்தை முடக்கி வருகிறார்கள்.

அமைச்சரவை என்ற அடிப்படையில் மனச்சாட்சியுடனா எரிவாயுவின் விலையை அதிகரித்தார்கள் என்பது புரியவில்லை. பொருளாதாரத்தை சுருக்கிவிட்டு மக்களின் மீது சுமையை திணிக்கிறார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜேர்மன் ஊடகமொன்றுக்கு நேர்காணலொன்றை வழங்கி கர்தினாலுக்கும் ஆயர்கள் சங்கத்துக்கும் இடையில் மாறுபட்ட நிலைப்பாடுகள் இருப்பதாக தெரிவித்திருக்கிறார். ஆனால், ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறே அவர்கள் கோருகிறார்கள். அதுமாத்திரமல்ல அந்த ஊடக நிறுவனத்திடம் சர்வதேச விசாரணை அவசியமில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், அவரேதான் சர்வதேச விசாரணையொன்று அவசியமாக இருப்பதாக தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியானதும் ரணிலின் கருத்துக்களும் நிலைப்பாடுகளும் மாறிவிட்டன. கர்தினாலும், ஆயர்கள் சங்கமும் கோருவது போன்று ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதே ஜனாதிபதியின் கடமையாகும்.

இதுவரையில், தேசிய பொறிமுறையில் யாருக்கும் நம்பிக்கையில்லை. எமது பிரச்சினையை நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும். நாங்கள் ஒருபோதும் சர்வதேச விசாரணைகளுக்கு செல்லுமாறு கூற வில்லை. ஆனால், எங்களுக்கும் தேசிய பொறிமுறையில் நம்பிக்கையில்லை. நாங்களும் இந்த நாட்டின் சுயாதீன தன்மைக்காக முன்னிருந்தோம்.

ஆனால், ஆயர்கள் சங்கத்துக்கும் கர்தினாலுக்கும் இடையில் எந்த பரஸ்பர கருத்து வேறுபாடும் இல்லை என்று அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எனவே, ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் மறைந்துள்ள விடயங்கள் தொடர்பில் புதிய விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு சர்வதேச ஒத்துழைப்பும் அவசியமென்று நாங்கள் நம்புகிறோம் என்றார்.

## பெண்கள் மீதான...

பெண்களுக்காகதனித்து போராடவும் நான் தயாராக இருக்கிறேன். எந்தவொரு பெண்ணுக்கும் தொந்தரவு வழங்க இடமளிக்கமட்டேன் என்று இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வார்த்தைகளினூடாக எனக்கு பாலியல் துன்புறுத்தல் செய்துள்ளார். அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க சிறப்புரிமைகள் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை முன்வைத்தார்.

சபையில் நேற்று (05) சிறப்புரிமை குறித்து உரைநிகழ்த்தியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பில் கடந்த பாராளுமன்ற அமர்வில் உரையாற்றியபோது ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, என்மீது அவதூறான கருத்தை முன்வைத்திருந்தார். ஆனால், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் இடம்பெற்றபோதே அவரே நாட்டின் சட்ட ஒழுங்கு அமைச்சராக இருந்தார். அதன்போது நிலந்த ஜயவர்தன என்ற அதிகாரியினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தை வைத்துக்கொண்டே எனது உரையை நிகழ்த்தியிருந்தேன். ஆனால், அந்த விடயம் தொடர்பில் பேசாமல் அவர் என் மீது தனிப்பட்ட ரீதியில் கருத்து முன்வைத்து என்மீது 'பெல்லி" என்ற சொல்லை பிரயோகித்திருந்தார். அதற்கான ஆதாரம் என்னிடம் இருக்கின்றது. அதனை சபையில் சமர்ப்பித்துள்ளேன். இதுதொடர்பில் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.இலங்கை முழுவதுமுள்ள பெண்களுக்காகவே நான் உரையாற்றுகிறேன்.

பெண்களின் பெரும்பான்மை வாக்குகள் இந்த பாராளுமன்றத்தில் இருக்கின்றன. இது முதல் முறையல்ல. பலமுறைகள் இடம்பெற்றுள்ளன. இது வாய்மூலமான பாலியல் துன்புறுத்தலாகும். இந்த மேன்மை தங்கிய சபையிலுள்ள உறுப்பினர்கள் எந்த வேறுபாடுமின்றி பெண்களின் உரிமைகளை பாதுகாக்கவேண்டும் .இதற்கு முன்னர் இந்த சபையில் இவ்வாறு பெண்களுக்கு துன்புறுத்தல்கள் இடம்பெற்றதில்லை. பெண்களை தரக்குறைவாக பேசியதை அவதானித்ததில்லை. ஆனால், பாராளுமன்றத்திலுள்ள ஒருசிலரினால் நாட்டு மக்களின் மத்தியில் பாராளுமன்றம் ஒரு அவமதிப்புக்குரிய இடமாக மாறியுள்ளது. இதுபோன்ற நபர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்புவதா இல்லையா என்பதை நாட்டிலுள்ள பெண்கள் சிந்திக்கவேண்டும்.

நான் நன்றிக்காக இந்த சபையில் இருப்பதாக மத்தும பண்டார தெரிவித்திருக்கிறார். ஆனால், எனது தயவிலேயே இன்று அவர் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருக்கிறார். இதனை அவர் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

அவர் அவர்களின் தாயார், மனைவி, பெண் குழந்தைகளைப் பேசும் மொழிகளை இந்த சபையில் பேச முயற்சிக்கக் கூடாது. மீண்டும் இந்த பாராளுமன்றத்தில், ஆளுந்தரப்பாக இருந்தாலும் எதிர்த் தரப்பாக இருந்தாலும் பெண்களுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் செயற்படக் கூடாது. அவ்வாறு அவதூறு செய்வார்களாக இருந்தால் இந்த நாட்டிலுள்ள ஒட்டுமொத்த பெண்களுக்காக தனியாளாக போராடுவேன். அதனை அனைவரும் நினைவில் கொள்ளவேண்டும். எந்தவொரு பெண்ணுக்கும் பாலியல் தொந்தரவு வழங்க இடமளிக்கமாட்டேன். பாராளுமன்றத்தில் மாத்திரமல்ல எங்கு இடம்பெற்றாலும் அதற்கு எதிராக குரல் கொடுப்பேன் என்றார்.

## பேராயருடன் முரண்பாடு...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜேர்மனுக்கு விஜயம் செய்திருந்தபோது, அந்நாட்டின் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலொன்றின்போது உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள் தொடர்பில் பேராயரின் நிலைப்பாட்டுக்கும் ஆயர்கள் சங்கத்தின் நிலைப்பாட்டுக்கும் இடையே வேறுபாடு இருப்பதாக தெரிவித்திருந்தார்.

அந்த நேர்காணலில், பேராயரின் நிலைப்பாடு அல்லாமல் ஆயர் சங்கத்தின் நிலைப்பாட்டை பெற்றுக்கொண்டீர்களா என்று அந்த ஊடகம் வினவியிருந்தது.அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் ஆயர் சங்கத்தின் நிலைப்பாட்டுக்கும் பேராயரின் நிலைப்பாட்டுக்கும் இடையில் வேறுபாடு இருப்பதாக சுட்டிக்காட்டியிருந்தார். எவ்வாறாயினும், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்கு திட்டமிட்ட நபர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதும் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதும் இன்றியமையாதது என ஆயர்கள் சங்கம் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றது என்றும் ஆயர்கள் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## தியலபேவில்...

கடும் மழை காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாத்தறை மாவட்ட மக்களின் தேவைகளை கண்டறிந்து அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மாத்தறை மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அந்த மக்களுக்கு அவசியமான சமைத்த உணவு மற்றும் மருந்து போன்ற அத்தியாவசிய வசதிகளை குறைவின்றி வழங்குமாறும் அதற்காக முப்படையினரின் ஒத்துழைப்பைப் பெறுமாறும் ஜனாதிபதி மேலும் பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், எதிர்காலத்தில் வெள்ளப்பெருக்கு அதிகரிக்கும் பட்சத்தில், மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான முன்னாயத்தங்களை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவித்துள்ளார்.

மாலிம்பட, அக்குறஸ்ஸ, கம்புறுபிட்டிய மற்றும் திஹகொட ஆகிய பிரதேசங்களில் நிறுவப் பட்டுள்ள உணவு தயார்படுத்தல் நிலையங்களில் அவர்களுக்காக சமைத்த உணவு வழங்கப்படுகிறது. 6 ஆயிரத்து 967 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்து 553 பேர் வெள்ளத்தில் சிக்கியுள்ளதோடு இராணுவத்தினரால் சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகிறது.

மாத்தறை மாவட்டத்தில் அவசர அனர்த்த நிலைமைகள் தொடர்பான தகவல்களை மேஜர் ஜெனரல் ஜனக ரணசிங்க (076-6907042) கேர்ணல் ரொஷான் கண்ணங்கர (076-6907146) ஆகியோருக்கு தெரியப்படுத்துமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. வெள்ள அபாயமுள்ள பிரதேச மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

## தேர்தலுக்கு...

மக்களுக்கு நிவாரணமொன்றை பெற்றுக்கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். நான் இன்னும் அரசியலிலிருந்து வெளியேறவில்லை. தற்போதைய நிலையில் அதற்கான அவசியமும் இல்லை.

எமது நாட்டில் வைத்தியர்களுக்கு உரிய சலுகைகள் இன்மையினால் அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வருகிறார்கள். எனவே, அதுதொடர்பில் சிந்தித்து வைத்தியர்களுக்கு சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.

மேலும், நாட்டின் பொருளாதாரம் மற்றும் மக்களுக்கான நிவாரணங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடவும் நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். பொதுஜன பெரமுன குழுவினர் சகலரும் ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த எதிர்பார்த்துள்ளோம்.அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதியின் கொள்கையும் எங்களின் கொள்கையும் வேறுபட்டது. ஆனால், அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்பதே எனது நிலைப்பாடாகும். எந்தவொரு பிரச்சினையாக இருந்தாலும் கலந்துரையாடியதன் பின்னரே தீர்மானமொன்றை எடுக்க வேண்டும்.

எங்களின் தனியான அரசாங்கத்தின் கீழ் கட்டாயம் நிவாரணத்தைப் பெற்றுக்கொடுப்போம். அனைவரதும் எதிர்பார்ப்புக்கமைய எதிர்வரும் வருடத்தில் நாட்டில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் கட்டாயம் எனது பங்களிப்பையும் பெற்றுக்கொடுப்பேன். அதற்காக உத்தியோகபூர்வமாக தயாராக இருக்கிறேன் என்றார்.

## இந்திய தேசிய...

இதன்போது, அவர் தேசிய பாதுகாப்பு ஆலோசகருக்கு தனது பதவிக்காலத்தில் வழங்கிய ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது, இலங்கை உயர்ஸ்தானிகர் மற்றும் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோர் இருதரப்பு உறவின் நிலை குறித்து விரிவான மீளாய்வு செய்துள்ளனர். எதிர்கால ஒத்துழைப்புக்கான முன்னுரிமைப் பகுதிகள் குறித்தும் கருத்து பரிமாறிக்கொண்டுள்ளனர்.

களனி ரஜ மகா விகாரையின் சுவரோவியங்களைக் கொண்ட இலங்கை தொல்பொருள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட "உறுமயக்க அருமை" என்ற இரண்டு தொகுதிகளை மொரகொட, டோவலிடம் நினைவுச் சின்னமாக இதன்போது வழங்கியுள்ளார்.

## நாட்டிலிருந்து...

அடுத்த ஐந்து வருடங்களில் உலகம் பாரிய மாற்றங்களை சந்திக்கப்போவதாக கண்காணிப்புக்களில் தெரியவந்துள்ளதால், அபிவிருத்தி அடைந்த நாடுகளும் பொருளாதார சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படலாமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் (04) நடைபெற்ற சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது, சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தினால் 246 பேருக்கு பட்டமளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "முப்படைகளினதும் ஆட்சேர்ப்பு பிரிவு அல்லது சிவில் பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் என்ற வகையில் பட்டத்தை பெற்றுக்கொண்டு நாட்டிலிருந்து இந்தச் சந்தர்ப்பத்தை கடந்து செல்வதா? அல்லது நாட்டை விட்டு வெளியேறுவதா? என்பதை தீர்மானிக்க வேண்டும்.

நாட்டின் பொருளாதார சவால்களை வெற்றிகொள்வதற்கு நாட்டுக்கு அறிவார்ந்த மனித வளத்தின் அவசியம் உள்ளது. அதனால் உரிய தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் ஒரு தேசமாக பல்வேறு சவால்களுக்கும் நிலையற்ற தன்மைகளுக்கும் முகம்கொடுத்தோம். அதன் விளைவாக தங்களது இலக்குகளை அடைய பலர் வெளிநாடுகளுக்குச் செல்லும் எண்ணத்துடன் இருக்கின்றனர். எவ்வாறாயினும் இலங்கை, இலகுவானதாக இல்லாவிட்டாலும் நிலையான ஒரு பொருளாதாரக் கொள்கையை தற்போது பின்பற்றுகிறது. அதனால், பணவீக்கத்தை குறைத்தவுடன் வருமான வழிமுறைகளை உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளது.

2024 ஆண்டு எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மீள ஆரம்பிப்பதற்கான ஆண்டாகும் என்பதோடு நாடு பொருளாதார சவால்களை எதிர்கொண்ட அனைத்து தருணங்களிலும் நாட்டின் வளர்ச்சிக்கு பட்டதாரிகள் சமூகம் தங்களது பணியை சிறப்பாக செய்துள்ளனர்.

அடுத்த 10 வருடங்களுக்குள் பல்வேறு பொருளாதார மாற்றங்களை உலகம் சந்திக்கப் போகின்றது என்று கூறப்படுகிறது. கனடா மற்றும் ஐரோப்பா போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன. எதிர்காலம் தொடர்பில் உங்கள் அவதானம் செலுத்தும் போது மேற்படி சவால்களைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

நீங்கள் உள்நாட்டில் தொழில் செய்து நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் போது, சிறந்த பொருளாதார நிலையை நாட்டுக்குள் உருவாக்க முடியும்.

நீங்கள் அந்த பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு அபிவிருத்தியின் பங்குதாரர்கள் ஆவதா? இல்லையா? என்பதை தீர்மானிக்க வேண்டும். தேவையேற்படுமாயின் இந்த பட்டத்துடன் வெளிநாடுகளுக்குச் செல்லும் இயலுமையும் உங்களுக்குள்ளது. எவ்வாறாயினும் இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீண்டு, போட்டித் தன்மை மிக்க பொருளாதாரத்தை நோக்கி நாட்டை நகர்த்த வேண்டும். அதற்காக நாட்டின் மனித வளத்தையும் ஒன்றுதிரட்ட வேண்டும். இலங்கையில் 450இற்கும் மேற்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளன. அவற்றை பல்கலைக்கழகங்கள் அல்லது கல்வியியல் கல்லூரிகளாக மாற்ற வேண்டும். அதனால் தொழில்வாண்மை மிக்க சமூகத்தை கட்டியெழுப்ப முடியும். தொழில் திறன் கொண்ட பிரஜைகளுடன் இலங்கையின் கதவுகளை உலகுக்கு திறக்கும் வாய்ப்புள்ளது. அதேபோல் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில்நுட்ப தெரிவுடன் கூடிய சமூகத்தை கட்டியெழுப்புவது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

இராணுவத்தினரும் சிவில் சமூகமும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொதுவான கட்டமைப்பாக பல்கலைக்கழகங்களை மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகும்" என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன, பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி ஜெனரல் விக்கும் லியனகே, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் வேந்தர் ஓய்வுபெற்ற ஜெனரல் எஸ்.எச்.எஸ். கோட்டேகொட, உப வேந்தர் ரியர் அட்மிரல் தம்மிக்க குமார மற்றும் பீடாதிபதிகள் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## சிவனொளிபாதமலைக்கு...

ஹட்டன் மற்றும் இரத்தினபுரி வீதியினூடாக சிவனொளிபாதமலைக்கு சுற்றுலாச்செல்லும் தேசிய, சர்வதேச பயணிகளிடம் நேற்று முன்தினம் (04) முதல் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் பிரயாணச் சீட்டு விநியோகிக்கப்படுவதாகவும் பிரயாணச் சீட்டு விநியோகிப்பது அநீதியான செயற்பாடு என்றும் சிவனொளிபாதமலை பொறுப்பாளரும் சப்ரகமுவ மாகாணத்தின் பிரதான சங்கநாயக்கருமான பெங்கமுவே தம்மதின்ன தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று (05) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு சுட்டிக் காட்டியுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அரசர் காலத்திலிருந்து பருவகாலம் மற்றும் சாதாரண நாட்களில் சிவனொளிபாதமலைக்கு வரும் எந்தவொரு பக்தர்களிடமும் கட்டணம் அறவிடப்படவில்லை. இந்நிலையில் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் சிவனொளிபாதமலைக்கு வழிபாடுகளுக்காக அல்லது சுற்றுலா நிமித்தம் வருகைதரும் தேசிய, சர்வதேச பயணிகளிடம் தற்போது நிதி அறவிட்டு பயணச் சீட்டு விநியோகிப்பது அசாதாரண செயற்பாடாகும்.

பூட்டானிலிருந்து வருகை தந்த சுற்றுலா பயணிகள் சிலர் தனது அனுமதியுடன் நேற்று (05) காலை சிவனொளிபாதமலைக்கு சென்றனர். அவர்களிடம் நல்லதண்ணி சிவனொளிபாதமலை பிரதான வீதியிலுள்ள வனஜீவராசிகள் பாதுகாப்பு அலுவலகத்தில் தலா 5 டொலர் நிதி அறவிடப்பட்டு அதற்கான பயணச்சீட்டும் வழங்கப்பட்டுள்ளதாக அறிகிறேன்.

சிவனொளிபாதமலை இரத்தினபுரி மற்றும் ஹட்டன் வீதியில் பியகெட்டபொல உள்ளிட்ட பக்தர்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதியை அபிவிருத்தி செய்வதற்கு தான் நடவடிக்கை எடுத்திருந்தேன். ஆனால், வனஜீவராசிகள் திணைக்களத்தினால் அதற்கு எந்தவொரு உதவியும் பெற்றுக்கொடுக்கப்பட வில்லை. பருவகாலத்தில் வரும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் சிவனொளிபாதமலைக்கு பிரவேசிக்கக் கட்டணம் அறவிடப்படுவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, பருவகாலத்தில் சிவனொளிபாதமலைக்கு சுற்றுலாவுக்காக வருகை தரும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு பிரயாண சீட்டு விநியோகிப்பதற்கு கடந்த 2022ஆம் ஆண்டு வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப் பட்டதாக நல்லதண்ணி வனஜீவராசிகள் பாதுகாப்பு அலுவலகத்தின் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வர்த்தமானி அறிவித்தலுக்கமைய, நேற்று முன்தினம் (04) காலை முதல் நல்லதண்ணி வீதியினூடாக பயணிக்கும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் 5 டொலரை கட்டணமாகவும் சார்க் அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகளிலிருந்து வரும் பயணிகளிடமிருந்து 4 டொலரையும் அறவீட்டு பிரயாண சீட்டை விநியோகிக்குமாறு தமக்கு வனஜீவராசிகள் திணைக்களத்தின் உயர் அதிகாரியொருவர் ஆலோசனை வழங்கியிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், தேசிய சுற்றுலாப் பயணிகளிடம் 40 ரூபா கட்டணத்தை அறிவிட்டு அவர்களுக்கு பிரயாண சீட்டை விநியோகிக்குமாறும் இந்த பிரயாண சீட்டு விநியோகிக்கும் நடவடிக்கைகளை பருவ காலத்தில் மாத்திரம் முன்னெடுக்குமாறும் தமக்கு மேலும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக அவ்வதிகாரி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 'நாம் 200'நிகழ்வு...

தூதுவர்கள், வெளிநாட்டுப் பிரமுகர்கள் உட்பட பலரும் இந்நிகழ்வில் பங்கேற்பார்கள் எனவும் இதனை ஆட்டம், பாட்டம், கொண்டாட்ட நிகழ்வாக அல்லாமல், மலையக மக்களுக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கான ஒரு நிகழ்வாகவே நடத்தத் திட்டமிட்டுள்ளோம் எனவும் அமைச்சர் கூறினார்.

மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் கடந்துள்ள நிலையில், அம்மக்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவையை பாராட்டியும் அவர்களை கௌரவிக்கும் வகையிலும் நாம் - 200 நிகழ்வின் அறிமுகவிழாவும் சின்னம் வெளியீடும் நேற்று (05) நடைபெற்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டில், பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது,

" நவம்பர் 02 ஆம் திகதிக்கு முன்னதாக காணி உரிமை தொடர்பிலும் சாதகமான பதில் கிடைக்கும் என நம்புகின்றேன். மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை வழங்குவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் தற்போது பெருந்தோட்ட அமைச்சின் கண்காணிப்புக்குச் சென்றுள்ளது. அதன்பின்னர் காணி அமைச்சுக்கு செல்லும். கடைசியாக எனது அமைச்சுக்கு வந்த பின்னர், அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.மலையகப் பெருந்தோட்ட பகுதிகளில் 2 இலட்சத்து 31 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டுப் பிரச்சினை உள்ளன. இதில் 66 ஆயிரம் குடும்பங்கள் அரச வீடு, இந்திய அரசின் வீடு அல்லது சுயமாக வீடுகளை அமைத்துக்கொண்டுள்ளன. எனவே, மீதமுள்ள சுமார் ஒரு இலட்சத்து 76 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகள் அவசியமாகின்றன. அக்குடும்பங்களுக்கு காணியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். சௌமியபூமி எனும் திட்டத்தின் கீழ் காணி சீர்திருத்த ஆணைக்குழு ஊடாக பத்திரம் வழங்க திட்டமிட்டுள்ளோம்.

அதேவேளை, இந்திய அரசின் 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்கான ஒப்பந்தம் இவ்வாரத்துக்குள் கைச்சாத்திடப்படும். முழுமையானதொரு வீட்டுத் திட்டமாக இதனை நிர்மாணிக்க எதிர்பார்க்கின்றோம். நான் வாக்கு வேட்டை அரசியல் நடத்துபவன் கிடையாது. எமக்கு ஒரு இலட்சத்து 76 வீடுகள் தேவை. தற்போது 10 ஆயிரம் தான் உள்ளன. இது விடயத்தில் அரசியல் நடத்தப்படமாட்டாது. முறையான பொறிமுறை வகுக்கப்பட்டுள்ளது. முக்கியத்துவத்தின் அடிப்படையாக முறையாக வீடுகள் கையளிக்கப்படும். பயனாளிகள் பட்டியல் பொது இடத்தில் ஒட்டப்படும். எவருக்காவது ஆட்சேபனை இருந்தால், அரசியல் நடந்திருந்தால் ஆட்சேபனை முன்வைக்கலாம். மேன்முறையீட்டு குழு ஊடாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்"என்றார்.

## வங்கி வைப்பு –கடன்...

அதன்மூலம் பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த வளர்ச்சியை அடைவதை இயலுமைப்படுத்தும் நோக்குடன் சபை இத்தீர்மானத்தை மேற்கொண்டது.

வட்டி வீதங்களைக் குறைப்பதற்கு மத்திய வங்கியினால் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வெளியிடப்பட்ட பணிப்புரைகள் மற்றும் அரச பிணையங்கள் மீதான இடர்நேர்வு மிகையின் குறிப்பிடத்தக்க குறைவு ஏற்பட்டுள்ளது. மேலும், முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட நாணயக்கொள்கையின் குறிப்பிடத்தக்க தளர்வு கிடைக்கப்பெற்றுள்ளது.

அதற்கமைய, கொள்கை வட்டி வீதங்களின் இக்குறைப்பு எதிர்வருகின்ற காலப்பகுதியில் சந்தை வட்டி வீதங்களில் குறிப்பாக, கடன்வழங்கல் வீதங்களில் கீழ்நோக்கிய சீராக்கமொன்றினை துரிதப்படுத்துமென சபை எதிர்பார்க்கின்றது. நாணய நிலைமைகளின் தொடர்ச்சியான தளர்த்தலின் நன்மைகளைத் தனிப்பட்டவர் களுக்கும் வியாபாரங்களுக்கும் போதுமான ளவிலும் விரைவாகவும் ஊடுகடத்துவதுடன் அதன்மூலம் பொருளாதாரத்தின் எதிர்பார்க்கப் படுகின்ற மீளெழுச்சிக்கு ஆதரவளிக்குமாறு நிதியியல் துறை வலியுறுத்தப்படுவதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

## உணவுத் தட்டுப்பாட்டுக்கான...

இந்நிலையில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் முடிந்தளவு வீடுகளில் மரக்கறிச் செய்கை செய்வதற்கான வேலைத்திட்டம் மற்றும் இம்முறை சிறுபோக பயிர்ச்செய்கையின் போது உணவு வகைகளை பயிரிடுவதற்கான வேலைத்திட்டம் என்பவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு கமத் தொழில் அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்கவுக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதேபோன்று சீரற்ற காலநிலை காரணமாக உணவுப் பயிர்களுக்கு ஏற்படும் சேத விபரங்கள் தொடர்பான அறிக்கையை கமத் தொழில் திணைக்களத்தினூடாக உடனடியாக பெற்றுக்கொடுக்குமாறும் அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

அதற்கமைய, தயாரிக்கப்படவுள்ள உணவுப் பயிர்ச்செய்கை திட்டத்தை கமத் தொழில் திணைக்களம் மற்றும் வேளாண்மை அபிவிருத்தி திணைக்களம் என்பன இணைந்து நடைமுறைப்படுத்துமாறும் இதற்காக மேலும் சில நிறுவனங்களை இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் அறிவித் திருக்கிறார்.

எதிர்வரும் சிறுபோகத்தின்போது வறட்சி யுடனான காலநிலை ஏற்படக்கூடும் என்று காலநிலை அவதான பிரிவினால் எதிர்வு கூறப்பட்டுள்ளமையினால் இதுதொடர்பில் கடும் அவதானம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் இந்த கலந்துரையாடலின் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இக்கலந்துரையாடலில் கால்நடை மற்றும் விவசாய திணைக்களம் உட்பட பல நிறுவனங் களின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## கொத்து, ப்ரைட் ரைஸ் தேநீர்...

கொழும்பில் நேற்று (05) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீர், மின் கட்டணங்கள் மற்றும் எரிபொருள் விலை என்பன கடந்த காலங்களில் அதிகரிக்கப் பட்டபோதும் உணவகங்களிலுள்ள உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்கப்படவில்லை. இந்நிலையில் தற்போது சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.இதற்கிணங்க உணவகங்களிலுள்ள உணவுப் பொருட்களின் விலையை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# சிறுவர் பாதுகாப்புக் குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு



இந்நாட்டுச் சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்தும் நோக்கில் ஆய்வொன்றை மேற்கொண்டு பரிந்துரைகளை வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை (03) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

பல்வேறு பிரச்சினைகளிலும் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் முழுமையான நலன்புரிகள் தொடர்பில் பரந்த ஆய்வொன்றை மேற்கொண்டு பரிந்துரைகளை முன்மொழிவதற்காக 2023 ஏப்ரல் 19 ஆம் திகதியன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய மேற்படி குழு நியமிக்கப்பட்டிருந்தது.

விடயத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பில் ஆழமான அறிவு மற்றும் நடைமுறைப் பரிந்துரைகளைத் தயாரிப்பதற்காக சுமார் ஐந்து மாத காலப்பகுதியில் 21 சுற்று கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

நிறுவனச் சூழல், பெற்றோரின் அரவணைப்பின்மை, குடும்பப் பிரச்சினைகள், சமூக ஊடக பாவனை, சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்தல் உள்ளிட்ட பிரச்சினைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் பரந்தளவிலான விடயப்பரப்பு தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

அதேபோல், நவீன சமூகத்தின் தேவைகளை நிவர்த்திப்பதை இலக்காகக் கொண்டு சிறுவர் பாதுகாப்புக்காக இயங்கும் நிறுவனங்கள், நிர்வாகங்கள் மற்றும் சட்டப் பாதுகாப்பின் போதுமான தன்மை தொடர்பில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

மேலும் பல்வேறு விதமான வன்முறைகள், துஷ்பிரயோகங்கள் மற்றும் அநாதரவாக விடப்பட்ட சிறுவர்களின் உடல், உளச் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள் மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதனூடாக சிறுவர்கள் வன்முறைகளில் ஈடுபடும் தன்மை தொடர்பில் கவனஞ்செலுத்தி சிறுவர் பாதுகாப்புக்கு அவசியமான சமூக பங்களிப்பு தொடர்பிலான புதிய பிரவேசங்கள் பற்றிய விடயங்களும் ஆராயப்பட்டுள்ளன.

மேலும், குற்றச்சாட்டுகளுக்கு இலக்கான சிறுவர் சீர்திருத்த இல்லங்கள் மற்றும் மத்திய நிலையங்கள், அரசாங்கத்தின் அனுமதி பெற்ற விஷேட பாடசாலைகளில் இருக்கும் மாணவர்களை சாதகமான முறையில் சமூகமயப்படுத்தும் நோக்கில் " நலனூக்க புனர்வாழ்வு செயன்முறை'' தொடர்பிலும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மின் விசிறியில் தலை மோதுண்டு மாணவன் உயிரிழப்பு

## விசாரணை செய்யுமாறு மக்கள் ஆர்ப்பாட்டம்

கலஹா செய்தியாளர்



புஸ்ஸல்லாவ இந்து தேசிய பாடசாலை மாணவன் ஒருவன் பாடசாலையின் வகுப்பறையில் பொருத்தப்பட்டிருந்த மின் விசிறியில் தலை மோதுண்டதில் உயிரிழந்துள்ளதாக புஸ்ஸல்லாவ பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவனின் மரணத்திற்கு பக்கச்சார்பற்ற விசாரணையை கோரி நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் நேற்று (5) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை பாடசாலைக்கு முன்பாக ஒன்றுகூடிய பொது மக்கள் பாடசாலை அதிபரை பதிவி நீக்கம் செய்யுமாறும் சிறுவன் உயிரிழந்தமைக்கு விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போது வலயக்கல்வி பணிப்பாளர் நிஹால் அழகக்கோன், பொலிஸ் அதிகாரிகள் பாடசாலையை தற்காலிகமாக மூடியுள்ளதுடன் விசாரணையை முன்னெடுப்பதாகவும் உறுதியளித்ததையடுத்து

ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். ஆனாலும் அங்கிருந்து ஊர்வலமாக புஸ்சல்லாவ வகுக்கப்பிட்டிய வைத்தியசாலைக்கு சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு உரிய நேரத்தில் சிகிச்சையளிக்க தவறிய வைத்தியருக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதா வது,

குறித்த பாடசாலையில் தரம் 10 இல் கல்வி பயிலும் புபுரஸ்ஸ டெல்டா டேசன் தோட்டத் தைச் சேர்ந்த இராஜரத்தினம் விதுசன் என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

மேற்படி பாடசாலையில் நேற்று முந்தினம் (04) புதன்கிழமை உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மைதானத்தில் சிறுவர் தின நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. இந் நிகழ்வில் கலந்துகொண்ட குறித்த மாணவன் மாலை இரண்டு மணியளவில் வகுப்பறைக்குச் சென்று சக மாணவர்களுடன் நடனமாடியதாகவும் இதன் போது உயிரிழந்த மாணவன் மேசை மீது ஏறி ஆடிய சந்தர்ப்பத்தில் சக மாணவன் ஒருவன் மின் விசிறியை இயக்கியதால் மின் விசிறி தலையில் பட்டு காயமடைந்துள்ளார்.

பின்னர் மாணவன் புஸ்ஸல்லாவ வெளக்கப்பிட்டி கிராமிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி மாலை உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவனின் பெற்றோரும் பாடசாலை அபிவிருத்திக் குழுவைச் சேர்ந்த சிலரும் சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

விபத்து இடம்பெற்ற உடனே மாணவனை முச்சக்கர வண்டியிலாவது கம்பளை வைத்தியசாலைக்கு கொண்டுசென்றிருந்தால் காப்பாற்றியிருக்கலாம்.

விபத்து இடம்பெற்று 15 நிமிடத்தில் வெளக்கப்பிட்டி கிராமிய வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அங்கு அம்பியூலன்ஸ் சாரதி லீவு பெற்றிருந்ததால் பன்விலதென்னை வைத்திய சாலையிலிருந்து அம்பியூலன்ஸ் மூலம் வரவழைக்கப்பட்டு கம்பளை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல ஒரு மணித்தியாலத்திற்கு மேல் காலதாமதமாகியுள்ளது. அப்பொழுது மாணவனின் தலையிலிருந்து இரத்தம் அதிகம் வெளியேறியதன் காரணமாகவே உயிரிழந்திருக்கலாம் என அவர்கள் குற்றஞ்சாட்டுவதோடு பாடசாலையில் நிலவும் சில குறைபாடுகளையும் சுட்டிக்காட்டினர்.

இச்சம்பவம் இடம்பெற்றபோது அங்கு பொதுமக்கள் ஒன்று கூடியதால் பதற்றமான சூழல் ஏற்பட்டதையடுத்து புஸ்ஸல்லாவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இந்திக ஹேமகுமார தலைமையிலான பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புஸ்ஸல்லாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 19 ம் நாள் வெள்ளிக்கிழமை**

மேஷம்: பராக்கிரமத்தால் அனைத்தையும் வெற்றி கொள்ளும் நாள், கடன் நிவாரணம் மற்றும் நண்பர் உதவியும் உண்டு.

ரிஷபம்: கொடுக்கல் வாங்களின்போது கவனமாக இல்லாவிட்டால் நட்டம் அல்லது இழப்பு ஏற்படும். வாயை பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்.

மிதுனம்: உடல்,மன நலத்தில் அதிக அக்கரை காட்டுங்கள், உங்கள் பெயர் அல்லது கௌரவம் கெட்டுப போகும் செயல்களில் ஈடுபடாதீர்கள்.

கடகம்: வீண் விரயங்களால் நட்டங்கள், இழப்புகள் தோன்றும், தொலை தூரப் பயணங்களால் உடல் அசதி உண்டு

சிம்மம்: எதிர்ப்பாராத தன,பொருள் வரவுகளால் மகிழ்ச்சி, வெளிநாட்டு அல்லது வெளியிட உதவிகள், நன்மைகள் உண்டு.

கன்னி: நீங்கள் விரும்பிய தொழில் அல்லது இடமாற்றங்கள் இன்று ஏற்படும், பாவத்துவமான விடயங்களில் ஈடுபட வேண்டாம்.

துலாம்: பெரியோர், குருவின் ஆசிவாதங்கள் கிடைக்கப்பொறுவீர்கள். ஆலய வழிபாடு அல்லது திருப்பணிகளில் ஈடுபடுவீர்கள்.

விருச்சிகம்: முயற்சிகளில் தோல்வியும், அவமானமும் ஏற்படலாம். உங்கள் பணம் பொருள் நட்டமாகலாம்.

தனுசு: அரச வகையில் சில சங்கடங்கள் உருவாகலாம், பொருமை, மற்றும் அவசரமாற்ற தன்மையோடு செயல்படுங்கள்.

மகரம்: தொழில்,வியாபார மேன்மை, லாபம் உண்டு, எதிரிகள் கீழ்படிந்து நடந்து கொள்வார்கள், நோய் கவனம்.

கும்பம்: புத்திர வகையில் சில செலவுகள், அல்லது கவலைகள் உண்டு, வயிறு சம்பந்தப்பட்ட சில உபாதைகளால் அவதி.

மீனம்: தாயால் கவலைகள், அல்லது செலவுகள் ஏற்படும், வீடு, வாகன மாற்றங்கள், சிக்கல்கள் உண்டு.

| | |
|---|---|
| **திதி** | :சப்தமி மு.ப.6.35 வரை பின் அஷ்டமி |
| **நட்சத்திரம்** | :திருவாதிரை பி.ப.9.31 வரை புனர்பூசம் |
| **யோகம்** | :சித்த யோகம் பி.ப.9.31 வரை பின் மரண யோகம் |
| **வார சூலை** | :மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்** | :மு.ப. 5.58 – 6.58 மணி வரை |
| **ராகு காலம்** | :10.28 – 11.58 மணி வரை |
| **எமகண்டம்** | :2.58 - 4.28 மணி வரை |
| **குளிகை** | :7.28 – 8.58 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | :விருச்சிக ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| **தன அதிஷ்டம்** | : மிருகசீரிடம்,சித்திரை, அவிட்டம் (பிறந்தவர்களுக்கு) |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# பொலிஸ் ஓய்வறையில் மரணமான சார்ஜன்ட் ஹனீபா தொடர்பில் நீதியை நிலைநாட்டவும்

## ரிஷாட் பதியுதீன் எம்.பி. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் வேண்டுகோள்



பொலொன்னறுவை, வெலிக்கந்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய ஏறாவூரைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் முஹம்மது மக்பூல் ஹனீபாவின் மரணம் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுத்து, நீதியை நிலைநாட்டுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பொலிஸ் மாஅதிபர் சீ.டி.விக்ரமரத்ன ஆகியோருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் எமது கட்சியின் உயர்பீட உறுப்பினருமான எம்.எஸ்.சுபைர் முன்வைத்த வேண்டுகோளுக்கிணங்க என்னிடம் கேட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்படுள்ளதாவது,

கடமை செய்யும் தமது பொலிஸ் நிலைய வளாகத்தில் அமைந்துள்ள பொலிஸாரின் விடுதியில் வைத்து இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளமையானது நீதியை நிலைநாட்டும் பொலிஸாருக்கே இந்த நிலையா எனக் கேட்கத் தோன்றுகின்றது.

நாட்டின் தற்போதைய நிலையில், காவல்துறையினர் மீது பொதுமக்கள் கொண்டுள்ள சந்தேகங்களுக்கு மத்தியில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் இருக்கும் சிறுபான்மை காவல்துறை அதிகாரிகளுக்கு இழைக்கப்படும் இவ்வாறான கொடூரங்கள் நிறுத்தப்படல் வேண்டும் என்பது மட்டுமல்லாது, இப்படிப்பட்ட ஈனச்செயல்களைச் செய்பவர்கள் எவராக இருந்தாலும் தராதரம் பாராது சட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராகிய தங்களது கடமையாகும்.

இவ்வாறான சம்பவங்களின் பின்னணியில் இருக்கும் திட்டம் தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியம் என்றும் அவர் இந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# உடப்பு ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயத்தில் இன்று வேள்விப் பொங்கல்

உடப்பு நிருபர்



வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த உடப்பு ஸ்ரீ வீரபத்திர காளியம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் இன்று வெள்ளிக்கிழமை (6) வேள்விப் பொங்கல் நடைபெறும்.

கடந்த 27ஆம் திகதி கும்பம் பாலித்தல் நிகழ்வு நடைபெற்றதுடன், பூஜைகள் இரவு பகலாக நடைபெற்று வந்தன.வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்த ஆலயத்தில் வருடா வருடம் கடல் நீரில் விளக்கு எரிவது பக்தி பூர்வத்தைப் பறைசாற்றும் ஒரு நிகழ்வாகும்.இன்று மஞ்சள் நீராடல் , பக்தர்கள் பொங்கல் செய்தல்,கும்மியடித்தல், முளைக் கொட்டுதல் அன்னதானம் போன்றவை நடைபெறும். அத்துடன், மாலை வேளை அருகிலுள்ள சமுத்திரத்தில் கும்பம் சொரிதல் நடைபெற்று கரைவலை தொழிலாளர்கள் சனிக்கிழமை தமது தொழிலை ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதுக்கடை நீதிமன்றம் முன்னும் பாரிய போராட்டம் நடத்துவோம்

## சட்டத்தரணி பத்திநாதர் அன்ரன் புனிதநாயகம் தெரிவிப்பு



நீதிபதிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்களைக் கண்டித்து வடக்கு, கிழக்கு சட்டத்தரணிகள் போராட்டங்களில் ஈடுபட்டு வருவதுடன் கொழும்பு சட்டத்தரணிகளும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

எதிர்வரும் ஒன்பதாம் திகதி கொழும்பு புதுக்கடை நீதிமன்றத் தொகுதிக்கு முன் சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து பாரிய கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ள உள்ளோம் என வன்னி வலயச் சட்டத்தரணிகள் சங்கத் தலைவரும் இலங்கை சட்டத்தரணிகள் சங்க நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான பத்திநாதர் அன்ரன் புனிதநாயகம் தெரிவித்தார்.

நீதிபதிக்காக நீதி கேட்டு நடைபெறும் போராட்டங்களில் சட்டத்தரணிகள் என்ற வகையில் எமது வேலைகளை பகிஷ்கரித்து ஆதரவை வழங்குவோம்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நீதிபதி சரவணராஜாவுக்கு நீதி கேட்டு ஏற்பாடு செய்யப்பட்ட மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு நீதிபதிக்காக நீதி கேட்டு இடம்பெறும் போராட்டங்களில் பொது அமைப்புகளும் மக்களும் கலந்துகொண்டு ஆதரவை வழங்க வேண்டும் - என்றார்.

# ராகு – கேது மாற்ற நவக்கிரக யாகம்

வத்தளை, ஹுணுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமரன் ஆலய ராகு – கேது மாற்ற நவக்கிரக யாக விஞ்ஞாபனம் நாளை மறுதினம் 08 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

ராகு – கேது மாற்றத்தை முன்னிட்டு ஏற்படுகின்ற தோஷங்கள் நீங்கவேண்டியும் தீமையான பலன்கள் நீங்கி நற்பலன்கள் ஏற்படவேண்டியுமே அன்றைய தினம் நவக்கிரக நாயகர்களுக்கு விஷேட மஹா யாகம் நடைபெறவுள்ளது.

இதற்கான பூஜைகள் காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும். இதேவேளை, ராகு கேதுவின் சஞ்சார பலன் எல்லா ராசிகளுக்கும் உள்ளபடியால் தோஷங்கள் நீங்க - இடையூறுகள் நீங்கி சமாதானம் நிலவ இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவராக சாலிய விக்ரமசூரிய நியமனம்





இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் (CPC) மற்றும் சிலோன் பெட்ரோலியம் சேமிப்பு முனையங்கள் லிமிட்டெட் (CPSTL) ஆகியவற்றின் புதிய தலைவராக சாலிய விக்ரமசூரிய நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

CPC இன் முகாமைத்துவப் பணிப்பாளர் தர்ஷன ரத்நாயக்க CPSTL இன் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

CPC மற்றும் CPSTL ஆகியவற்றின் தலைவராக கடமையாற்றிய மொஹமட் உவைஸ் மொஹமட் பதவி விலகியதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு சாலிய விக்ரமசூரிய நேற்று புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# திரிபோஷா உற்பத்தி தொடர்பில் முழுமையான அறிக்கையை தயாரிக்குமாறு அரசாங்க நிதி பற்றிய குழுவில் பரிந்துரை

சோளம் இறக்குமதி மற்றும் திரிபோஷா உற்பத்தி தொடர்பில் முழுமையான அறிக்கையைத் தயாரிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அரசாங்க நிதி பற்றிய குழுவினால் பணிப்புரை விடுக்கப்பட்டது. அத்துடன், பல வருடங்களாக உற்பத்தி இலக்கைவிட குறைந்தளவே உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ.டி சில்வா தலைமையில் (03) கூடியபோதே இவ்விடயம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதேநேரம், கேள்விக்கு ஏற்றவகையில் போதுமானளவு திரிபோஷாவைத் தயாரிப்பதற்குத் தேவையான மாற்றங்களை முன்மொழிவது தொடர்பில் நீண்டநேரம் கலந்துரையாடப்பட வேண்டி இருப்பதால் சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரும் அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு அழைக்கப்படுவார்கள் எனக் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

2023 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதிய 2332/ 14 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் திரிபோஷா தயாரிப்புக்கான சோளத்தை இறக்குமதி செய்யும் போது ஒரு கிலோவிற்கு ஏற்புடையதான 75 ரூபா விஷேட வியாபாரப் பண்ட அறவீடு 25 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருந்தது.

இந்தக் குறைப்பு மே மாதம் 18ஆம் திகதி முதல் தொடங்கும் ஒருவருட காலத்திற்கு இந்தக் கட்டளை செல்லுபடியாகும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும் புதிய வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக இந்தக் காலம் இரத்துச் செய்யப்பட்டிருப்பதுடன், இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ சோளத்திற்கான விஷேட வியாபாரப் பண்ட அறவீடு 75 ரூபாவாகக் காணப்படும்.

இந்த விடயம் குறித்துக் குழுவில் நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டதுடன், அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விடயம் பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், மற்றுமொரு வர்த்தமானி அறிவித்தலின் மூலம் முன்னர் வெளியிடப்பட்ட கட்டளையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பது சிக்கலுக்குரியது எனக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ.டி.சில்வா தெரிவித்தார்.

# வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்து ஒருவர் உயிரிழப்பு

காலி,வெலிவத்தை பிரதேசத்தில் வீடொன்றின் மீது பாரிய மண்மேடொன்று சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக காலி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று(05) இடம்பெற்றுள்ளது.

வெலிவத்தை, விஜயானந்த மாவத்தையைச் சேர்ந்த அமரசேன விஜேசிங்க (78 வயது) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். அவர் வீட்டில் இருந்தபோது, கற்களுடன் கூடிய மண் மேடு சரிந்து விழுந்துள்ளது. இதன்போது அவர் மண்மேட்டுக்குள் சிக்குண்டு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் இறந்தவரின் குடும்பத்தினர் பலர் வீட்டில் இருந்தபோதும் அவர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படவில்லை.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஒக்டோபர் 06ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# மோடியுடன் மோதும் எடப்பாடி!

தமிழ்நாட்டில் கடந்த நான்கரை ஆண்டுகளாக நீடித்துவந்த அ.தி.மு.க. - பா.ஜ.க. இடையேயான கூட்டணி முடிவுக்கு வந்திருக்கிறது.

அ.தி.மு.க. தலைவர்கள் - பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை இடையே இரண்டரை ஆண்டுகளாக நீடித்த உரசல்கள், விமர்சனங்கள், கருத்து மோதல்கள் போன்றவற்றைக் காரணங்காட்டி, பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து வெளியேறுவதாக அறிவித்திருக்கிறது அ.தி.மு.க. மக்களவைத் தேர்தலுக்கு இன்னும் 8 மாதங்களே உள்ள நிலையில், அ.தி.மு.கவின் இந்த விலகல் உறுதியானதா என்னும் விஸ்வரூபக் கேள்வி எழுந்திருப்பதில் வியப்பில்லை.

அ.தி.மு.க. - பா.ஜ.க. இடையே இவ்வளவு ஆண்டுகள் கூட்டணி நீடித்ததே பெரும் சாதனைதான். ஏனெனில், ஜெயலலிதாவின் காலத்தில், 1998, 2004 ஆகிய ஆண்டுகளில் இக்கட்சிகள் இடையே அமைந்த கூட்டணியின் ஆயுள் சொற்ப காலமே நீடித்தது. 2019இல் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி மலர்வதற்கு முன்பாக, 2016இல் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது முதல் அ.தி.மு.க. மீது பா.ஜ.கவின் நிழல் படர்ந்தது.

அதற்கேற்ப பா.ஜ.க. தேசிய தலைமைக்குத் தம்மை நெருக்கமாகக் காண்பித்துக்கொள்ளும் போட்டி மனப்பான்மையில் அ.தி.மு.க. தலைவர்கள் மூழ்கிக் கிடந்தனர். அதேநேரம் பா.ஜ.க. மாநிலத் தலைவராக அண்ணாமலை நியமிக்கப்பட்டது முதல் அவரும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியும் தண்ணீரும் எண்ணெயுமாக இருந்தனர். அதன் நீட்சியாக நீண்ட தூக்கத்திலிருந்து விழிப்பதுபோல் இப்போது பா.ஜ.க. கூட்டணியை உதறித் தள்ளி வெளியேறியிருக்கிறது அ.தி.மு.க.

எனினும், பா.ஜ.க. கூட்டணியிலிருந்து அ.தி.மு.க. விலகுவதாகச் சொன்னதற்கான காரணம் உண்மையிலேயே சற்று விசித்திரமானது. பா.ஜ.கவின் தேசிய தலைவர்களோடு அ.தி.மு.க. தலைவர்களுக்கு எந்த மோதலும் இல்லை. தமிழ்நாடு பா.ஜ.க. மாநிலத் தலைவரான அண்ணாமலைதான் அ.தி.மு.கவுக்கு உள்ள ஒரே பிரச்சினை என்று பிரிவை அறிவிக்கும் அ.தி.மு.கவின் அறிக்கையிலேயே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

அறிஞர் அண்ணா, ஜெயலலிதா உள்ளிட்ட முன்னோடித் தலைவர்களை அண்ணாமலை விமர்சித்தார், எடப்பாடி பழனிசாமியைச் சிறுமைப்படுத்தினார் என்பன போன்றவையே காரணங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. என்றாலும், இக்கூட்டணி முறிவுக்கு வேறு சில வலுவான காரணங்களும் இருப்பதாக சொல்லப்படுகிறது.

கூட்டணி என்பதே பரஸ்பரப் புரிதலோடு இயங்குவதுதான். ஒன்றை விட்டு ஒன்றைப் பெறுவதுதான். ஆனால், அ.தி.மு.க. தலைவர்களைக் கோபங்கொள்ள வைத்திருப்பது, தமிழ்நாட்டில் ஆட்சியமைப்பது தொடர்பாக அண்ணாமலை முன்வைக்கும் கருத்துகள். தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஆட்சியமைக்கும் என்று பேசுவதற்கோ, அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கோ அண்ணாமலைக்கு உரிமை உண்டு. ஆனால், அது எல்லாமே தனித்துச் செயல்படும்போது மட்டுமே சாத்தியம்.

முன்பு தேசிய கட்சியான காங்கிரஸுடன் அ.தி.மு.க. பல முறை கூட்டணி கண்டிருக்கிறது. மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு அ.தி.மு.க. உதவுவது; மாநிலத்தில் அ.தி.மு.க. ஆட்சிக்குக் காங்கிரஸ் உதவுவது என்ற புரிதலோடுதான் கூட்டணியின் செயற்பாடுகள் அமைந்தன. கடந்த 20 ஆண்டுகளாக நீடிக்கும் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியும் அதே வகையான புரிதலோடுதான் தொடர்கிறது.

ற்போது அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியில் இது தலைகீழாக இருப்பதுதான் முரண். மோடியை மூன்றாவது முறையாகப் பிரதமராக்க உழைப்போம் என்று அ.தி.மு.க. தலைவர்கள் பேசும்போது, "எடப்பாடி பழனிசாமியைத் தமிழ்நாட்டின் முதல்வராக்குவோம் என்று நான் கூற முடியாது. நிச்சயமாக பா.ஜ.க. 2026இல் தமிழ்நாட்டில் ஆட்சியமைக்கும்" என்று அண்ணாமலை அறிவித்தால், அங்கு கூட்டணிக் கட்சிகளுக்கு இருக்கவேண்டிய பரஸ்பர புரிதல் அடிபட்டுப் போகாதா? எனில், மாநிலத்தில் ஆட்சியமைக்கும் போட்டியில் அ.தி.மு.க., பா.ஜ.க. தனித்தனியாகக் களமிறங்குவதே உசிதம். அதைத்தான் அ.தி.மு.க. செய்திருப்பதாகக் கருத இடமுண்டு.

அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி முறிந்துவிட்டதாக அ.தி.மு.க. அறிவித்துவிட்டாலும், அரசியல் அரங்கிலும் பொதுவெளியிலும் அது சந்தேகக் கண்ணோடுதான் அணுகப்படுகிறது. ஏனெனில், கூட்டணியின் பிரச்சினையாக அண்ணாமலைதான் உருவகப்படுத்தப்பட்டிருக்கிறார். ஒருவேளை, அண்ணாமலையை பா.ஜ.க. தேசிய தலைமை மாற்றிவிட்டால் அல்லது அ.தி.மு.கவுக்கு எதிராக எதுவும் பேசக்கூடாது என்று கட்டுப்பாடுகளை அவருக்கு விதித்துவிட்டால், அ.தி.மு.கவின் நிலைப்பாடு என்ன? அப்படி நடந்தால் பா.ஜ.கவோடு அ.தி.மு.க. மீண்டும் கூட்டணியை ஏற்படுத்துமா? பிரதமர் மோடியோ உள்துறை அமைச்சர் அமித் ஷாவோ எடப்பாடி பழனிசாமியைச் சமாதானம் செய்தால், அப்போதும் அ.தி.மு.க. தன்னுடைய முடிவில் உறுதியாக இருக்குமா? இதுபோன்ற கேள்விகள் தற்போது அ.தி.மு.கவைத் துரத்துகின்றன. அதேநேரம், எடப்பாடி பழனிசாமி டில்லியில் அமித் ஷாவைச் சந்தித்துவிட்டு வந்த பிறகுதான் இந்தக் கூட்டணி முறிவு அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மறந்துவிட முடியாது.

கூட்டணி முறிந்தது முறிந்ததுதான் என்பதில் உறுதியாக இருந்து, தனது தலைமையில் எடப்பாடி பழனிசாமி புதியதொரு கூட்டணியை அமைத்து, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திப்பாரேயானால், 'அடிமை அ.தி.மு.க.' என்று இனிமேல் எக்காலத்திலும் திமுகவால் கேலி பேச முடியாது. எவ்வாறாயினும் அரசியலில் அதிரடியாக எடுக்கப்படும் தீர்மானங்களும் மக்களின் ஆதரவைப் பெற உதவும். எடப்பாடியின் இந்த துணிச்சல் அரசியல் பின்னணியுடன் செய்யப்பட்ட காய்நகர்த்தலா அல்லது துணிந்து வருவது வரட்டும் என்று எடுக்கப்பட்ட முடிவா என்பதை காலம் சொல்லும். காத்திருப்போம்.

## இன்றைய நாளில்...

- ★ 1847 – அமெரிக்க மதப்பரப்புனரும், மருத்துவருமான சாமுவேல் பிஸ்க் கிறீன் பருத்தித்துறையை வந்தடைந்தார்.
- ★ 1889 – தான்சானியாவின் கிளிமஞ்சாரோ மலையின் உச்சி முதன்முதலில் எட்டப்பட்டது.
- ★ 1890 – யாழ்ப்பாண நகரில் "சின்னக்கடை" எனப்படும் முக்கிய சந்தையில் கடைத்தொகுதி ஒன்று இடிந்து வீழ்ந்ததில் சில உயிரிழப்புகளுடன், பலர் படுகாயமடைந்தனர்.
- ★ 1976 – தாய்லாந்தில் அரசுக்கெதிராக இடம்பெற்ற மாணவர் போராட்டம் இராணுவத்தினரால் நசுக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- ★ 1977 – மிக்-29 வானூர்தி தனது முதலாவது பறப்பை மேற்கொண்டது.
- ★ 1979 – திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் வெள்ளை மாளிகைக்குச் சென்ற முதலாவது திருத்தந்தை என்ற பெயரைப் பெற்றார்.
- ★ 1981 – எகிப்திய அரச தலைவர் அன்வர் சாதாத் இஸ்லாமியத் தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டார்.
- ★ 1987 – பிஜி குடியரசாகியது.
- ★ 1995 – வேறொரு சூரியனை சுற்றிவரும் முதலாவது கோள் 51 பெகாசி பி கண்டுபிடிக்கப்பட்டது.
- ★ 2008 – அநுராதபுரம் குண்டுவெடிப்பு: தற்கொலைக் குண்டுவெடிப்பில் இலங்கையின் இராணுவத் தளபதி ஜானக பெரேரா உட்பட 27 பேர் கொல்லப்பட்டனர்.
- ★ 2010 – இன்ஸ்டாகிராம் ஆரம்பிக்கப்பட்டது.



# அரபுக் கலாசாலைகளுக்கான பொதுவான பாடத்திட்டத்தைத் தயாரிப்பதில் இழுபறி!

## மு.கா. தலைவர் ஹக்கீம் தெரிவிப்பு





**குருநாகல், கெகுணுகொல்ல, நஹ்ஜத்துல் இர்பானிய்யா அரபுக் கல்லூரியின் பொதுப் பட்டமளிப்பு விழா கடந்த சனிக்கிழமை கெகுணுகொல்ல தேசிய கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அந்நிகழ்வில் விசேட அதிதியாக கலந்துகொண்டு அவர் ஆற்றிய உரை.**

நாட்டில் அரபுக் கலாசாலை களுக்கான பொதுவான பாடத்திட்டத்தைத் தயாரிப்பது சில காரணிகளால் நீண்டகாலமாக இழுபறியில் இருந்துவருவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக மு.கா. தலைவர் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது,

கெகுணுகொல்ல என்ற இக்கிராமத்தில் கடந்த இரண்டு தசாப்தங்களாக எந்த ஆரவாரமும் ஆர்ப்பாட்டமும் இல்லாமல் ஒரு அமைதிப் புரட்சி நடந்து கொண்டிருக்கின்றது. இந்த அமைதிப் புரட்சியை தூரத்தே நின்று பார்த்துக்கொண்டிருக்கின்ற ஓர் அரசியல்வாதியாகப் பெருமைப் படுகின்றேன்.

இந்த நாட்டின் கல்வி மறுமலர்ச்சியில் தன்னார்வ அமைப்புகள் எப்படியெல்லாம் பங்காற்றலாம் என்பதற்கு நஹ்ஜத்துல் இர்பானிய்யா அரபுக் கல்லூரி, எஸ்டா அமைப்பு, கெகுணுகொல்ல தேசிய பாடசாலை ஆகிய இந்த மூன்று அமைப்புகளும் மிகப்பாரிய இமாலய சாதனையொன்றை படைத்துக் கொண்டிருக்கின்றன. இதைத்தான் நான் எந்த ஆர்ப்பாட்டமும் ஆரவாரமும் இல்லாத அமைதிப் புரட்சி என்று சொன்னேன்.

இந்த ஊரைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் இந்த நன்மை சென்றடையாது, இந்நாட்டிலுள்ள அனைத்துப் பிரதேசங்களுக்கும் இதன் நன்மை சென்றடைகின்றது. அதாவது, ஐந்தில் ஒரு பங்கினரே இந்த ஊரைச் சேர்ந்தவர்கள். மிகுதி ஐந்தில் நான்கு பங்கினர் நாடு முழுவதிலும் இருக்கின்ற மாணவர்களுக்கு பெரிய அரிய வாய்ப்பைப் பெற்றுத் தருகின்ற கலங்கரைவிளக்கமாக இந்த ஊர் மாறியிருக்கின்றது என்பது உண்மையில் ஓர் ஆச்சரியத்துக்குரிய ஒரு விடயமாகும். இதை முன்மாதிரியாகக்கொண்டு எல்லா இடங்களிலும் செய்து பார்க்கலாம் என்ற முயற்சிகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனவே, இதன் முன்னோடிகளை, இதற்காக பங்களிப்புச் செய்பவர்களை பாராட்டாமல் இருக்க முடியாது. எல்லாவற்றுக்கும் அரசாங்கத்தையே நம்பியிருக்கின்ற ஒரு சமூகமாக இந்தச் சமூகம் இருக்கத் தேவையில்லை என்பதற்கு இது சிறந்த முன்மாதிரியாகும்.

பேராசிரியர் அஷ்ஷெய்க் மஸாஹிர் உரையாற்றும்போது, மத்ரஸாக்கள், அரபு கலாசாலைகளின் எதிர்கால செயற்றிட்டங்கள் எப்படி அமைய வேண்டும்; கற்பித்தல் முறைகளில் என்ன மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும்; நிர்வாகத்துக்கு வருபவர்களின் குணாம்சங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற கருத்துகளை உங்கள் மத்தியில் பகிர்ந்துகொண்டார்.

உயர் கல்விப் பரப்பில் செய்யவேண்டிய அவசியமான மாற்றங்களைப் பரிந்துரை செய்வதற்காக ஜனாதிபதி அண்மையில் பாராளுமன்றத்தில் ஒரு தெரிவுக்குழுவை அமைத்தபோது, அதில் நானும் சில காலம் உயர்கல்வி அமைச்சராகப் பதவி வகித்தேன் என்பதனால் அதில் பங்கேற்கும் வாய்ப்புக் கிடைத்தது.

புரட்சிகரமான மாற்றங்கள் இல்லாமல் பல்கலைக்கழகத் திட்டங்களிலும் மாற்றங்கள் வருவதற்கு இயலாது என்பதற்காக நிறைய புதிய உபாயங்கள் அண்டைய நாடுகளிலும் பிராந்தியத்திலும் இருக்கின்ற பல மாற்றங்களை உள்வாங்கி நாங்கள் பரிந்துரை செய்தோம்.

அதில் மிக முக்கியமான விடயம், பல்கலைக்கழக படிப்பு அரசதுறை அப்படியே இருக்கத்தக்கதாக தனியார் துறைக்கும் விஸ்தரிக்கப்படவேண்டும் என்பதாகும். அரச அனுசரணையோடு தனியார் துறையையும் உள்வாங்குவதற்கு அரசாங்கம் மானிய அடிப்படையில் காணிகளையும் வழங்கவேண்டும். தனியார் பல்கலைக்கழகங்களைத் தாராளமாக, தரமானவையாக நிறுவி, வெளிநாட்டு முதலீடுகளுக்கு வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்றெல்லாம் பல விடயங்களைப் பரிந்துரை செய்தோம்.

இந்தத் தன்னார்வ நிறுவனங்கள் செய்கின்ற இந்த பாரிய புரட்சிகரமான மாற்றத்துக்கு வழிகோலிய பல விடயங்கள் இருக்கின்றன. இதற்கு பிறகு பல சாவால்கள் வரலாம். மாற்றுச் சமூகங்களில் பிரபலமான கலாசாலைகளில் தங்களின் பங்கைப் பறித்துக்கொண்டு போகின்றார்களா என்ற மாதிரியான ஒரு பிரமையோடு இதில் தலையிடுவதற்கும் பல முயற்சிகள் நடக்கும். அதில் ஈடுபடுவதற்கு தனியாக உங்களால் மட்டும் முடியாது. ஆகவே, அரசியல்வாதிகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். நாங்களும் எங்களின் பங்களிப்பைச் செய்வோம்.

இங்கு நடக்கின்ற இந்த விடயத்துக்கு நாங்கள் எதுவுமே செய்யவில்லை. இது தன்னார்வமாக நடந்தேறிய மிகப்பெரிய புரட்சியாகும். இந்தப் புரட்சியை எப்படி மற்ற இடங்களில் பதிலீடு செய்யலாம் என்பதை பற்றி சிந்திப்பதும் அதற்கான உந்துதலை தருவதும்தான் எங்களால் செய்யக்கூடிய விடயமாகும்.

நான் இரண்டு தடவைகள் முஸ்லிம் சமய விவகார அமைச்சராகப் பதவி வகித்த காலங்களில், முஸ்லிம் சமய, கலாசார திணைக்களத்துக்கும் பொறுப்பாக இருந்திருக்கின்றேன். அக்காலகட்டத்தில் அரபு மத்ரஸாக்கள், அரபு கலாசாலைகளுக்கு என்று ஒரு பாடத்திட்டத்தை அமைப்பதே பல வருடகாலம் இழுபறியில் இருந்தது. அது இயக்க ரீதியிலான பிரச்சினை. முன்னாள் அதிபர் பேசும்போது, இயக்க ரீதியிலான தாக்கத்திலிருந்து விடுபட்டு, இதை ஒரு பொதுவான கொள்கைப்போக்கில் கொண்டுசெல்வது என்பதற்கான வழிமுறைகளைக் கையாள்வோம் என்பதைப் பற்றி கூறினார்.

என்னைப் பொறுத்தமட்டில் இந்தப் புரட்சிகரமான மாற்றங்களோடு சேர்த்து கல்வி செயற்பாடுகளில் வருகிற மாற்றங்களை உள்வாங்குவதற்கு பேராசிரியர் அஷ்ஷெய்க் மஸாஹிர் பேசுகின்றபோதும் மிகத் தெளிவாக திட்டவரைவுகளைப் பற்றி பேசினார்.

தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால், அங்கு தனியார் முயற்சியால் நடத்துகின்ற பல்கலைக்கழகங்கள் என்பன ஏராளமாக வக்பு சொத்துகளாக - நம்பிக்கை பொறுப்புகளாக நடைபெறுவதைப்போல் இங்கும் அதே அமைப்புகளைப்போன்று அமைப்பதற்கு நாங்கள் மாதிரி அமைப்புகளை பரிந்துரை செய்திருக்கின்றோம்.

இந்த நாட்டில் மிகப்பெரும் கல்வி மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு இந்த ஊர் வழிகோலியிருக்கிறது என்பது குறித்து இந்த ஊரைப் பாராட்டுகின்ற அதேநேரம், இதற்கு முன்னோடியாக இருந்தவர்களை இறைவன் பொருந்திக்கொள்ள வேண்டும். இன்று பட்டம் பெற்று வெளியேறுகின்ற மாணவர்களுக்கு வாழ்த்துகளையும் தெரிவிக்கிறேன் - என்றார்.

# வாய்ப்பைப் பயன்படுத்தும் வங்கதேசம்...

அ. அரவிந்தன்

காலிஸ்தான் பிரிவினைவாதிகளுக்கு கனடா ஆதரவுக் கரம் நீட்டுவதால், அண்மைக்காலமாக இந்தியா - கனடா உறவில் விரிசல் ஏற்பட்டிருக்கிறது.

கனடாவில் வசித்த அந்நாட்டு குடியுரிமை பெற்ற ஹர்தீப் சிங் குஜ்ஜார் என்ற பிரிவினைவாதி, கடந்த ஜூன் மாதம் கொலை செய்யப்பட்டதன் பின்னணியில் இந்திய உளவு அமைப்புகள் இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றஞ்சாட்டினார்.

இது இருநாட்டு உறவில் மேலும் விரிசலை ஏற்படுத்திவிட்டது. பொதுவாகவே கனடாவில் இந்தியாவின் பஞ்சாபை பூர்வீகமாகக் கொண்ட சீக்கியர்களின் எண்ணிக்கை அதிகம். இந்தச் சூழலில், ஹர்தீப் சிங் குஜ்ஜார் கொலைக் குற்றச்சாட்டின் பின்னணியில், கனடாவுக்கான நுழைவு இசைவு (விசா) சேவையை இந்தியா செப்டெம்பர் 21இல் திடீரென இரத்து செய்ததால், சீக்கியர்கள் குறிப்பாக, மாணவர்கள் அதிர்சிக்குள்ளாகினர்.

கனடாவில் கடந்த 2021இல் நடத்தப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, அங்கு வசிக்கும் இந்தியர்களின் எண்ணிக்கையை கணக்கிட்டால், தங்களை சீக்கியர்கள், பஞ்சாபியர்கள் என்று அடையாளப்படுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகம். இதற்கு அடுத்தபடியாக தமிழர்கள், குஜராத்தியர்கள், மேற்கு வங்கத்தினர் கனடாவில் அதிகளவில் வசிக்கின்றனர்.

இன்னும் சொல்லப்போனால், கனடாவில் வசிக்கும் 30 % சீக்கியர்கள் கனடாவில் பிறந்த இரண்டாம், மூன்றாம் தலைமுறை சீக்கியர்களாவர். கனடாவில் குடியேறிய வெளிநாட்டினரின் எண்ணிக்கையிலும் இந்தியர்கள் முதலிடம் பெறுவர். 2016 முதல் 2021 வரையிலான நிலைவரப்படி, கனடாவில் குடியேறிய வெளிநாட்டினரின் பட்டியலில், சீனாவையும், பிலிப்பைன்ஸையும் பின்னுக்குத் தள்ளி, இந்தியா முதலிடம் வகிக்கிறது.

இதேபோல் கனடாவில் கடந்த 2020 ஜனவரி முதல் கடந்த ஜூலை வரையிலான காலகட்டத்தில், நிரந்தரக் குடியுரிமை கோரி விண்ணப்பித்தவர்களிலும், இந்தியர்கள் 4.6 இலட்சம் என்ற எண்ணிக்கையில் முதலிடம் பெறுகின்றனர். இதற்கு அடுத்தபடியாக சீனர்கள் (1.05 இலட்சம்) மிகப் பெரிய இடைவெளியுடன் 2ஆம் இடம் வகிக்கின்றனர்.

இதே காலகட்டத்தில் கனடாவில் கல்வி பயில விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையிலும் இந்தியர்கள் (8.7 இலட்சம்) முதலிடம் வகிக்கின்றனர். இதற்கு அடுத்தபடியாக 1.2 இலட்சம் நைஜீரிய மாணவர்கள் கனடாவில் கல்வி பயில விண்ணப்பித்து, அங்கு கல்வி கற்று வருகின்றனர்.

கனடாவைப் பொறுத்தவரை, குறிப்பிட்ட சில பணிகளில் வெளிநாட்டுப் பணியாளரை பணியமர்த்தும் முன், பணி வழங்கும் நிறுவனம் அல்லது தனிநபர், கனடா அரசிடமிருந்து எல்.எம்.ஐ.ஏ. (தொழிலாளர் சந்தை தாக்க மதிப்பீடு) சான்று பெற வேண்டும்.

அதாவது, கனடாவில் ஒரு பணியை அந்நாட்டுப் பிரஜையோ, நிரந்தரக் குடியுரிமை பெற்ற நபரோ செய்ய முடியாதென ஒரு நிறுவனம் கருதினால், அந்த வேலைக்கு வெளிநாடுகளிலிருந்து தொழிலாளர்களைப் பணியமர்த்திக் கொள்ளலாம். இதன் அடிப்படையில் வேலைவாய்ப்புப் பெற விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையிலும் இந்தியர்கள் அதிகளவில் உள்ளனர்.

கல்வி, வேலைவாய்ப்பு மட்டுமன்றி, வணிகத்திலும் இந்தியாவால் தவிர்க்கமுடியாத நாடாக கனடா விளங்குகிறது. 2016 முதல் 2018 வரையிலான நிலைவரப்படி, 3.6 மில்லியன் டொலர் மதிப்பில் நிலக்கரியை கனடாவிடமிருந்து இந்தியா தருவித்துள்ளது. இந்தியாவின் ஒட்டுமொத்த நிலக்கரி இறக்குமதியில் இது 2.6 % ஆகும்.

இதே காலகட்டத்தில் இந்தியாவிடமிருந்து 1.7 மில்லியன் டொலர் மதிப்பிலான மருந்து பொருட்களை கனடா இறக்குமதி செய்திருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து கனடா இறக்குமதிசெய்யும் மருந்துப் பொருட்களில் இது 4 % ஆகும்.

இதேபோல் கோடிக்கணக்கான ரூபா மதிப்பில் வைரம், தங்கம், கைத்தறிப் பொருட்களையும் இந்தியாவிடமிருந்து 2016-2018இல் கனடா இறக்குமதி செய்துள்ளது. இந்தியாவும் பருப்பு, பட்டாணி, சோயாபீன்ஸ், வேர்க்கடலை போன்றவற்றை அதிகளவில் கனடாவிலிருந்து இறக்குமதி செய்துள்ளது.

தற்போது குஜ்ஜார் கொலைக் குற்றச்சாட்டின் எதிரொலியால் இந்தியா - கனடா மட்டுமல்லாமல், கனடா - வங்கதேசம் இடையிலான உறவிலும் விரிசல் ஏற்பட்டிருக்கிறது. பயங்கரவாதிகளுக்கு கனடா அடைக்கலம் கொடுப்பதாக வங்கதேசம் ஏற்கனவே குற்றஞ்சாட்டியிருந்தது.

இந்நிலையில், இந்தியா மீதான கனடாவின் குற்றச்சாட்டின் பின்னணியில் வங்கதேச வெளியுறவு அமைச்சர் ஏ.கே.அப்துல் மேமன் கடந்த வாரம் ஒரு பேட்டியளித்திருந்தார். அதில் வங்கதேச தந்தையும், பிரதமர் ஷேக் ஹசீனாவின் தந்தையுமான ஷேக் முஜிபுர் ரஹ்மான் கொலைக்குக் காரணமான பயங்கரவாதி எஸ்.எச்.எம்.பி. நூர் சௌத்ரிக்கு கனடா பல ஆண்டுகளாக அடைக்கலம் அளித்து வருவதாகக் குற்றஞ்சாட்டினார். மேலும், கொலை குற்றம் புரிந்தவர்கள் கனடா சென்று ஏகபோகத்துக்கு சலுகைகளை அனுபவிப்பதாகவும் அப்துல் மேமன் தெரிவித்திருந்தார்.

வங்கதேச தந்தை ஷேக் முஜிபுர் ரஹ்மான் கடந்த 1975-இல் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். அவரை நூர் சௌத்ரி துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததற்கு பல்வேறு சாட்சிகள் இருந்தபோதிலும், அவரை சட்டப்படி கனடாவிலிருந்து வங்கதேசம் அழைத்துவந்து நீதி விசாரணைக்கு உட்படுத்துவதில், அந்நாடு சிக்கல்களைச் சந்தித்து வருகிறது. இதே வழக்கில் குற்றவாளியாக சேர்க்கப்பட்டிருந்த முன்னாள் இராணுவ அதிகாரி ரஷீத் சௌத்ரிக்கு வங்கதேச நீதிமன்றம் மரணதண்டனை விதித்தபோதிலும், அவர் கடந்த 1990களிலேயே அமெரிக்காவில் குடியேறிவிட்டார்.



நூர் சௌத்ரியை கனடாவிலிருந்து நாடு கடத்த வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. 1996இல் வங்கதேச பிரதமராக ஷேக் ஹசீனா பதவி ஏற்றதும், தனது தந்தையின் கொலைக்குக் காரணமானவர்களைத் தண்டிக்க உரிய சட்டத்திருத்தம் கொண்டுவந்தார்.

கொலைக் குற்றவாளிகளுக்கு கீழமை நீதிமன்றம் விதித்த மரணதண்டனையை டாக்கா உச்சநீதிமன்றமும் உறுதிப்படுத்தியது. ஆனாலும், கனடாவில் நூர் சௌத்ரிக்கு அரசியல் செல்வாக்கு இருப்பதால், அவரை டாக்கா அழைத்து வருவதில் தொய்வு ஏற்பட்டது.

இந்தத் தருணத்தில், இந்தியா - கனடா இடையிலான பிரச்சினையை வாய்ப்பாகப் பயன்படுத்தி, கனடா தங்களுக்கு இழைத்த அநீதியை வங்கதேசமும் உலக மன்றத்தில் முன்வைக்கத் தொடங்கிவிட்டது.

## நக்கல் நமசிவாயம்

**ரணில் வெளிநாடுகளுக்கு ஏசுறார்..**
**மக்களோ ரணிலுக்கு ஏசுறாங்கள்...**



## வாழ்க்கைப் பாடம்

ஏ.சி.அகார் முஹம்மட் (முதல்வர்)
ஜாமியா நளீமியா கலாபீடம்

# வதந்திகளை நம்பாதீர்; பரப்பாதீர்!

வதந்தி என்பது ஆதாரமற்ற செய்தியைக் குறிக்கின்றது. உண்மையா அல்லது பொய்யா என்று சரிபார்க்கப்படாத தகவல்தான் வதந்தி என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. வதந்தி என்பது ஆளுக்காள் விரைவாகப் பரவக்கூடியது.

வதந்தி பொல்லாதது. அதனால் விளையும் ஆபத்துகள் பாரதூரமானவை. தனிமனித, குடும்ப, சமூக வாழ்க்கையில் அமைதி கெடுவதற்கும் குழப்பங்கள் தோன்றுவதற்கும் அழிவுகள் ஏற்படுவதற்கும் வதந்திகள் காரணமாக அமைகின்றன. வதந்திகள், எத்தனை எத்தனை பிரச்சினைகளையும் மோதல்களையும் முறுகல்களையும் ஏற்படுத்தியுள்ளன என்பதற்கு கடந்த கால வரலாறும் அண்மைக்கால சம்பவங்களும் அசம்பாவிதங்களும் தெளிவான சான்றுகளாக இருக்கின்றன.

அன்னை ஆயிஷா றழி அவர்கள் மீது அவதூறு கூறி அவர்களைப் பற்றி பரப்பப்பட்ட வதந்தி எவ்வளவு பாரதூரமான பாதிப்புகளை ஏற்படுத்தியது என்பதை வரலாறு தெரிந்தவர்கள் அறிவார்கள்.

சம காலத்தில் கொரோனா வைரஸை வைத்து எத்தனை விபரீதமான, எதிரும் புதிருமான வதந்திகள் உலகலாவிய ரீதியிலும் நமது நாட்டு மட்டத்திலும் பரப்பப்பட்டு வருகின்றன என்பதை பார்த்தும் கேட்டும் வருகின்றோம்.

விமர்சனம், சமூக சீர்திருத்தம், தஃவா முதலான அழகான, கவர்ச்சியான, நாகரிகமான பெயர்களில் தனிமனிதர்களைப் பற்றி பொது வெளியில் அவதூறு கூறி வதந்திகளைப் பரப்பி அடுத்தவரின் மானத்தோடு விளையாடுவோர் அல்லாஹ்வைப் பயந்து கொள்ள வேண்டும்.

வதந்திகளைப் பரப்புவோர் பெரும் பாவிகள், விஷமிகள், மட்டுமல்ல சமூகத்துரோகிகளாகவும் பார்க்கப்பட வேண்டியவர்கள். நாளை மறுமையில் இவர்கள் நிறைவேற்றிய வணக்க வழிபாடுகள், ஏனைய நற்காரியங்கள் கூட இவர்களுக்கு பயனளிக்காமல் போய் விடலாம்.

நாம் ஓட்டைப் பையில் நன்மைகளைச் சேகரிப்போராக இருக்கக் கூடாது.

பரப்பப்பட்ட வதந்திகள் பறக்கவிடப்பட்ட ஒரு மூட்டை பஞ்சைப் போன்றவையாகும்.

பறக்கவிடப்பட்ட பஞ்சை மீண்டும் திரட்ட முடியுமா? மீண்டும் அந்த மூட்டையில் அடைக்க முடியுமா? முடியாதல்லவா?

அப்படித்தான் வதந்திகளும். அவை பரப்பப்பட்டு விட்டால் அவை ஏற்படுத்திய பாதிப்பை தவிர்ப்பது மிகவும் சிரமசாத்தியமானது.

வதந்தி பல பாரதூரமான பாவங்களோடு சம்பந்தப்படுகின்றது. முக்கியமாக அது ஊகம், உளவு பார்த்தல், துருவித் துருவி ஆராய்தல், புறம் பேசுதல் முதலான பெரும் பாவங்களில் ஒருவரைக் கொண்டு போய் சேர்க்கக் கூடியது.

இது பற்றி அல்குர்ஆன் அற்புதமாக விளக்குவதைப் பார்க்கின்றோம்.

நம்பிக்கை கொண்டோரே! ஊகங்களில் அதிகமானதை விட்டு விலகிக் கொள்ளுங்கள்! சில ஊகங்கள் பாவமாகும். துருவித் துருவி ஆராயாதீர்கள்! உங்களில் ஒருவர் மற்றவரைப் பற்றி புறம் பேசாதீர்கள்! உங்களில் எவரேனும் இறந்த தமது சகோதரனின் மாமிசத்தைச் சாப்பிட விரும்புவாரா? அதை வெறுப்பீர்கள். அல்லாஹ்வை அஞ்சுங்கள்! அல்லாஹ் மன்னிப்பை ஏற்பவன்; நிகரற்ற அன்புடையோன்.

(அல்குர்ஆன் 49:12)

வதந்திகள் பெரும்பாலும் பொய்களாகவும் புனைவுகளாகவும் புரளிகளாகவுமே இருக்கும். வதந்திகளை நம்பிப் பரப்புபவர் அறிந்தோ அறியாமலோ பொய் சொல்பவராக மாறுவார். இதனை நபி (ஸல்) அவர்கள் அருமையாகச் சொல்லியிருக்கின்றார்கள்.

ஒருவர் தாம் கேள்விப்பட்டதை எல்லாம் (பிறருக்கு) சொல்லுவது பரப்புரைச் செய்வது அவர் பொய்யராக இருப்பதற்கு போதுமானதாகும்.

நாம் பார்த்த, கேட்ட, வாசித்த எந்தவொரு செய்தியாக இருந்தாலும் அதன் உண்மைத்தன்மையை நம்பகத்தன்மையை ஒரு முறைக்கு இருமுறை உறுதிப்படுத்துகின்ற கடப்பாடு நமக்கு உண்டு.

குறிப்பாக நாம் வாழும் இன்றைய உலகில் பகைமை, குரோதம், காழ்ப்புணர்ச்சி, வெறுப்பு, பேராசை, பதவி மோகம் முதலான காரணங்களினாலும் தனிப்பட்ட இன்ன பிற நிகழ்ச்சி நிரல்கள் காரணமாகவும் தனிமனிதர்கள், அமைப்புகள், சமூகங்கள் பற்றியெல்லாம் பொய்யான, போலியான செய்திகளைப் புனைந்து பரப்புகின்ற ஒரு தோற்றப்பாடு பரவலாக உருவாகி இருக்கின்ற நிலையில் நாம் மிக மிக விழிப்பாக இருக்க வேண்டும்.

அல்குர்ஆனின் கட்டளையைக் கேளுங்கள்:

முஃமின்களே! தீயவன் எவனும் உங்களிடம் ஒரு செய்தியைக் கொண்டு வந்தால் அதைத் தீர்க்க விசாரித்துக் கொள்ளுங்கள். (இல்லையேல்) அறியாமையினால் (குற்றமற்ற) ஒரு சமூகத்தாருக்கு நீங்கள் தீங்கு செய்து விடலாம்; பின்னர் நீங்கள் செய்தவை பற்றி நீங்களே கைசேதப்படுபவர்களாக (கவலைப்படுபவர்களாக) மாறுவீர்கள்" (திருக்குர்ஆன் 49:6).

வதந்திகளை பரப்புவோருக்கு மிகப் பெரிய வேதனை ஈருலகிலும் கிட்டும் என்று அல்குர்ஆன் எச்சரிக்கின்றது: ( 24:19)

விசுவாசங்கொண்டோர் மத்தியில் மானக்கேடான விஷயம் பரவ வேண்டும் என விரும்புகின்றவர்களுக்கு நிச்சயமாக இம்மை, மறுமையில் இழிவான வேதனை உண்டு. (அல்குர்ஆன் 24:19)

பின்வரும் நபிமொழியும் நமது சிந்தனைக்குரியது:

பிறர் மீது கெட்ட எண்ணம் கொள்வது குறித்து உங்களை நான் எச்சரிக்கின்றேன். ஏனெனில் கெட்ட எண்ணம் தான் பேச்சுகளிலேயே மிகவும் பொய்யானதாகும். (மற்றவர்களின் குறைகளை) துருவித் துருவி ஆராயாதீர்கள். ஒட்டுக் கேட்காதீர்கள். ஒருவரோடொருவர் பகைத்துக் கொள்ளாதீர்கள். சகோதரர்களாய் இருங்கள் (ஸஹீஹுல் புகாரி)

ஓர் அடியான் அல்லாஹ்வுக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதில் தவறிழைக்கின்றபோது அவனை அவன் நாடினால் மன்னிப்பான்.

ஆனால் ஓர் அடியான் மற்றோர் அடியானுக்குத் தீங்கிழைத்தால் சம்பந்தப்பட்ட அந்த அடியான் மன்னிக்காத வரை அல்லாஹ் அவனை மன்னிப்பதில்லை. இந்த வகையில் வதந்தி பரப்புவது என்பது அடியார்களின் உரிமைகளுடன் சம்பந்தப்பட்ட ஒன்று என்ற வகையில் பாதிக்கப்பட்டவர்கள் மன்னிக்காதவரை அல்லாஹ் ஒருவரை மன்னிக்கப் போவதில்லை என்பதை அனைவரும் மனதில் கொள்ள வேண்டும்.

எனவே, வதந்திகளை நம்பாமல் இருப்போம்! பரப்பாமல் இருப்போம்!

மனிதர்களின் சாபத்திலிருந்தும் அல்லாஹ்வின் கோபத்தில் இருந்தும் நம்மை நாம் காத்துக்கொள்வோம்!

## ஸ்ரீலங்கன் விமான பயணங்களின் தாமதம்

# மீண்டெழும் சுற்றுலா வருமானத்தை வீழ்த்தும் சதிவேலைத்திட்டமா?

### கண்டறியுமாறு நாலக பண்டார கோட்டேகொட எம்.பி. பணிப்பு



விமானப் பயணங்களை தாமதப்படுத்தி, மீண்டெழும் சுற்றுலாப் பொருளாதாரத்தை மீண்டும் வீழ்த்துவதற்கு திட்டமிட்ட வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதைக் கண்டறிந்து தேவையான நடவடிக்கையை எடுக்குமாறு வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார கோட்டேகொட, இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் அதிகாரிகளுக்குப் பரிந்துரைத்தார்.

வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் நாலக பண்டார கோட்டேகொட தலைமையில் நேற்று முன்தினம் (04) பாராளுமன்றத்தில் கூடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், பல்வேறு சவால்களை தாண்டி, பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் இந்நாட்டுக்குச் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகைதரும் காலப்பகுதியில் விமானங்கள் தாமதமடைவது சிக்கலுக்குரியது என நாலக பண்டார கோட்டேகொட தலைமையில் நடைபெற்ற இந்தக் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பில் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் அதிகாரிகள் குறிப்பிடுகையில்,

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தில் பல தொழிற்சங்கங்கள் உள்ளதாகவும் பல்வேறு தொழிற்சங்கங்களினால் பல்வேறு கோரிக்கைகளைக் கொண்டு தமது பணிகளை உரிய காலத்தில் மேற்கொள்வதில்லை எனவும் இதனால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் விசேடமாக விமானங்கள் தாமதமடைதல் மற்றும் எதிர்பாராத வகையில் விமானப் பயணங்கள் இரத்துச் செய்யப்படுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

# அரச வைத்திய அதிகாரிகள் எதிர்நோக்கும் நெருக்கடிகள்

### வடிவேல் சுரேஷ் எம்.பியுடன் கலந்துரையாடல்



அரச வைத்திய அதிகாரிகளுக்குரிய முறையான கொடுப்பனவுகள், ஓய்வறை, மலசல கூட வசதிகள் போன்றன இன்மையாலும் இடமாற்றம் பெற்றுச் செல்லும் வைத்தியர்களுக்கு முறையான வசதிகள் செய்து கொடுக்கப்படாததால் நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் வைத்தியர்கள் நாட்டைவிட்டு செல்வதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷை சந்தித்த அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

வடிவேல் சுரேஷுக்கும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உத்தியோகத்தர்களுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று ராஜகிரியவில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

அச்சந்திப்பிலேயே சங்கத்தினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

பயிற்சிபெற்ற நிபுணத்துவ அரச வைத்திய அதிகாரிகள் பலர் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து சென்றமைக்கு மிக முக்கிய காரணமாக மேல் குறிப்பிட்ட விடயங்கள் அமைந்துள்ளன என்றும் சங்கத்தினர் தெரிவித்தனர்.

விசேட மருத்துவ நிபுணர்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்வதாலும் ஏனைய சிலரை சர்வதேச பல்கலைக்கழகங்கள் உள்வாங்குவதாலும் சுகாதாரத்துறை பாரியதொரு நெருக்கடி நிலையினை சந்தித்துள்ளது என்றனர்.

சங்கத்தினரின் கோரிக்கைகளை கேட்டறிந்து கொண்ட வடிவேல் சுரேஷ் எம்.பி,அரச வைத்திய அதிகாரிகளின் முறையான சாதாரணமான வேண்டுகோள்களுக்கு அரசாங்கமும் செவி சாய்த்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் இது தொடர்பில் பாராளுமன்றத்திலும் எடுத்துரைப்பதாகவும் தெரிவித்துள்ளார்.



புத்தளம் மாவட்டத்தில் இந்து சமுத்திரத்துக்கருகில் அமைந்து அருள் பாலிக்கும் அன்னை ஸ்ரீவீரபத்திர காளியம்மன் ஆலயத்தின் வருடாந்த வேள்வி உற்சவம் நேற்று(05) இடம்பெற்றது. இதன்போது சுவாமி குழந்தைவேல் சுரேந்திரன் காவல்காரர்கள் சகிதம் சூடச்சட்டி ஏந்தியவாறு ஊர்வலமாக வந்தார். **படம்:** உடப்பு செய்தியாளர்

# அமைச்சின் செயலாளர், தூதுவர் உள்ளிட்ட 07 புதிய நியமனங்களுக்கு உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி

அமைச்சின் செயலாளர், தூதுவர் உள்ளிட்ட 07 புதிய நியமனங்களுக்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.




அதற்கமைய, எகிப்துக்கான இலங்கை தூதுவராக திருமதி எம்.ஈ.எம்.வெனின்கரின் நியமனம், பங்களாதேஷுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக டபிள்யூ.எம்.தர்மபாலவின் நியமனம், அதற்கு மேலதிகமாக சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளராக எச்.எம்.பீ.பி. ஹேரத், விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) நிறுவனத்தின் தலைவராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, இலங்கை உயிரியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவராக கலாநிதி எஸ்.டபிள்யூ.எம். ஹெட்டிகே, இலங்கை பத்திரிகை பேரவையின் தலைவராக பீ.எம்.எல்.பத்திரண, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக ஐ.எஸ்.விஜேசேகர ஆகியோரின் நியமனங்களுக்கு உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# ‘நான் புரிந்து கொண்ட நபிகள்’ சிங்கள மொழியாக்கம் நூல் வெளியீடு



ஏ.எஸ்.எம்.ஜாவித்

இந்தியாவைச் சேர்ந்த பேராசிரியர் ஏ.மாக்ஸ் எழுதிய ‘நான் புரிந்து கொண்ட நபிகள்’ என்ற நூலை தன்வீர் அகடமி நிறுவனம் சிங்கள மொழியில் மொழியாக்கம் செய்து நேற்று முன்தினம் (04) கொழும்பு 07, இலங்கை மன்றக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் வெளியிட்டது.

விரிவுரையாளர் ஏ.அஸ்வர் அஸாஹிம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக வின்யா ஆரியரத்ன கலந்து கொண்டிருந்தார். இதன்போது வரவேற்புரையை தன்வீர் அகடமியின் ஆலோசகர் எம்.எச்.எம்.ஹஸன் வழங்கினார். தலைமை உரையை விரிவுரையாளர் அஸ்வர் அஸாஹிம் வழங்கினார். அதனைத் தொடர்ந்து பிரதம அதிதியின் உரை, நூல் விமர்சனத்தை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை தலைவர் பேராசிரியர் ரோஹித தசநாயக்க நிகழ்த்தினார்.

நூலின் பிரதிகளை தன்வீர் அகடமியின் அதிபர் அப்துர் ரஹ்மான் அதிதிகளுக்கு வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சர்வமத தலைவர்கள், நான்கு சமயங்களினதும் பிரதிநிதிகள், உலமாக்கள், புத்திஜீவிகள், அரச அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

# இருமாடி கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டல்



ரஸீன் ரஸ்மின்

கணமூலை தாருஸ்ஸலாம் வைத்திய நிலையத்தின் இருமாடிக் கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

குறித்த கட்டிடம் தாருஸ்ஸலாம் வைத்திய நிலையத்தின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கை ISRC அமைப்பின் பணிப்பாளர் முஹம்மது மிஹ்ழாரின் அனுசரணையில் அப்துர் ரஹ்மான் மௌலவியின் முயற்சியால் கிடைக்கப் பெற்றுள்ளது.

டுபாய் நாட்டின் தனவந்தர் ஒருவர் இந்த வைத்திய நிலையத்தின் இருமாடி கட்டிடத்துக்கான நிதி உதவியை வழங்கவுள்ளார்.

அடிக்கல் நாட்டும் நிகழ்வில் மௌலவி அப்துர் ரஹ்மான், இலங்கை ISRC அமைப்பின் பணிப்பாளர் முஹம்மது மிஹ்ழார், கணமூலை பெரிய பள்ளியின் தலைவர் எச்.எச்.எம்.நஜீம் (ஷர்கி) ஆகியோர் கலந்து கொண்டனர்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2023.10.04
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5257
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 30,953,896.00
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 9 6 6 2 8 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3499
சீட்டிழுப்பு திகதி 2023.10.04
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,941,100.80
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 11 16 29 53
விசேட எழுத்து G
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 30411

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1605
2023.10.04
35503
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 409,505,264.00
ஆங்கில எழுத்து U
சுப்பர் இலக்கம் 07
வெற்றி இலக்கங்கள் 67 68 72 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

லக்கி 7
திகதி 2023.10.04
சீட்டிழுப்பு இலக்கம் 0083
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 0 2 6 8 5 3
L7 இலக்கம் 1 6
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.11,434,791.68

ராசி சுப பலன்
திகதி 2023.10.04
சீட்டிழுப்பு இலக்கம் 566
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,195,632.80
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 15 29 45 56
விசேட இலக்கினம் கன்னி

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1287
2023.10.04
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 113,573,816.00
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 17 59 67 71
விசேட எழுத்து N
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 08549


# குடியியல் நியாயாதிக்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்தி கொழும்பில் நடத்தப்படும் மேல் மாகாணத்தின் மேல்நீதிமன்றத்தில்

வழக்கு இலக்கம் : CHC/63/2023/CO

பொரலஸ்கமுவ, கடுவாவல, பிலியந்தல வீதி, இல. 61/1 எனும் அமைவிடத்தில் அமைந்துள்ள மாஸ் ஏசியா இன்வெஸ்ட்மன்ட் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனம் தொடர்பான விடயமாகும்.

மற்றும்

மாஸ் ஏசியா இன்வெஸ்ட்மன்ட் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனம் நீதிமன்றத்தினால் கணக்குகளைத் தீர்த்து கலைப்பு செய்வதற்காக 2007ஆம் ஆண்டு இல. 07 கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த சட்டத்தின் 270 (உ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த சட்டத்தின் 272ஆம் பிரிவின் கீழ் வேண்டுகோள் தொடர்பான விடயம் தொடர்பாக.

ஹேனாதீரகே தொன் பிரதீப் உதயங்க குமார, இல. 101/3, சமகி மாவத்தை, பட்டியவத்த வீதி, போகுந்தர, பிலியந்தலை.

*மனுதாரர்*


மேல் மாகாணத்தில் வர்த்தக மேல்நீதிமன்றத்தினால் மேற்படி பெயர் குறிப்பிடப்பட்ட நிறுவனத்தின் கணக்குகளைத் தீர்த்து கலைப்பு செய்யும் வகையில் மனுவொன்றை 2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி குறித்த நீதிமன்றத்திடம் மனுதாரருக்காக சட்டத்தரணி டபிள்யூ.எம்.மலிந்த பண்டார வாசல அவர்களின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், குறித்த மனு 2023/11/20ஆம் திகதி நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரிக்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும், அம்மனு தொடர்பில் கட்டளையொன்றைச் செய்வதற்காக உறுதிசெய்வதற்கு அல்லது அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான விருப்பம் அக்கம்பனியின் எந்தவொரு கடன் தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநராயின் அந்நபர் அந்நோக்கத்திற்காக விசாரணையின்போது தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோன்ற முடியும் எனவும், மனுவின் பிரதியொன்றைத் தேவைப்படுகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மனுதாரரின் சட்டத்தரணி**
**டபிள்யூ.எம்.மலிந்த பண்டார வாசல**
**இல. 391, 4/2, 4ஆம் மாடி, டாம் வீதி, கொழும்பு - 12.**

குறித்த மனுவை விசாரணை செய்யும் சந்தர்ப்பத்தில் சமுகம் தருவதற்கு விரும்பும் எந்தவொரு நபரும் தன்னால் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை எழுத்து மூலம் அறிவித்தலொன்றை டபிள்யூ.எம்.மலிந்த பண்டார வாசல அவர்களிடம் கையளிக்க வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அவ்வறிவித்தலில் அந்நபரின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்பட வேண்டும் என்பதுடன், அதனைக் குறித்த நபர் அல்லது கம்பனியினால் அல்லது அவரது சட்டத்தரணியிடம் குறித்த சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன் 2023.11.19ஆம் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாகக் கையளிக்க வேண்டும்.

பதிவாளர்
வாணிப மேல்நீதிமன்றம்
கொழும்பு

## நோர்வே எழுத்தாளருக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு



2023ஆம் ஆண்டுக்கான இலக்கியத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்டாக்ஹோம், உலக அளவில் மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், பொருளாதாரம், அமைதி ஆகிய துறைகளில் மகத்தான சாதனை படைப்பவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

அந்த வகையில் மருத்துவம், இயற்பியல், வேதியியல் ஆகிய துறைகளுக்கான நோபல் பரிசுகள் அறிவிக்கப்பட்டன.

இந்த நிலையில், இலக்கியத் துறைக்கான நோபல் பரிசு தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இவ் ஆண்டுக்கான இலக்கிய நோபல் பரிசு நோர்வே எழுத்தாளர் ஜான் போஸ் என்பவருக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் கவிதை, சிறுகதைகள், குழந்தை இலக்கியம், கட்டுரைகள், நாடக வசனம் என பன்முக இலக்கிய தன்மை வாய்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேற்றப்பட்ட கொமாண்டர்



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் நாய் கொமாண்டர் வெள்ளை மாளிகையில் இருந்து வெளியேற்றப்பட்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஜனாதிபதி ஜோ பைடனால் வளர்க்கப்படும் ஜெர்மன் ஷெப்பர்டு வகை நாய் கடந்த வாரம் உளவுப்பிரிவு அதிகாரி ஒருவரை கடித்துள்ளது.

இந்த நிலையில், வெள்ளை மாளிகை பாதுகாவலர்கள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பை கருத்தில்கொண்டு கொமாண்டர் நாயை மாளிகையைவிட்டு வெளியேற்றியுள்ளதாக அமெரிக்க அதிபரின் மனைவி ஜில் பைடனின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

## கடலுக்கு அடியில் வைத்திருந்த சங்கிலி வலையில் சிக்கிய சீனாவின் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்

### 55 படைச் சிப்பாய்கள் உயிரிழப்பு



சீனாவுக்குச் சொந்தமான அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலில் விபத்து ஏற்பட்டது என்றும் இதில் 55 பேர் உயிரிழந்துவிட்டனர் என்றும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சீனாவுக்கும் கொரிய தீபகற்பத்துக்கும் இடையே உள்ள மஞ்சள் கடல் பகுதியில் சீனக் கடற்படைக்கு சொந்தமான அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் வந்தபோது கடலடியில் வைக்கப்பட்டிருந்த பொறியில் சிக்கியது. இதில், அந்த கப்பலின் கெப்டன், 21 அதிகாரிகள் உள்ளிட்ட 55 பேர் உயிரிழந்துவிட்டனர். கடந்த ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி இந்த கப்பல் ஷாங்டாங் மாகாணம் அருகே வந்தபோது கடல் அடியில் எதிரி நாட்டுக் கப்பல்களைத் தடுக்க சீன இராணுவத்தினரால் வைக்கப்பட்டிருந்த இரும்புச் சங்கிலியிலும் நங்கூரத்திலும் சீன நீர்மூழ்கிக் கப்பல் சிக்கிக் கொண்டது.

சீனக் கடல் பகுதிக்குள் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளைச் சேர்ந்த கப்பல்கள் வருவதைத் தடுக்கவே இந்தப் பொறிகளை வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக சீனா வைத்த பொறியில் அந்த நாட்டுக் கப்பலே சிக்கி, கடற்படையைச் சேர்ந்த 55 பேர் உயிரிழந்துள்ளனர்.

## ரஷ்ய வான்வழித் தாக்குதலில் உக்ரைனில் பெரும் பாதிப்பு

### ஐம்பதுக்கும் மேற்பட்டோர் பலி



ரஷ்ய வான்வழித் தாக்குதலில் ஐம்பதுக்கும் மேற்பட்ட உக்ரைனியர்கள் உயிரிழந்துள்ளனர்.

கிழக்கு உக்ரைனில் வர்த்தக நிலையம் ஒன்றின் மீது நேற்று ரஷ்யா நடத்திய வான்வழித் தாக்குதலில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

## உலக செய்திகள்

## ஆப்கானிஸ்தான் அகதிகள் 17 இலட்சம் பேர் வெளியேற உத்தரவு

### பாகிஸ்தான் அரசு அதிரடி அறிவிப்பு



ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி நடந்து வருகிறது. அங்கிருந்து ஏராளமானோர் அகதிகளாக அண்டை நாடான பாகிஸ்தானில் தஞ்சமடைந்து வருகிறார்கள்.

இந்நிலையில், பாகிஸ்தானில் அனுமதியில்லாமல் தங்கியுள்ள 17இலட்சம் ஆப்கானிஸ்தான் அகதிகள் வெளியேற அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது. ஆப்கானிஸ்தானுடனான எல்லைப் பகுதியில் அதிகரித்துவரும் பயங்கரவாத தாக்குதல்களுக்கு அந்த நாட்டிலிருந்து வந்தவர்கள் தான் காரணம் என்றும் பாகிஸ்தான் அரசு குற்றம்சாட்டி வருகிறது. இதற்கிடையே தான் ஆப்கானிஸ்தான் அகதிகள், பாகிஸ்தானில் இருந்து வெளியேற உத்தரவிட்டுள்ளது.

## இஸ்ரேலில் கூடாரப் பெருவிழாவையொட்டி நடைபெற்ற பேரணி; பொதுமக்கள் பங்கேற்பு



இஸ்ரேல் நாட்டில் யூதர்களின் கூடாரத் திருவிழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற பேரணியில் உள்நாடு மட்டுமின்றி வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர். யூதர்கள் பாலைவனத்தில் வாழ்ந்த காலத்தை நினைவுகூரும் வகையில் கூடாரவிழா அரங்கேறி வருகிறது. இது இலையுதிர் கால அறுவடை திருவிழாவாகவும் கொண்டாடப்படுகிறது.

இதற்காக இஸ்ரேலில் 07 நாட்கள் பொதுவிடுமுறையும் வழங்கப்படுகிறது. அதன் ஒரு பகுதியாக ஜெருசலேமில் நடைபெற்ற பேரணியில் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். பிரேசில், சீனா உள்ளிட்ட வெளிநாடுகளை சேர்ந்தவர்களும் இந்த பேரணியில் கலந்து கொண்டனர்.

## தலிபான்கள் ஆட்சி முறையில் மாற்றம் தேவை

### அமெரிக்கா அறிவுரை



ஆப்கானிஸ்தானில் ஜனநாயக ஆட்சி கவிழ்ப்புக்கு பின்னர் தலிபான்கள் ஆட்சி நடக்கின்றது. தற்போதைய ஆட்சியில் மிக கடுமையான சட்டங்களை அமுல்படுத்தி அதனை பின்பற்றும் வகையில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன. மேலும் ஆட்சியாளர்களின் உத்தரவை பின்பற்றாதவர்கள் மீது கடும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனால் ஆப்கானிஸ்தானை சமூக அரசியல் கொள்கை அங்கீகாரத்தில் இருந்து அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகள் விலக்கி வைத்தன. அதன்மீது பொருளாதார கட்டுப்பாடுகள், விசா கட்டுப்பாடுகள் உள்ளிட்டவற்றை அமுல்படுத்தின. இதன் காரணமாக பொருளாதாரம் உள்ளிட்ட நிலைப்பாடுகளில் ஆப்கானிஸ்தான் பின்தங்கியது.

இதுகுறித்து வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் ஜான் கிர்பி கூறுகையில், "தற்போதைய நிலையில் ஆப்கானிஸ்தானை ஆளும் சக்தியாக அங்கீகரிக்க முடியாது. இருப்பினும், சட்டப்பூர்வமான அங்கீகாரத்தை பெற ஆப்கானிஸ்தான் ஆட்சியாளர்கள் தகுந்த வரைமுறைகளை பின்பற்ற வேண்டும். திறம்பட்ட ஆட்சிக்கு பெண்கள், குடிமக்களை கொண்டு பொருளாதாரத்தை உயர்ந்த வேண்டும். மேலும் பெண்களுக்கு உரிய அங்கீகாரம் கொடுக்க வேண்டும்" என்றார்.

## கொழும்பில் நளீம் ஹாஜியார் நினைவுச் சொற்பொழிவு









அஷ்ரப் ஏ. சமட்

பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் பொன் விழா நிகழ்வின் ஒரு கட்டமாக ஏற்பாடு செய்யப்பட்ட நளீம் ஹாஜியார் நினைவுச் சொற்பொழிவு கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் செவ்வாய்க்கிழமை(03) மாலை நடைபெற்றது.

நளீம் ஹாஜியார் நினைவுப் பேருரை மன்றத் தலைவர் சட்டத்தரணி ரிப்கி காஸிம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஜாமியா நளீமியா நிர்வாக சபைத் தலைவர் யாகூத் நளீம் விஷேட அதிதியாகவும் ராபிதா தலைவர் அஷ்ஷெய்க் எம்.ரீ.எம்.லாபிர் மதனி கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர்.

தலைமையுரையை நளீம் ஹாஜியார் நினைவுப் பேருரை மன்றத் தலைவர் சட்டத்தரணி ரிப்கி காஸிம் நிகழ்த்தினார்.

ஜாமியா நளீமியா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.சி. அகார் முஹம்மத் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி 'வாழ்வும் பணியும்' என்ற தலைப்பில் பிரதான உரை நிகழ்த்தினார்.

கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி அறிவுத்துறைப் பங்களிப்பும் ஆய்வுப் பணிகளும் எனும் தலைப்பில் ஆய்வு நூலொன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

ஆய்வு நூலின் முதற்பிரதியை யாகூத் நளீமி பெற்றுக்கொண்டார்.

கலாநிதி சுக்ரியின் சேவையைப் பாராட்டி அவரது குடும்பத்துக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. அதனை அவரது மகன் ஆசிப் சுக்ரி பெற்றுக்கொண்டார்.

ஜாமியா நளீமியா அரபு மொழிக் கற்கைத் துறைத் தலைவர் கலாநிதி அஷ்ஷெய்க் ஏ.பீ.எம். அப்பாஸ் கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி அறிவுப் பங்களிப்பு எனும் தலைப்பில் விசேட உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் உலமாக்கள், கல்விமான்கள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள், ஊடகவியலாளர்கள், அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள், நளீமியாவின் விரிவுரையாளர்கள், பழைய மாணவர்கள் மற்றும் சமூகத்தின் பல்துறைசார்ந்த ஆளுமைகள் கலந்து கொண்டனர்.

## சீனன்கோட்டை நவ்பல் ஜாபிர் மாவத்தை இப்றாஹீமிய்யா ஷாதுலிய்யா ஸாவியாவின் மீலாதுன் நபி, மௌலித் மஜ்லிஸ்













பேருவளை பீ.எம் முக்தார்

இறைத்தூதர் முஹம்மத் ஸல்) அவர்கள் அவதரித்த இந்தப் புனித ரபியுனில் அவ்வல் மாதத்தை முன்னிட்டு பேருவளை சீனன்கோட்டை நவ்பல் ஜாபிர் மாவத்தை இப்றாஹீமிய்யா ஷாதுலிய்யா ஸாவியாவில் ஹுப்ஹான மௌலித் மஜ்லிஸ் 30 ஆம் திகதி நடைபெற்றது.

சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் வழிகாட்டலின் கீழ் மேற்படி ஸாவியா பரிபாலன கமிட்டி பிரதேச ஜமாஅத்தாரின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்ட இம்மஜ்லிஸில் பிரபல பேச்சாளரும் கண்டி மஸ்ஜிதுர் ரஹ்மான் பள்ளிவாசல் பிரதம கதீபுமான மௌலவி அமீர் ஹம்ஸா (ரப்பானி) விசேட சொற்பொழிவாற்றினார்.

ஸாவியாவின் பிரதம இமாம் மௌலவி முஹம்மட் முத்தலிப் (பாரி) நிகழ்வுக்கு தலைமை வகித்தார்.

அஸர் தொழுகையைத் தொடர்ந்து ஸுப்ஹான மௌலித் மஜ்லிஸும் மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து வலீபா யாகூதிய்யாவும் ஹரீரி மௌலிதும் இஷாத் தொழுகையின் பின்னர் திக்ர் (ஹழரா) நிகழ்வும் துஆப் பிரார்த்தனையும் நடைபெற்றதோடு இஷாத் தொழுகையின் பின்னர் விசேட மார்க்கச் சொற்பொழிவும் நடைபெற்று அன்னதானமும் வழங்கப்பட்டது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் பொருளாளர் மௌலவி கலாநிதி அஸ்வர் அஸாஹிம் (அல் அஸ்ஹரி) அதன் உறுப்பினரும் சீனன்கோட்டை பள்ளிச்சங்க உறுப்பினருமான அஷ்-ஷெய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி), ஜாமியதுல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட முதல்வர் மௌலவி எம். அஸ்மிகான் (முஅய்யிதி), ரயீஸுல் முகத்தமுஷ் ஷாதுலி மௌலவி முஹம்மத் பாரூக் (மக்கி), சீனன் கோட்டை பாஸிய்யா பள்ளிவாசல் பேஷ்இமாம் மௌலமி அஹ்மத் முபாரக் (மன்பயி), மூத்த முகத்தமுஷ் ஷாதுலிகளான அபுல் ஹஸன் ஹாஜியார், ஹம்ஸா உட்பட சீனன்கோட்டை பள்ளிச்சங்க உறுப்பினர்கள், உலமாக்கள், இஹ்வான்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

முத்தாஸ் மும்தாஸ் தலைமையிலான பிரதேச இஹ்வான்கள் மற்றும் இளைஞர்கள் இந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# "அறிவும் ஆரோக்கியமும்" நூல் வெளியீட்டு நிகழ்வு





மீனோடைக்கட்டு செய்தியாளர்

நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் சமூகநல மருத்துவ உத்தியோகத்தர் திருமதி ஆர்.எவ்.றிஸ்மியா எழுதிய "அறிவும் ஆரோக்கியமும்" நூல் வெளியிட்டு நிகழ்வு புதன்கிழமை(04) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாகவும் கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் கௌரவ அதிதியாகவும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.அப்துல் வாஜித் விசேட அதிதியாகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நூலின் முதற் பிரதியை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கும் இரண்டாம் பிரதியை கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளருக்கும் நூலாசிரியர் வழங்கி வைத்தார். இதன்போது ஆயுர்வேத வைத்திய அத்தியட்சகர்கள், பொறுப்பு வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# பாடல் போட்டியில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தினர் மூவர் தெரிவு




திராய்க்கேணி செய்தியாளர்

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அரச உத்தியோகத்தர்களுக்கிடையே இடம்பெற்ற மாவட்ட மட்ட பாடல் போட்டி கல்முனை வடக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி இடம்பெற்றது.


நூற்றுக்கும் மேற்பட்ட அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்ததில் வெற்றி பெற்றவர்களின் பெயர்ப் பட்டியல் மாகாண மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாகாண மட்ட போட்டியானது திருகோணமலை கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் கடந்த செப்டெம்பர் 07ஆம் திகதி இடம்பெற்றது.

இதனடிப்படையில், பதவி நிலை உத்தியோகத்தரான பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமது ஷாபீர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.எம்.கபீர் மற்றும் திட்டமிடல் பிரிவின் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எம்.பியாஸ் ஆகிய அட்டாளைச்சேனை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மட்ட போட்டிகளில் சாதனை படைத்த சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம்







பொலிவேரியன், மாளிகைக்காடு செய்தியாளர்கள்

கலாசார அலுவல்கள் அமைச்சினால் வருடந்தோறும் நடத்தப்பட்டு வரும் பிரதீபா - 2023 போட்டியின் இறுதிப் போட்டியான தேசிய மட்டப்போட்டிகள் கண்டி, பொல்கொல்ல மகாவலி கல்விக் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமையும்(01) அதேபோல் சித்திரப் போட்டி கடவத்தை மகர ஜனாதிபதி வித்தியாலயத்தில் கடந்த 29ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் இடம்பெற்றன.

இந்த தேசிய மட்டப் போட்டிகளில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் பயிற்சி பெற்றுவரும் மாணவர் குழுவினர் கிழக்கு மாகாணத்தில் முதல் முறையாகக் கலந்துகொண்டு கலை, கலாசாரப் போட்டிகளின் கனிஷ்ட நிகழ்ச்சியான ரபான், கோலாட்டப் போட்டிகளில் தேசிய ரீதியில் முதலாமிடத்தையும் சிரேஷ்ட நிகழ்ச்சியான கோலாட்டப் போட்டியில் இரண்டாமிடத்தையும் சித்திரப் போட்டியில் தேசிய ரீதியில் மூன்றாமிடத்தையும்பெற்று சாய்ந்தமருதுக்கு பெருமை சேர்க்கும் வகையில் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

இது சாய்ந்தமருது வரலாற்றில் பாரியதொரு வெற்றியாகும். ஏனெனில், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் திறந்து எட்டு மாத காலப்பகுதியில் மிக நீண்ட காலமாக செயற்பட்டு வந்த மத்திய நிலையங்களை வீழ்த்தி இவ்வெற்றிச் சாதனையை நிலை நாட்டியுள்ளனர்.

கலை, கலாசாரப் போட்டியான ரபான், கோலாட்டப் போட்டியின் கனிஷ்ட பிரிவில் முதலிடம் பெற்ற மாணவர்களான ஜே.எம்.ஜரிஹ், எம்.எவ்.எம்.அஸ்பல், எம்.எவ்.எம்.பஹட், ஏ.ஆர்.எம்.சப்கி, என்.அமைத் அஹமட், எஸ்.எம்.ஏ.மஹ்தி, எம்.ஆர்.இஸ்ஸத், எம்.ஐ.எம்.அபான், எஸ்.எம்.ஆதிப், எம்.பிஸ்மில்லாஹ், எம்.ஏ.எம்.அப்துல் ஹாதி, எவ்.எம்.பர்ஹான், ஆர்.ஏ.எம்.அஹ்னாப் மற்றும் கோலாட்டத்தில் சிரேஷ்ட பிரிவில் இரண்டாமிடத்தைப் பெற்ற மாணவர்களான எம்.எவ்.எம்.றிஹ்பத், ஏ.ஜீ.எம்.ஆஸிப், என்.ஹம்தி, என்.எம்.இஷாம், ஜே.எம்.றிப்காஸ், என்.நப்ரின், ஜே.எம்.ஷாபீத், என்.எம்.அல்தாப், ஏ.எம்.எம்.நுஸ்கி, என்.எம்.எம்.றுக்ஸான், ஏ.எம்.அஸ்ரி, ஏ.எம்.ஹபீஸ், ஜே.எம்.ஜகி, ஏ.எம்.எம். அர்ஷிக், எவ்.எம்.ஹசீன் மற்றும் சித்திரப் போட்டியில் தேசிய ரீதியில் எம்.எல். பாத்திமா ஜியா மூன்றாமிடத்தையும் ஜே.றின்சான் ஆறுதல் பரிசையும் பெற்று கலாசார மத்திய நிலையத்துக்கும் ஊருக்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளனர்.

இக்கலாசார மத்திய நிலையத்தில் இம் மாணவர்களைப் பயிற்றுவித்த வளவாளர்களான எம்.ஐ.எம்.அமீர், எம்.ஐ.அலாவுதீன், எச்.பைசர், ஏ.இஸ்ஸதீன், ஏ.எல்.எம்.சாஜி மற்றும் எஸ்.எச்.ஏ.கபூர் மற்றும் இசை வடிவம் அமைத்த இசைக்கலைஞர் எம்.அக்பர், கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்திச் சபைச் செயலாளர் அஸ்வான் மௌலானா, சபை நிறைவேற்று உறுப்பினர்கள், மத்திய நிலையத்தோடு என்றும் நெருங்கி இயங்கி வருகின்ற ஊடகவியலாளர் எம்.எஸ்.எம். ஸாகிர், கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்திச் சபை உப செயலாளர், ஊடகவியலாளர் நூருல் ஹுதா உமர், கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி.நௌசாத், எஸ்.புவித்ரன் உட்பட இதற்குப் பின்புலமாக இருந்து செயற்பட்ட சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் மற்றும் இம்மாணவர்களை போட்டியில் பங்குபற்ற அனுமதி வழங்கிய கல்முனை சாஹிராக் கல்லூரி அதிபர் எம்.ஐ.எம்.ஜாபீர் மற்றும் சாய்ந்தமருது அல்-ஜலால் பாடசாலை அதிபர் எஸ்.சைபுதீன் மற்றும் இம் மாணவர்களின் பெற்றோர் உட்பட வெற்றிக்காகப் பங்குபற்றி பாடுபட்ட அனைவருக்கும் இவ்வெற்றிக்கு காரணகர்த்தாவாகவும் உந்து சக்தியாகவும் அமைந்த கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான் வாழ்த்துகளோடு பாராட்டுகளையும் தெரிவித்தார்.

# தரம் உயர்த்தப்பட்ட செந்நெல் கிராம வைத்தியசாலை திறந்து வைப்பு



பொத்துவில் செய்தியாளர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட சம்மாந்துறை செந்நெல் கிராம ஆரம்ப பராமரிப்பு சுகாதாரப் பிரிவு பிரதேச வைத்தியசாலையாக சுகாதார அமைச்சினால் தரம் உயர்த்தப்பட்டமைக்கமைவாக இவ்வைத்தியசாலையை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கும் நிகழ்வு புதன்கிழமை(04) இடம்பெற்றது.

வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் சரசி பிரார்த்தனா விஜயசூரிய தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாகவும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டிருந்தனர்.

பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பீ.அப்துல் வாஜித், திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர், கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளரும் நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான டொக்டர் எம்.ஏ.நபீல், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் வை.பீ.ஏ.அஸீஸ் ஆகியோரும் அதிதிகளாக கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது வைத்தியசாலைக்குத் தேவையான அம்பியூலன்ஸ் மற்றும் தளபாடங்கள், மருத்துவ உபகரணங்கள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com




சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவர் தின நிகழ்வுகள் சாய்ந்தமருது CREATIVE LABS அக்கடமியில் செவ்வாய்க்கிழமை(03) இடம்பெற்றது. அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி ஜஹான் அர்சாத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, அதில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**படம்: பொலிவேரியன் செய்தியாளர்**

# மக்கள் பணி செய்வதன் மூலம் ஆளுமைமிக்கவராக திகழும் றிஸ்லி முஸ்தபா

























**கோணாவத்தை செய்தியாளர் றிபாஸ்**

முன்னாள் உயர்கல்வி பிரதியமைச்சர் மர்ஹூம் மயோன் முஸ்தபா கல்முனை பிரதேசத்தில் மட்டுமல்ல, முழு இலங்கையிலும் பிரசித்தி பெற்ற அரசியல்வாதியாகத் திகழ்ந்ததைப்போன்று அவரது வழியைத் தொடர்ந்து புதல்வரான றிஸ்லி முஸ்தபாவும் இப்பிராந்தியத்தில் பல சமூகநலத் திட்டங்களை முன்னெடுத்து பிரசித்தி பெற்று வருகிறார்.

தந்தை வழியில் நின்று ஓர் இளம் அரசியல்வாதியாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டுள்ள றிஸ்லி முஸ்தபா, 'றிஸ்லி முஸ்தபா எடியுகேஷன் எயிட்' என்ற அமைப்பினூடாக அண்மைக் காலமாக பல சமூக நல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறார். அந்த வகையில், அண்மையில் ஏறாவூரில் மாற்றுத்திறனாளி சிறுவர்களுக்கான பாடசாலையொன்று புனரமைக்கப்பட்டு பாவனைக்காகத் திறந்து வைத்தமை, பொத்துவில் பிரதேச களப்புக்கட்டு மீனவர்களுக்கு குழாய்க் கிணறு வழங்கியதுடன், கல்முனை ஜாமியா மன்பயல் ஹிதாயா அரபுக் கல்லூரிக்கு தந்தையின் ஞாபகார்த்தமாக ஒரு தொகை கணினிகள் அன்பளிப்புச் செய்தமை, நிந்தவூர் அல்-அஸ்றக் தேசிய பாடசாலைக்கு அறிவிப்பு பலகையொன்றை அன்பளிப்பு செய்தமை, வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் பெற்றுக்கொடுத்தமை, விசேட தேவையுடையோர் பாடசாலைக்கான வகுப்பறைகள் மற்றும் சிறுவர் பூங்கா என்பவற்றை திருத்தம் செய்து வழங்கியமை, பொத்துவில் பிரதேசத்தில் புதிய குடி நீர் வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்தமை, முஸ்லிம் சிறார்களுக்கு இலவச 'கத்னா' சேவையை மேற்கொண்டமை, தெஹியத்த கண்டி இந்துசார பிள்ளைப் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி இல்லத்துக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கியமை மற்றும் மலசல கூடங்களை அமைத்துக்கொடுத்தமை போன்ற வேலைத்திட்டங்கள் இவரது நிதியுதவி மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேபோன்று கொவிட் தொற்று காலத்திலும் அம்பாறை மாவட்டத்தில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு பெறுமதியான உலருணவுப் பொருட்கள் வழங்கியமை, இரத்ததான முகாம்களை முன்னின்று நடத்தியமை, அம்பாறை மாவட்டத்தில் பல பாடசாலைகளுக்கு விழாக்கள் மற்றும் நிகழ்வுகளை நடத்துவதற்கான அனுசரணை வழங்கியமை, பாடசாலை விளையாட்டுத்துறையை ஊக்குவிக்க விளையாட்டு உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தமை, பாடசாலைக் கட்டடங்களுக்கு தீந்தை பூசுவதற்கான உதவிகள் செய்தமை என கல்விசார் மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களுக்கு தன்னாலான பங்களிப்பை வழங்கியிருந்தார்.

இவை தவிர மலேசியா, சவூதி அரேபியா போன்ற நாடுகளில் இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலும் தகவல் மற்றும் தொழில்நுட்பத்துறையில் இளைஞர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் பொருட்டு சர்வதேச நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து அதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார். இதற்கென பிரபலமான நிறுவனங்களில் இளைஞர் - யுவதிகளுக்கு தொழில் பயிற்சிகளும் வாழங்கப்பட்டு வருகின்றன.

இவரது தந்தை மர்ஹூம் மயோன் முஸ்தபா பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் இருந்த காலத்தில் இன, மத வேறுபாடுகளுக்கப்பால் பல சமூகங்கள் சார்ந்தும் கல்வி, பொருளாதாரம், விவசாயம், மீன்பிடி, விளையாட்டு, சுகாதாரம், உட்கட்டமைப்பு, அடிப்படை வசதிகள், வாழ்வாதாரம் போன்ற பல்வேறு சமூக நலத் திட்டங்களை மேற்கொண்டு சமூக சேவையில் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தார்.

பிரசித்தி பெற்ற தனது சொந்த நிறுவனமான 'மயோன்' நிறுவனத்தின் மூலம் முதன் முதலாக அம்பாறை மாவட்டத்தில் கணினி கல்வியை அறிமுகப்படுத்தியதோடு தகவல் தொழில்நுட்பத்தின்பால் மாணவர்களையும் இளைஞர்களையும் ஊக்குவித்தார். அது மட்டுமன்றி, இளைஞர் - யுவதிகளுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தையும் தலைநகருக்கான தூரப் பயணத்தை மேற்கொள்ள போக்குவரத்து சேவைகளையும் வழங்கி மக்கள் மனதில் இடம்பிடித்தார்.

இதேபோன்று, அவரது புதல்வரான றிஸ்லி முஸ்தபாவும் சமூகம் சார்ந்து இளைஞர்களின் முன்னேற்றத்துக்காகவும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காகவும் வறிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகவும் பின் தங்கிய பிரதேசங்களில் அடிப்படை வசதியை ஏற்படுத்துவதற்காகவும் விளையாட்டுக் கழகங்களின் முன்னேற்றத்துக்காகவும் பல செயற்றிட்டங்களை வகுத்து செயற்பட்டு வருகின்றமை இவரது சமூகம் மீதான ஆர்வத்தையும் மக்கள் தேவையறிந்து ஈடுபாட்டோடு செயற்படும் திறனையும் அவதானிக்க முடிகிறது. பல்வேறு கட்சி சார்ந்த தலைவர்களுடனும் அமைச்சர்களுடனும் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்து அரசியல் பிரதிநிதியாக செயற்பட்டு வந்ததோடு, கடந்த பொதுத் தேர்தலிலும் அம்பாறை மாவட்டத்தில் வேட்பாளராகப் போட்டியிட்டு கணிசமான வாக்குகளையும் பெற்றிருந்தார்.

பாராளுமன்றத்துக்குத் தெரிவாகாத போதும் தொடர்ச்சியாக மக்கள் நலன்பேணும் செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்ற இவர், அம்பாறை மாவட்டங்களில் எல்லா பிராந்தியங்களிலும் தனது 'றிஸ்லி முஸ்தபா எடியுகேஷன் எயிட்' நிறுவனத்தின் மூலமாக பணியாற்றி வருவதனால் இம் மாவட்ட மக்கள் விரும்பப்படும் ஒருவராக விளங்குகிறார்.

இதனால் எதிர்காலத்தில் பாராளுமன்றத் தேர்தல் ஒன்றில் போட்டியிட்டால் அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.


மேலும், இவரது சமூகப் பணிகளும் மக்கள் மீதான ஆர்வமும் எதிர்காலத்தில் ஒரு சிறந்த தலைவராக, மக்கள் பணியில் நிலைத்து நிற்கும் ஆளுமை உள்ளவராகத் திகழ்வார் என்பதை உணர்த்தி நிற்கிறது.



தோப்பூர் கோட்டத்துக்குட்பட்ட அல்-ஹம்றா மத்திய கல்லூரியில் தேசிய மீலாதுன்நபி விழா புதன்கிழமை (04) அதிபர் எஸ்.எம்.றஹீம் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது மாணவர்களது பல்வேறு கலைநிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டதுடன், மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மூதூர் வலய வளவாளராகக் கடமையேற்ற எம்.இஸட்.ஜம்ஹரீர், எம்.எஸ்.எம்.நௌபர் மற்றும் ரி.என்.இம்தியாஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

படம்: தோப்பூர் செய்தியாளர்

## போடியார் புலம்பல்!



நாடு நெருக்கடி நிலமையில் இருக்குதாம். இணைந்து பணியாற்ற எல்லோரும் வாங்க எண்டு முந்தநாள் பாராளுமன்றத்தில ஜனாதிபதி நரில் சொல்லிப்போட்டாரு எலுவா..? நெருக்கடியாக இருக்கிறத்துக்கு முக்கிய காரணமே இனப்பிரச்சனய வைச்சுக்கொண்டு, இனவாதம் பேசிக்கொண்டு, சண்டித்தனம் பேசி நீதிபதிய துரத்திக்கொண்டு இருந்தால் நெருக்கடி வராம மறுகா சந்தோஷமா வரும்.? நாடு நாடா சுற்றினாலும் கேடு கேடாகத்தான் இருக்கும் புரிந்தால் சரிதான் அம்மாச்சி..!

# ஸ்ரீகோபால கிருஷ்ண ஆலய பெருவிழா

ஆரையம்பதி செய்தியாளர்

மட்டக்களப்பு ஆரையம்பதி செல்வாநகர் ஸ்ரீ ஆரையூர்வல்லி சமேத ஸ்ரீகோபால கிருஷ்ணப் பெருமாள் ஆலய வருடாந்த பிரமோற்சவ பெருவிழா செவ்வாய்க்கிழமை(03) ஸ்ரீ வாமன அவதார திருக்கோல உற்சவத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து இடம்பெற்ற பூஜை நிகழ்வுகளைத் தொடர்ந்து இன்று வெள்ளிக்கிழமை (06) காலிங்க நர்த்தனர் திருக்கோல உற்சவம் இடம்பெறவுள்ளது.

சனிக்கிழமை (07) வெங்கடேச திருக்கோல உற்சவமும் ஞாயிற்றுக்கிழமை (08) உறியடி உற்சவமும் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து திங்கட்கிழமை (09) திருக்கல்யாண உற்சவமும் செவ்வாய்க்கிழமை(10) காலை இரதோற்சவமும் இடம்பெறும். புதன்கிழமை(11) காலை தீர்த்தவாரியும் மாலை பூங்காவனமும் அதனைத் தொடர்ந்து திருப்பொன்னூஞ்சலும் இடம்பெற்று திருவிழா இனிதே நிறைவுபெறும்.

# வாசிகசாலை திறந்துவைப்பு



கல்குடா செய்தியாளர்

முதியோர்களின் மனநலத்தை மேம்படுத்தும் நோக்கில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மிலின் வழிகாட்டலில் பிரதேச செயலகம் பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

அந்தவகையில் வாழைச்சேனை 206டி கென்பிடன்ஸ் முதியோர் சங்க உறுப்பினர்களின் நலன் கருதி வாழைச்சேனை ஹைராத் வீதியில் வாசிகசாலை திறந்துவைக்கப்பட்டது.

கோறளைப்பற்று முதியோர் சம்மேளனத் தலைவர் பி.எம்.எம்.இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கோளளைப்பற்று மத்தி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.றமீஸா கலந்து கொண்டதுடன், அதிதிகளாக பிரதேச செயலக பிரதி திட்டப் பணிப்பாளர் எச்.எம்.எம்.றுவைத், பிரதேச செயலக முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ்.நிறுஜா, முதியோர் சம்மேளன அங்கத்தவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

கிண்ணியா செய்தியாளர்

திருகோணமலை துறைமுகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகமாயப்புரம் பிரதேசத்தில் கேரள கஞ்சாவுடன் புதன்கிழமை (04) மாலை ஒருவர் கைது செய்யப்பட்டதாக துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர் போதைப்பழக்கம் உடையவர் என்றும் கேரள கஞ்சாவை உபயோகிக்கும் நோக்கில் அவரது உடைமையில் மறைத்து வைத்திருந்த நிலையில் கைதுசெய்ததாகவும் துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து 420 மில்லி கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் கைதுசெய்யப் பட்டவர் 34 வயதுடையவர் என்றும் கைதுசெய்யப்பட்டவரையும் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவையும் வியாழக்கிழமை (05) திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் துறைமுகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# கொள்ளையில் ஈடுபட்ட நால்வர் பொலிஸாரால் கைது

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு மாவட்ட பிரதேசங்களில் வீதியால் சென்ற பெண்களை மோட்டார்சைக்கிளில் பின்தொடர்ந்து தங்க ஆபரணங்களை கொள்ளையடித்துச்சென்ற அக்கரைப்பற்றைச் சேர்ந்த இருவரை களுவாஞ்சிகுடி பொலிஸார் புதன்கிழமை (04) கைதுசெய்துள்ளனர்.

அத்துடன், அவர்களிடமிருந்த 04 பவுண் தங்க ஆபரணங்கள், கொள்ளைக்குப் பயன்படுத்திய மோட்டார்சைக்கிள் ஆகியவற்றையும் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மாதம் களுவாஞ்சிகுடி, காத்தான்குடி, மட்டக்களப்பு நகர், கொக்கட்டிச்சோலை பிரதேசங்களில் வீதியால் தனிமையில் நடந்து சென்ற மற்றும் மோட்டார்சைக்கிளில் சென்ற பெண்களை மோட்டார்சைக்கிளில் இருவர் பின்தொடர்ந்து அவர்களின் கழுத்தில் இருந்த தங்கச்சங்கிலிகளை அறுத்தெடுத்துக்கொண்டு தப்பியோடியுள்ளனர்.

இது தொடர்பாக அந்தந்த பிரதேச பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர். இந்நிலையில், செட்டிபாளையம் கோவில் ஒன்றுக்கு அருகாமையில் மோட்டார்சைக்கிளில் கொள்ளையர்கள் வீதியில் நிற்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து சம்பவதினம் பகல் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜி.அபேய விக்கிரமசிங்கவின் வழிகாட்டலில் பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.பிறைசன் ஜோய் தலைமையிலான ரமணன், பிரதீபன், பிறேமதிலக்க, பிரசன்னா, விதுசன், சதா, கிஷோர் ஆகிய பொலிஸ் குழுவினர் குறித்த பகுதியில் நின்றுகொண்டிருந்த கொள்ளையர்கள் இருவரையும் சுற்றிவளைத்து மடக்கிப்பிடித்து கைதுசெய்ததுடன், கொள்ளையிட்ட 04 பவுண் தங்க ஆபரணங்கள், மோட்டார்சைக்கிள் ஒன்றையும் மீட்டுள்ளனர்.

இருவரும் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் காத்தான்குடியில் திருமணம் முடித்து வாழ்ந்துவருவதாகவும் தெரியவருகின்றது. கைதுசெய்யப்பட்டவர்களை விசாரணையின் பின்னர் களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிக்குத் தெரிவு

மாவடிப்பள்ளி செய்தியாளர்



இறக்காமம் அல்-அஷ்ரப் தேசிய பாடசாலை மாணவன் சமீர் அப்ரம் தகி தேசிய மட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தரம் 07இல் கல்வி பயிலும் இவர், திருகோணமலை சென்.ஜோசப் கல்லூரியில் நடத்தப்பட்ட மாகாண மட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டித் தெரிவில் தேர்ச்சிபெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் இவ்வருடம் கணித வினாடி வினா மாகாண மட்டப் போட்டியில் கலந்துகொண்டதோடு, சிங்களம் வாசிப்பு மாகாண மட்டப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன், கடந்த 2021ஆம் ஆண்டு தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் 172 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதல்நிலை சித்தியைப் பெற்றிருந்தார். இவர், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமை புரியும் கே.எல்.சமீர் - எம்.வை.பாயிஷா தம்பதியினரின் புதல்வராவார்.

# கிழக்குப் பல்கலையின் 6ஆவது சர்வதேச ஆய்வுக் கருத்தரங்கு




கல்லடி செய்தியாளர், மட்டக்களப்பு

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் 6ஆவது சர்வதேச ஆய்வுக் கருத்தரங்கும் ஆய்வுரைகள் சமர்ப்பிப்பும் மட்டக்களப்பு கல்லடியில் நடைபெற்றன.

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கென்னடி தலைமையில் இடம்பெற்ற ஆய்வு மாநாட்டுக்கு பிரதம விருந்தினராக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் வசந்தி அரசரெட்ணம் கலந்துகொண்டிருந்தார்.

கட்புல அரங்கேற்ற கலைகள் பல்கலைக்கழகப் பீடாதிபதி பேராசிரியர் கோவித பானு திசாநாயக்க சிறப்பு விருந்தினராகவும் தலைமைப் பேச்சாளராக கட்புல அரங்கேற்ற கலைகள் பல்கலைக்கழக இயக்குநர் பேராசிரியர் ரோஹான் நேத்சிங்கவும் கௌரவ விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் வ.கனகசிங்கம் மற்றும் பேராசிரியர்கள், கலாநிதிகள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

"சமகால சூழலில் சமூகப் பொருளாதார மற்றும் கலாசார வல்லுநர்களின் கலைகள்" எனும் தொனிப்பொருளில் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் நுண்கலை கற்கைகளில் உயர் கைத்தொழில் பொருளாதார வளர்ச்சியில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது என்ற தலைப்பில் இந்த ஆய்வு மாநாடு நடைபெற்றது.

மாணவர்களின் இசை ஆற்றுகைகள், நடன நிகழ்வுகளுடன் நிகழ்வு நிறைவுபெற்றது. அதனைத் தொடர்ந்து ஆய்வாளர்களின் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிப்பும் ஆய்வு மன்ற கருத்துரைகளும் நடைபெற்றன.

மொத்தமாக 58 ஆய்வுக் கட்டுரைகள் இந்த ஆய்வு மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், 11 ஆய்வு அரங்குகளில் இந்த ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டதாக ஆய்வு மாநாட்டின் செயலாளர் கலாநிதி நிலங்கா லியனகே தெரிவித்தார்.

# மாகாண தமிழ் மொழித்தினப் போட்டிகளில் கல்முனை கல்வி வலயத்துக்கு 20 இடங்கள்

மாளிகைக்காடு செய்தியாளர்

அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டிகளில் எழுத்தாக்கம் மற்றும் அரங்கப் போட்டிகளில் கல்முனை கல்வி வலயத்திலிருந்து ஆறு போட்டிகள் தேசியமட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், 20 போட்டிகளுக்கு மாகாணத்தில் முதல் மூன்று இடங்கள் கிடைத்துள்ளதாக மாகாண தமிழ் மொழிப் பிரிவு அறிவித்துள்ளது.

முதலாம் இடம் - கட்டுரை: பிரிவு-3, அல்-அஸ்றக் மத்திய மகா வித்தியாலயம், எம்.எச்.பாத்திமா ஹப்னா, சிறுகதை ஆக்கம்: பிரிவு-4, இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் வித்தியாலயம், ஆர்.மகோற்சபி, ஆக்கத்திறன் வெளிப்பாடு: பிரிவு-1, அஸ்-ஸபா வித்தியாலயம், எஸ்.எச்.அம்மார், பேச்சு: பிரிவு-4, அல்-ஹம்றா மகா வித்தியாலயம், அப்துல் சமட் ஹயானி, பாவோதல்: பிரிவு-4, கார்மேல் பற்றிமா கல்லூரி, யு.அபர்ணசுவேர்தா, முஸ்லிம் நிகழ்ச்சி: அல்-அஷ்ரக் மத்திய மகா வித்தியாலயம்.

இரண்டாம் இடம் - குறுநாடக ஆக்கம்: என்.எம்.வாஇல் அர்ஹப், பிரிவு-4, ஸாஹிறா கல்லூரி-கல்முனை, எம்.பி.எம்.ஆதிப், கவிதை: பிரிவு-4, ஸாஹிறா கல்லூரி, தமிழறிவு வினா விடை: அல்-அஸ்றக் ம.ம.வி, நிந்தவூர், பாவோதல்: பிரிவு-3, கார்மேல் பற்றிமா கல்லூரி, அ.தேஷ்மி, இசை-தனி; பிரிவு-2, இ.கி.மி. பெண்கள் வித்தியாலயம், க.வேகாத்மி, நடனம்-குழு 1, கார்மேல் பற்றிமா கல்லூரி, வில்லுப்பாட்டு, கார்மேல் பற்றிமா கல்லூரி

மூன்றாம் இடம் - திறனாய்வு: பிரிவு -5, அல்-பஹ்றியா ம.வி-கல்முனை-எம்.ஜெ.பாத்திமா அமானா, பாவோதல்: பிரிவு-1, அஸ்-ஸபா வித்தியாலயம், ஏ.எச்.ஹனீப் முஹம்மட், இசை-குழு 1: இ.கி.மி.பெண்கள் வித்தியாலயம், நடனம்-தனி: பிரிவு-3, கார்மேல் பற்றிமா கல்லூரி, சு.அகஸ்ரி, நாட்டிய நாடகம்: கார்மேல் பற்றிமா கல்லூரி, இ.அசேதா, தமிழறிவு வினாவிடை: அல்-அஷ்ரக் மத்திய மகா வித்தியாலயம், சிந்து நடைக்கூத்து, காரைதீவு சண்முகா மகா வித்தியாலயம்.

ஒக்டோபர் 28, 29 மற்றும் நவம்பர் 04, 05ஆம் திகதிகளில் தேசிய மட்டப் போட்டிகள் கொழும்பில் நடைபெறவுள்ளன.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மோட்டார்சைக்கிள் திருடிய மூவர் கைது

கனகராசா சரவணன்

நிந்தவூர் பிரதேசத்தில் வீடொன்றின் முன்னால் நிறுத்திவைத்துவிட்டு வீட்டுக்கு வர்ணம் தீட்டிக்கொண்டிருந்த ஒருவரின் மோட்டார்சைக்கிளை திருடிச் சென்ற வாழைச்சேனை பிறைந்துறைச்சேனையைச் சேர்ந்த 03 பேரை புதன்கிழமை (04) கைது செய்ததுடன், திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் உட்பட 04 மோட்டார்சைக்கிள்களை வாகன திருத்துமிடம் (கராஜ்) ஒன்றிலிருந்து மீட்டுள்ளதாக நிந்தவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஒருவர் கடந்த 27ஆம் திகதி நிந்தவூர் பிரதேசத்தில் வீடொன்றுக்கு வர்ணம் தீட்டுவதற்காக மோட்டார்சைக்கிளில் சென்று அதனை வீட்டின் வெளி மதில் பகுதியில் நிறுத்திவிட்டு தனது வேலையில் ஈடுபட்டு பிற்பகல் 02 மணிக்கு வெளியே வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் திருட்டுபோயுள்ளது.

இதனையடுத்து பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவந்த நிலையில், விசேட புலனாய்வுப் பிரிவினரின் தகவலுக்கமைவாக சம்பவதினம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள பிறைந்துறைச்சேனை பகுதியில் மோட்டார்சைக்கிளை திருடிச்சென்ற 03 பேரை கைதுசெய்ததுடன் திருடிச் சென்ற மோட்டார்சைக்கிளை பாகங்களாக கழற்றி விற்கும் கராஜ் ஒன்றிலிருந்து வாழைச்சேனை பகுதியில் திருட்டுப்போன மோட்டார்சைக்கிள் உட்பட 04 மோட்டார்சைக்கிள்களை மீட்டனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்கள் 22, 28, 27 வயதுடைய பிறைந்துறைச்சேனையைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களை வியாழக்கிழமை சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சாய்ந்தமருது பள்ளிவாசலில் கத்தமுல் குர்ஆன் நிகழ்வு





சாய்ந்தமருது செய்தியாளர்

முன்னாள் உயர்கல்வி பிரதியமைச்சர் மர்ஹூம் மயோன் முஸ்தபா மரணித்து 40 நாட்கள் பூர்த்தியடைந்திருப்பதை முன்னிட்டு ஒழுங்குசெய்யப்பட்ட கத்தமுல் குர்ஆன் நிகழ்வு அன்னாரால் நிர்மாணிக்கப்பட்ட சாய்ந்தமருது மஸ்ஜிதுஸ் ஸலாம் பள்ளிவாசலில் புதன்கிழமை (04) இரவு நடைபெற்றது.

பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவரும் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் முன்னாள் அதிபருமான எம்.எம்.இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மௌலவி எம்.எம்.றியாஸ், மௌலவி எம்.எம்.அஹமட் ஆகியோர் கத்தமுல் குர்ஆன் மற்றும் துஆப் பிரார்த்தனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது மர்ஹூம் மயோன் முஸ்தபாவின் பெயரில் சூறத்துல் யாஸின் குர்ஆன் பிரதியும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் உலமாக்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், ஊர்ப் பிரமுகர்கள், மத்ரஸா மாணவர்கள் மற்றும் ஜமாஅத்தினர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, அன்றைய தினம் கொழும்பிலும் கத்தமுல் குர்ஆன் நிகழ்வொன்று அன்னாரது குடும்பத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. இதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள், உலமாக்கள், சிவில் அமைப்பினர் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

## சாய்ந்தமருது முஸ்லிம் கலவன் பாடசாலையில்

# ஆசிரியர் தின அன்பளிப்புப் பொருட்கள் கொடுக்கத் தடை

மாளிகைக்காடு செய்தியாளர்

ஆசிரியர் தினத்தன்று ஆசிரியர்களுக்கோ அல்லது அதிபருக்கோ எந்தவிதமான அன்பளிப்புப் பொருட்களையும் இரகசியமாகவோ அல்லது பரகசியமாகவோ வழங்குவதற்கு பாடசாலை முகாமைத்துவக் குழு தடைவிதித்துள்ளதாக சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸ் பகிரங்க அறிவிப்பை விடுத்துள்ளார்.

அவரது அறிவித்தலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வருடா வருடம் ஒக்டோபர் 06ஆம் திகதி எமது நாட்டில் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்றது. இத்தினத்தில் மாணவர்கள் ஆசிரியர்களுக்கு தனியாகவும் குழுக்களாகவும் அன்பளிப்புப் பொருட்களை வழங்கி வருகின்றனர். இதனால் வகுப்பறைகளில் வறிய மாணவர்கள் பல்வேறு விதமான மன உளைச்சலுக்கும் சவால்களுக்கும் ஏற்றத்தாழ்வுகளுக்கும் முகங்கொடுக்கின்றனர்.

அதேவேளை, இன்றைய பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் பெற்றோர்களாகிய நீங்களும் பல சங்கடங்களுக்கு உட்படுகின்றீர்கள். எனவே, கடந்த வருடத்தைப்போன்று இவ்வருடமும் பெற்றோர்களாகிய நீங்கள் ஆசிரியர் தினத்துக்காக உங்களது பிள்ளைகளிடத்தில் பணமாகவோ அல்லது பொருளாகவும் எதனையும் கொடுத்து அனுப்பவேண்டாம் என அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அவ்வாறு மீறி அனுப்பிவைக்கும் பெற்றோர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். உங்களது ஆசிரியர் தின அன்பளிப்புகள் எமது ஆசிரியர்களின் தேக ஆரோக்கியத்துக்காகவும் நீடித்த ஆயுளுக்காகவும் பிரார்த்தனைகளாக அமையட்டும் என்று தெரிவித்துள்ளார்.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk
businessthamilan@gmail.com

# சிங்கரிடமிருந்து Honor 90 உடன் விறுவிறுப்பான ஸ்மார்ட் ஃபோன் தெரிவுகள் அறிமுகம்

கொழும்பு, ஸ்ரீ லங்கா இலங்கையில் Honor ஸ்மார்ட் ஃபோன்களின் பிரத்தியேக விநியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ள சிங்கர், புதிய Honor ஸ்மார்ட் ஃபோன் தெரிவுகளை இலங்கையில் அறிமுகம் செய்துள்ளது. இதனூடாக வாடிக்கையாளர்களுக்கு சகாயமான - நவீன தொழில்நுட்பத்திலமைந்த - அதிகளவு எதிர்பார்க்கப்பட்ட Honor ஸ்மார்ட் ஃபோன்கள் வழங்கப்பட்டுள்ளன.

சீனாவின் முதல் தர அன்ட்ரொயிட் ஸ்மார்ட் ஃபோன் உற்பத்தியாளரிடமிருந்து ஸ்மார்ட் ஃபோன் புத்தாக்கம் வெளிப்படுத்தப்பட்டு புதிய Honor 90 அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள நடுத்தர அளவிலான ஸ்மார்ட் ஃபோன் பாவனையாளர்களின் மொபைல் அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் இந்தத் தொலைபேசி வகை அமைந்திருக்கும். ரூ. 149,999 எனும் வகையில் Honor 90 தெரிவு அறிமுகத்துடன் இலங்கையில் இந்த வகை ஸ்மார்ட் ஃபோன் தெரிவுகள் உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்யப்பட்டிருந்தன.

சிங்கர் குரூப் ஒஃவ் கம்பனிஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி மஹேஷ் விஜேவர்தன இலங்கைச் சந்தையில் Honor தொலைபேசிகளின் வளர்ச்சி அனுபவம் குறித்து கருத்து வெளியிடுகையில், "இலங்கையில் Honor 90, Honor 90 Lite, Honor X5 Plus, மற்றும் Honor X6a ஸ்மார்ட் ஃபோன்களை இலங்கையில் அறிமுகம் செய்வதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். குறிப்பாக, நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியான சூழலில் உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்கு சிறந்த பெறுமதிகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் சிங்கர் அமைந்துள்ளது. இந்த ஸ்மார்ட் ஃபோன்களினூடாக நுகர்வோருக்கு சகாயமான விலையில் பரந்த தெரிவுகள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கையின் நுகர்வோரிடமிருந்து இந்தப் புதிய ஸ்மார்ட் ஃபோன்களுக்கு பெருமளவு வரவேற்பு காணப்படும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்" - என்றார்.

H90 இன் பிரதான உள்ளம்சமாக அதன் மூன்று – லென்ஸ் பின்புற கமரா கட்டமைப்பு அமைந்துள்ளது.







50 மெகாபிக்சல் முன்புற கமரா காணப்படுகின்றது. இணைப்பில் இருப்பதற்கும் நினைவிலிருக்கும் தருணங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் இது உதவியாக அமைந்திருக்கும்.

Honor 90 இல் காணப்படும் மற்றுமொரு பிரதான அம்சமாக அதன் ஒப்பற்ற பெறுமதி அமைந்துள்ளது. சந்தையில் காணப்படும் இதர முன்னணி மாதிரிகளுடன் ஒப்பிடுகையில் Honor 90இல் உயர் திறன் வாய்ந்த RAM, shooter மற்றும் தரவு சேகரிப்பு ஆற்றல்கள் குறைந்த செலவில் வழங்கப்படுவதால் நுகர்வோருக்கு மதிநுட்பமான தெரிவாக அமைந்திருக்கும்.

Honor தெரிவுகளில் Honor 90க்கும் மேலதிகமாக X5Plus, X6a மற்றும் H90 Lite ஆகிய மூன்று தெரிவுகளும் அடங்கியுள்ளன. இவை உள்நாட்டு ஸ்மார்ட் ஃபோன் சந்தையில் ஒவ்வொரு பிரிவையும் சேர்ந்த பரந்தளவு தேவைகளை நிவர்த்தி செய்வதாக அமைந்திருக்கும்.

இலங்கையில் Honor இன் பயணத்தில் இந்தச் சாதனங்கள் அறிமுகம் செய்யப்பட்டமை முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது. 2023 ஏப்ரல் மாதம் ஆரம்பகட்டமாக அறிமுகம் செய்யப்பட்டிருந்ததைத் தொடர்ந்து நாட்டில் அதிகளவு விரும்பப்படும் ஸ்மார்ட் ஃபோன் வர்த்தக நாமங்களில் ஒன்றாக துரித வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இலங்கையின் நுகர்வோர் மத்தியில் நம்பிக்கையையும் வரவேற்பையும் பெற்றுள்ளது.

புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட ஸ்மார்ட் ஃபோன்களை நாடு முழுவதையும் சேர்ந்த சிங்கர் விற்பனை காட்சியறைகள் மற்றும் அங்கீகாரம் பெற்ற மீள் விற்பனையாளர்களிடமிருந்து கொள்வனவு செய்ய முடியும். மொபைல் தொழில்நுட்பத்தின் எதிர்காலத்தை அனுபவிக்க எதிர்பார்க்கும் வாடிக்கையாளர்களுக்கு இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளது.

# Mini-PCNL சிறுநீரகக் கல் அகற்றும் அறுவை சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்துள்ள நவலோக்க மருத்துவமனை

இலங்கையின் முன்னணித் தனியார் மருத்துவ மனையான நவலோக்க மருத்துவமனைக் குழுமம், மருத்துவமனை வரலாற்றில் முதன்முறையாக mini nephrolithotomy (mini PCNL) மூலம் சிக்கலான சிறுநீரகக் கற்களை அகற்றும் அறுவை சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து மாபெரும் சாதனையைப் படைத்துள்ளது. முழு இடது சிறுநீரகத்தையும் உள்ளடக்கிய ஒரு பெரிய 4 சென்ரி மீற்றர் சிறுநீரகக் கல்லை அகற்றிய இந்தச் செயல்முறையின் சிக்கலான தன்மை காரணமாக இது மருத்துவத்தில் ஒரு பெரிய நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

அதி நவீன தொழில்நுட்பம் மற்றும் அதி நவீன இயந்திர உபகரணங்களுடன் நவலோக்க மருத்துவக் குழுவினர் சிறுநீரகக் கல்லை எவ்வித சிக்கலும் இல்லாமல் அகற்றி அதன் சிறப்பை அடையாளப்படுத்தினர். அறுவை சிகிச்சை நிபுணர், இரண்டு தாதி உதவியாளர்கள், இரண்டு மருத்துவ



தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் ஒரு ரேடியலஜிஸ்ட் உட்பட ஆறு பேர் மட்டுமே அறுவை சிகிச்சைக் குழுவில் இருந்ததால் அவர்க ளது கடின உழைப்புக்கு கிடைத்த வெற்றியே இதன் விளைவாகும்.

கல் கண்டுபிடிக்கப்பட்டது முதல் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிவடையும் வரையிலான முழு செயல்முறையும் 24 மணி நேரத்திற்கும் குறைவான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. இது நவலோக்க மருத்து வமனைக் குழுமத்தின் வினைத்திறனையும் நோயாளிகளின் பராமரிப்பில் அவர்களின் அர்ப்பணிப்பையும் காட்டுகிறது. அறுவை சிகிச்சைக்குப் பிறகு நோயாளி குணமடையும் வரை மருத்துவமனை ஊழியர்கள் நோயாளி மீது மிகுந்த கவனம் செலுத்துகிறார்கள்.

லேசர் தொழில்நுட்பம் தழும்புகள், தையல்கள், இரத்தப்போக்கு அல்லது அறுவை சிகிச்சைக்குப் பின் ஏற்படும் சிக்கல்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்த முடியும். எனவே, நோயாளி விரைவாகக் குணமடைய முடியும். இங்கே நோயாளி வேதனையை அனுபவிக்க வேண்டி இருக்காது மற்றும் அறுவை சிகிச்சைக்குப் பிறகும் கூட இடையூறு இல்லாமல் அவர்களின் அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

இந்த அறுவை சிகிச்சையின் பிரதம சத்திரசிகிச்சை நிபுணரான நவலோக்க வைத்தியசாலையின் சிறுநீரக மருத்துவ நிபுணர் டொக்டர் காலன பள்ளியகுரு, வெற்றிகரமாக அறுவை சிகிச்சை முடிந்தமை குறித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். நவலோக்க வைத்தியசாலையின் திறமையான பணியாளர்கள் மற்றும் நவலோக்க வைத்தியசாலைகள் குழுமத்திற்கு சொந்தமான அதிநவீன தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் சாதனங்கள் காரணமாக இவ்வாறான சிறந்த பெறுபேறுகளை எட்ட முடியும் என அவர் வலியுறுத்தினார்.

# யூனியன் அஷ்யூரன்ஸினால் Uniship அறிமுகம்:

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், புத்தாக்கமான தொழிற்பயிற்சி நிகழ்ச்சித் திட்டமான 'Uniship' என்பதை அறிமுகம் செய்வதையிட்டு மகிழ்ச்சியடைவதாக அறிவித்துள்ளது. திறன்களைக் கட்டியெழுப்புவதற்கான அர்ப்பணிப்புத் திட்டமாக இது அமைந்துள்ளது. UNISHIP இனால் பிரத்தியேகமான தொழிற்பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்படுவதுடன், நிறுவன செயற்பாடுகள் தொடர்பில் பட்டம் பயிலும் மாணவர்களுக்கு பிரயோக அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதனூடாக அவர்களுக்கு தமது தொழில்நிலையில் முன்னேறுவதற்கான அடித்தளத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியும். Uniship இனால் மாணவர்களுக்கு தொழிற்றுறையின் நிபுணர்களிடமிருந்து பயில்வதற்கான வாய்ப்பு வழங்கப்படுவதுடன், தமது நிபுணத்துவ வலையமைப்பை விரிவாக்கம் செய்தல் மற்றும் கூட்டாண்மை உலகில் தம்மை உயர்ந்த நிலைக்கு கொண்டுசெல்லல் போன்றவற்றுக்கும் வாய்ப்பு வழங்கப்படும்.

12 பட்டதாரி மாணவர்கள் எனும் மட்டுப்படுத்தப்பட்டளவு தெரிவுடன் ஆரம்பமாகியுள்ள இந்த நிகழ்ச்சித் திட்டத்தினூடாக, பிரத்தியேகமான மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தும் அனுபவம் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும். இந்த நிகழ்ச்சி வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதும் பட்டதாரி மாணவர்களுக்கு தமது பயிலல் காலத்தில் வெளிப்படுத்தியிருந்த அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்பு போன்றவற்றை உறுதி செய்து பெறுமதி வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்.

Uniship இல் அங்கம் பெறுவதற்கு விண்ணப்பதாரிகள் தற்போது பொது அல்லது தனியார் பல்கலைக்கழகமொன்றில் இணைந்து பட்டக் கல்வியைத் தொடர்பவராக இருத்தல் வேண்டும். ஒக்டோபர் 10 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் தற்போது யூனியன் அஷ்யூரன்ஸ் இணையதளத்தினூடாக விண்ணப்பிக்க முடியும். https://unionassurance.com/uniship/.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம மக்கள் அதிகாரி இம்தியாஸ் ஆனிஃப் கருத்துத் தெரிவிக்கையில், "எமது புத்தாக்கமான தொழிற்பயிற்சி நிகழ்ச்சித் திட்டமான Uniship ஐ அறிமுகம் செய்வதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். UNISHIP என்பது வழமையான தொழிற்பயிற்சிக்கு அப்பாலானது. இது நிலைமாற்ற அனுபவமாகும். தொழிற்றுறையில் முதன் முறையாக இவ்வாறானதொரு திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், நாட்டின் அடுத்த தலைமுறை தலைவர்களை கட்டியெழுப்புவதற்கு உதவியாக அமைந்திருக்கும். திறன்களை ஊக்குவித்து, இளம் சிந்தனையாளர்களுக்கு அவசியமான நுட்பங்களை வழங்கி, அவர்களின் தொழில்நிலையில் முன்னேறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், Uniship இனால் பிரத்தியேகமான கூட்டாண்மை வெளிப்படுத்தல், ஆலோசனை வழங்கல் மற்றும் விறுவிறுப்பாக இயங்கும் நிறுவனமொன்றில் அங்கம் பெறும் வாய்ப்பு வழங்கப்படும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, வளர்ச்சி, பயிலல் மற்றும் பிரத்தியேக விருத்தி எனும் பயணத்தைத் தொடர வருமாறு சகல பட்டம் பயிலும் மாணவர்களையும் நான் அழைக்கின்றேன்" - என்றார்.

கொழும்புப் பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட இலங்கையின் மாபெரும் நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸின் அங்கத்துவ நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ் திகழ்கின்றது. துறையில் மூன்று தசாப்த கால வெற்றிகரமான சேவையை யூனியன் அஷ்யூரன்ஸ் பூர்த்தி செய்துள்ளதுடன், 2023 ஜூன் மாத இறுதியில் சந்தை மூலதனவாக்கமாக ரூ. 18.0 பில்லியனையும், ஆயுள் நிதியமாக ரூ. 60.4 பில்லியனையும் கொண்டிருந்தது. இலங்கையர்களின் கனவுக்கு வலுச்சேர்க்கும் வகையில் இயங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், கல்வி, ஆரோக்கியம், பாதுகாப்பு, ஓய்வூதியம் மற்றும் முதலீடு போன்ற ஆயுள் காப்புறுதியுடன் தொடர்புடைய தீர்வுகளை இலங்கையர்ளுக்கு வழங்குகின்றது. நாடளாவிய ரீதியில் பரந்த கிளை வலையமைப்பினூடாக 3,000 க்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்டு இயங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், தொடர்ச்சியான தனது ஊழியர்கள், தீர்வுகள் மற்றும் செயன்முறைகள் போன்றவற்றில் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய முன்னேற்றங்களை மேற்கொள்ளும் வகையில் முதலீடுகளை மேற்கொண்ட வண்ணமுள்ளது.

# சிறுவர் - முதியோர் தினத்தை பல்வேறு சலுகைகளுடன் கொண்டாடிய மக்கள் வங்கி



நாட்டின் முன்னணி நிதி நிறுவனமான மக்கள் வங்கி, ஒக்டோபர் 1ஆம் திகதியன்று உலக சிறுவர் தினம் மற்றும் சர்வதேச முதியோர் தினத்தைக் கொண்டாடியதில் பெருமிதம் கொள்கிறது. நமது எதிர்காலத்தின் தூண்களான சிறுவர்களுக்கும், அவர்களின் ஞானம் மற்றும் வாழ்க்கை அனுபவங்கள் மூலமாக நமது சமுதாயத்தை வளப்படுத்திய முதியவர்களுக்கும் வங்கி மனமாரப் போற்றிப் பாராட்டியுள்ளது.

மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (தனிநபர் வங்கிச்சேவை) நளின் பத்திரனகே அவர்கள், எமது சமூகத்தின் இந்த இரண்டு முக்கிய பிரிவுகளை அங்கீகரித்துக் கொண்டாடியதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகையில்: "சிறுவர்கள் மற்றும் முதியோரைக் கௌரவிப்பதற்கும் கொண்டாடுவதற்கும் ஒரு தினத்தை அர்ப்பணிப்பது இன்றியமையாதது. ஆண்டுதோறும், ஒக்டோபர் 1ஆம் திகதி, இந்தக் குறிப்பிடத்தக்க நாளை நினைவுகூரும் வகையில் மக்கள் வங்கியானது விசேட செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இந்த ஆண்டும் நாட்டின் சிறுவர்கள் மற்றும் சிரேஷ்ட பிரஜைகளுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட நன்மைகளை வழங்குவதற்கு மக்கள் வங்கி பல நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இந்த முயற்சிகளின் கீழ், வங்கி அன்பளிப்புப் பரிசுகள் மற்றும் விருதுகளை வழங்குகிறது. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகும் நாளிலோ அதற்கு முன்னதாகவோ ரூபா 5,000 அல்லது அதற்கு மேற்பட்ட வைப்புத்தொகையுடன் சிசு உதான கணக்கைப் பேணி வருகின்ற சிறுவர்களுக்கு 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை அங்கீகரிப்பதற்காக அவை வழங்கப்படுகின்றன" - என்று குறிப்பிட்டார்.

இதனை விடவும், இசுரு உதான கணக்குகளை மக்கள் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளதுடன், இது 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு சிறு வயதிலிருந்தே சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கணக்குகளில் 2023 ஒக்டோபர் 1 முதல் 2023 டிசம்பர் 31 வரை வைப்புச் செய்யப்படும் போது அவை விசேட பரிசுகளுக்குத் தகுதி பெறும். 5 முதல் 18 வயது வரையிலான பாடசாலை மாணவர்களிடையே சேமிப்பை ஊக்குவிக்கும் சிசு உதான கணக்குகள், வட்டியை வழங்குவது மட்டுமல்லாது, வைப்புத் தொகையின் அடிப்படையில் பல பரிசுகளையும் வழங்கும். சிறுவர்கள் உயர்கல்வியில் காலடியெடுத்து வைக்கும் வரை அல்லது ஸ்திரமான எதிர்காலத்தை அடையும் வரை இந்தக் கணக்குகளுக்கு உதவ வங்கி உறுதிபூண்டுள்ளது. மாணவர்களுக்கு தங்குதடையற்ற டிஜிட்டல் வங்கிச்சேவை அனுபவத்தை வழங்குவதற்காக டிஜிட்டல் பாடசாலை வங்கிச்சேவை பிரிவுகள் மற்றும் NFC தொழில்நுட்பம் சார்ந்த பண வைப்பு இயந்திரங்களையும் மக்கள் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

சிரேஷ்ட பிரஜைகளுக்காக மக்கள் வங்கியானது, பாதுகாப்பான மற்றும் சௌகரியமான ஓய்வுகாலத்தை உறுதி செய்வதற்காகப் பல்வேறு நன்மைகளை வழங்கும் பரினத கணக்குகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தக் கணக்கு வைத்திருப்பவர்கள் கடனுக்கு விண்ணப்பிக்கும் போது முன்னுரிமை பெறுவார்கள். சிரேஷ்ட பிரஜைகள் தங்கள் சொந்த வீட்டில் இருக்கும் வசதி மற்றும் சௌகரியத்துடன் எமது டிஜிட்டல் வங்கிச்சேவை தளங்கள் மூலம் வங்கிச் சேவையை அனுபவிக்க இடமளிக்கும் டிஜிட்டல் வங்கிச்சேவை வசதிகளையும் வங்கி அவர்களுக்காக செயற்படுத்தியுள்ளது.

பத்திரனகே மேலும் தெரிவிக்கையில், "முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான வங்கியாக மக்கள் வங்கி உங்கள் வைப்புகளைப் பாதுகாப்பதற்கும் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு உயர்தர சேவைகளை வழங்குவதற்கும் அர்ப்பணிப்புடன் உள்ளது. இந்தக் கணக்குகளை நாடு முழுவதும் உள்ள 747 கிளைகள் மற்றும் சேவை மையங்களின் வலையமைப்பின் மூலம் அணுக முடியும். நாங்கள் திறமையான, தொழில்நுட்ப அம்சம் நிறைந்த வங்கிச்சேவை அனுபவங்களை வழங்க எங்கள் டிஜிட்டல் சேவைகளைத் தொடர்ந்து மேம்படுத்த உறுதிபூண்டுள்ளோம்" - என்று குறிப்பிட்டார்.

1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட மக்கள் வங்கியானது, ரூபா 3.0 டிரில்லியனுக்கு கிட்டிய ஒருங்கிணைந்த சொத்துகளுடன் நாட்டின் இரண்டாவது பெரிய நிதிச் சேவை வழங்குனராகும். தற்போது வங்கி நாடு முழுவதும் 747 கிளைகள் மற்றும் சேவை மையங்களைக் கொண்டுள்ளதுடன், 14.7 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களையும் கொண்டுள்ளது. மக்கள் வங்கியில் ஏடிஎம் மையங்கள், பண வைப்பு இயந்திர மையங்கள் மற்றும் CRM உள்ளடங்கிய 290 விசேட வங்கிச்சேவைப் பிரிவுகள் உள்ளன என்பதுடன், வாடிக்கையாளர்கள் வருடத்தில் 24 மணி நேரமும் தங்கள் வசதிக்கேற்ப வங்கிச்சேவையை மேற்கொள்ள இவை இடமளிக்கின்றன.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk businessthamilan@gmail.com

# ISO 15189ஐப் பெற்ற d d மருத்துவமனை குழுமத்தின் ஆய்வகம்



MediHelp மருத்துவமனைக் குழுமம், இலங்கையின் மிகப்பெரிய அடிப்படை சுகாதார மருத்துவமனை சங்கிலித் தொடர், ISO 15189ஐ அடைவதன் மூலம் அதன் விரைவான விரிவாக்கத்தின்போது ஆய்வக அமைப்புக்கான உலகளாவிய அங்கீகாரத்துடன் வலுவான தரமான சேவையில் ஒரு புதிய பரிமாணத்தை அடைந்துள்ளது.

MediHelp மருத்துவமனைகள் குழுமமானது, இலங்கையர்களுக்கு குறைந்த விலையில் முதன்மை பராமரிப்பு சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் தனது வசதிகளை விரைவாக விரிவுபடுத்தும் இவ்வேளையில், அதன் ஆய்வக அமைப்பு இலங்கை தர மதீப்பீட்டு அங்கீகாரத்துடன் ISO 15189 சர்வதேச தரப்படுத்தலைப் பெறுவது மிகவும் பொருத்தமானதாக உள்ளது.

ISO15189 சர்வதேச தரப்படுத்தல் என்பது மருத்துவமனைகளிலுள்ள மருத்துவ ஆய்வகங்களின் தரப்படுத்தலை மதிப்பிடுவதற்கான வழிகாட்டுதலாகும். இது தரம் மற்றும் புதுப்பித்த அறிவுடன் பிரிவுகளை நிர்வகிக்க மிகவும் துல்லியமான மற்றும் நம்பகமான நோயறிதல் மருத்துவ அறிக்கைகளை வழங்குகிறது.

மருத்துவ ஆய்வகத்தின் தர நிர்வகிப்பு அமைப்பு, தொழில்நுட்பத் திறன் மற்றும் நிலையான செயற்பாட்டு நடைமுறைகள் ஆகியவை முழு அங்கீகார செயல்முறையின்போது கடுமையாக மதிப்பீடு செய்யப்படுகின்றன. இந்த மதிப்பீட்டு செயல்முறையானது இலங்கை தர மதிப்பீட்டு அங்கீகார சபையால் பரிந்துரைக்கப்பட்ட சுயாதீன அங்கீகார அமைப்பால் மேற்கொள்ளப்படுகிறது மற்றும் இலங்கை தர மதிப்பீட்டு அங்கீகார சபை ISO15189 சர்வதேச தரப்படுத்தலுக்கு பரிசீலிக்கப்படும் நடைமுறைகளை பூர்த்திசெய்வதில் மிகுந்த கவனம் செலுத்துகிறது.

MediHelp மருத்துவமனை குழுமத்தின் மருத்துவ ஆய்வகத்தால் சர்வதேச தரப்படுத்தல் அடைந்துள்ளமை குறித்து கருத்து தெரிவித்த MediHelp மருத்துவமனை மருத்துவ ஆய்வக அமைப்பின் பணிப்பாளர் சுனந்தா விஜேசிரிவர்தன, "ISO15189 சர்வதேச தரநிலையை சொந்தமாக வைத்திருப்பது, ஆயிரக்கணக்கான நோயாளிகள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் பல தசாப்தங்களாக MediHelp மருத்துவமனை ஆய்வகத்தில் வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை உறுதிப்படுத்தியுள்ளது. இந்தச் சாதனைக்குப் பின்னால் உள்ள அனைவரின் துணிச்சலுக்கும் அர்ப்பணிப்புக்கும் நான் தலைவணங்குகிறேன். மேலும் உயர்தரத்தைப் பேணுவதற்கான நிர்வாக மாற்றங்களை எங்களின் சேவையின் நல்ல அம்சம் என்று கூறலாம். இந்த சூழ்நிலையை பராமரிக்க, நாங்கள் எங்கள் செயற்பாட்டு முறைமைகளை மிகவும் விவேகத்துடன் பராமரிக்கிறோம் மற்றும் தொடர்ந்து முறைகளை மேம்படுத்துகிறோம். எனவே, இறுதி முடிவு மிகவும் வெற்றிகரமான மற்றும் துல்லியமான மருத்துவ ஆய்வக முடிவுகளை வழங்க முடியும். மேலும், எங்கள் சேவைகளின் செயல்திறன் மற்றும் தரத்தை மிக உயர்ந்த மட்டத்தில் பராமரிக்க முடிந்துள்ளது" என தெரிவித்தார்.

மருத்துவ ஆய்வக அறிக்கைகளின் தரப்படுத்தல் மற்றும் துல்லியத்தில் நோயாளிகள், சுகாதார வழங்குநர்கள் மற்றும் ஒழுங்குவிதி நிறுவனங்களின் நம்பிக்கையைப் பேணுவதுடன், மருத்துவ ஆய்வகங்கள் அவற்றின் சேவைகளின் தரத்தை பராமரிக்க பெரும் உதவிகளைப் பெறுகின்றன. மேலும் ஆய்வக செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கும் சேவைகளை பராமரிக்கவும் தரநிலைப்படுத்தல் அவசியம். இந்த அனைத்து நடவடிக்கைகளின் இறுதி முடிவு, மிகவும் திறமையான மற்றும் துல்லியமான ஆய்வக அறிக்கைகளை வழங்கும். இதன் மூலம் மருத்துவ சேவையைப் பெற்றுக்கொள்பவர்களின் நம்பிக்கை மற்றும் திருப்தியை அதிகரிக்கும்.

# தொடர்ச்சியாக மூன்றாவது முறையாகவும் Clarivate South Asia விருதை வென்ற MAS Holdings

## MAS ஹோல்டிங்க்ஸின் ஆடைத் துறை மற்றும் அதிநவீன கண்டுபிடிப்புகளுக்கான பங்களிப்பை உறுதிப்படுத்துகிறது

ஆடைகள் மற்றும் ஜவுளி உற்பத்தியில் உலகளாவிய முன்னணி நிறுவனமான MAS Holdings, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக மதிப்புமிக்க Clarivate South Asia Innovation விருதைப் பெற்றுள்ளது. புத்தாக்கங்களில் தொடர்ந்து சிறந்து விளங்கும் நிறுவனங்களை அங்கீகரிக்கும் புகழ்பெற்ற உலக அறிவாற்றல் நிறுவனமான Clarivate, இந்தியாவின் மும்பையில் நடைபெற்ற மதிப்புக்குரிய Innovation Forumஆல் இந்த விருது வழங்கப்பட்டது.

South Asia Innovation Awardsக்கான தெரிவு செயல்முறை Clarivateஇன் சிறந்த 100 Global Innovators™ என்ற வழிமுறையுடன் நெருக்கமாக இணைகிறது, இது உலகளாவிய கண்டுபிடிப்புத் தலைவர்களை அடையாளம் காண்பதற்கான அளவுகோலாகும். Derwent World Patents Index™ (DWPI™) மற்றும் Derwent Patents Citation Index™ ஆகியவற்றின் தரவுகளின் அடிப்படையில் காப்புரிமை அளவு மற்றும் ஒவ்வொரு காப்புரிமை பெற்ற யோசனையின் (Ideas) புத்தாக்கத் திறனின் வலிமையையும் Clarivate மதிப்பீடு செய்கிறது.

MAS Holdingsஇன் பிரதம கண்டுபிடிப்பு அதிகாரி ரணில் விதாரண கூறுகையில், "Clarivate நிறுவனத்திடமிருந்து தெற்காசிய கண்டுபிடிப்பு விருதை மீண்டும் பெறுவது எமக்கு மிகுந்த உற்சாகத்தை அளிக்கிறது. இந்தத் தொடர்ச்சியான சாதனை, புத்தாக்கமான கண்டுபிடிப்புகளை வழங்குவதற்கும் உயர்தர அறிவுசார் சொத்துகளின் (Intellectua Property) கோப்புறையைப் பராமரிப்பதற்கும் MASஇன் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாக நிற்கிறது. புத்தாக்கத்துக்கான எங்கள் அர்ப்பணிப்பு வேறுபாட்டை உந்துவது மட்டுமல்லாமல் எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களின் வெற்றிக்கும் பங்களிக்கிறது" என தெரிவித்தார்.

பெருநிறுவனப் பிரிவின் கீழ் தெற்காசிய கண்டுபிடிப்பு விருதைப் பெறுவது MASஇன் IP கோப்பறையை வலுப்படுத்தியுள்ளது, மேலும் பிராந்தியத்தில் ஒரு முன்னணி கண்டுபிடிப்பாளராக அதன் நிலையை வலுப்படுத்தியுள்ளது.








MAS புதுமை பயணத்தின் மையமான Twinery, ஸ்மார்ட் ரெக்ஸ்டைல் தொழில்நுட்பங்களின் வளர்ச்சியை மற்றும் விரைவுபடுத்த அர்ப்பணிப்புடன் கவனம் செலுத்தியிருக்கின்றது. உலகளாவிய ரீதியில் விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், வடிவமைப்பாளர்கள் மற்றும் தொழில்முனைவோர்களின் பங்களிப்பைக் கொண்டிருப்பதன் மூலம் Twinery, பேஷன் (fashion) துறையில் உள்ள சவால்களை கூட்டாக எதிர்கொள்கிறது.

இரண்டு குறிப்பிடத்தக்க தயாரிப்புகள், Femography மற்றும் Softmatter, ஆடை மற்றும் ஜவுளிகளின் எல்லைகளை உந்துவிப்பதற்கு MASஇன் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகின்றன. Softmatter அணியக்கூடிய தொழில்நுட்பத்தில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. Washable Sensors, Haptics, Lighting மற்றும் பலவற்றின் மூலம் பயனர் அனுபவங்களை மேம்படுத்துகிறது. இதற்கிடையில், Femography, மேம்பட்ட, துவைக்கக்கூடிய, மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் மிகவும் நிலையான FemTech தயாரிப்புகளை உருவாக்குவதன் மூலம் பெண் ஆரோக்கியம் மற்றும் சுகாதார தீர்வுகளை மறுவரையறை செய்துள்ளது.

Twinery, 66 வழங்கப்பட்ட காப்புரிமைகளின் ஈர்க்கக்கூடிய கோப்புறையுடன் விருது பெற்ற கண்டுபிடிப்பு ஊக்கியாக வெள்ளை இடைவெளிகள் என குறிப்பிடப்படும் ஆராயப்படாத பகுதிகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை உருவாக்க MAS ஐ மேம்படுத்தும் புத்தாக்க கலாசாரத்தை வளர்க்கிறது. இந்தக் கண்டுபிடிப்பு கலாசாரம் சமீபத்தில், Twineryக்கு Fast Company விருதைப் பெற்றுக்கொடுத்தது. அந்தவகையில் உலகளவில் கண்டுபிடிப்பாளர்களுக்கான சிறந்த பணியிடங்களில் 18ஆவது இடத்தைப் பிடித்தது.

புத்தாக்கமான தொழில்நுட்பங்கள் மற்றும் தீர்வுகளின் முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கு Twinery, முயறசிக்கும் அதேவேளை, மிகவும் நிலையான மற்றும் அதிகாரம் பெற்ற பேஷன் (sustainable and empowered fashion) சுற்றுச்சூழல் அமைப்புக்கு பங்களிக்கிறது. வேறுபாடு மற்றும் சந்தை வளர்ச்சியில் MAS இன் முக்கிய பங்கு பல ஆண்டுகளாக அது பெற்ற தொடர்ச்சியான அங்கீகாரத்தால் சான்றளிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காப்புறுதித் தீர்வுக்காக வலுவான கூட்டாண்மையை ஏற்படுத்தியுள்ள அமானா தகாஃபுல் இன்சூரன்ஸ் - சிபிசி ஃபினான்ஸ்



வாகன உரிமையாளர்களுக்கான காப்புறுதிச் சேவைகளை மேம்படுத்தும் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக, அமானா தகாஃபுல் இன்சூரன்ஸ் பிஎல்சி (Amana Takaful Insurance PLC) மற்றும் சிபிசி ஃபினான்ஸ் லிமிட்டெட் (CBC Finance Limited) ஆகியவை விசேட புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன. இந்த மூலோபாய கூட்டணியானது, கொமர்ஷல் வங்கியின் முழுமையான உரிமையாண்மையைக் கொண்ட ஒரு துணை நிறுவனமான சிபிசி ஃபினான்ஸிற்கான விருப்பத்திற்குரிய காப்புறுதிக் கூட்டாளராக அமானா தகாஃபுல் இன்சூரன்ஸை நிலைநிறுத்துகிறது.

இந்த பிரத்தியேக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதானது, சிபிசி ஃபினான்ஸ் வாடிக்கையாளர்களுக்கு ஏற்புடைய காப்புறுதித் தீர்வுகளை வழங்குவதற்கான அமானா தகாஃபுல் இன்சூரன்ஸின் உறுதிப்பாட்டைக் குறிக்கிறது. இது முச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார்சைக்கிள்கள் உட்பட வாகன உரிமையாளர்களுக்கு கட்டுப்படியான கட்டணங்களில், முழுமையான காப்புறுதி மற்றும் தங்குதடையற்ற சேவைகளை உறுதிசெய்து பல்வேறு நன்மைகளை வழங்குகிறது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது அமானா தகாஃபுல் இன்சூரன்ஸ் மற்றும் சிபிசி ஃபினான்ஸ் ஆகியவற்றுக்கு இடையே பரவலான ஒத்துழைப்பை நாடளாவிய ரீதியில் ஏற்படுத்தி, வாடிக்கையாளர் உறவுகளை வலுப்படுத்த வழிகோலும். மேலும், இந்த ஒப்பந்தமானது சிபிசி ஃபினான்ஸ் வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களைப் பூர்த்திசெய்வதற்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட காப்புறுதித் தீர்வுகளை அறிமுகப்படுத்துகிறது.

அமானா தகாஃபுல் இன்சூரன்ஸின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஹசன் காசிம், இந்த புதிய பிரத்தியேக கூட்டாண்மை குறித்து தனது உற்சாகத்தை வெளிப்படுத்துகையில், "சிபிசி ஃபினான்ஸ் உடன் இணைந்து அவர்களுடைய மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு முழுமையான காப்புறுதித் தீர்வுகளை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த மூலோபாய கூட்டணி இலங்கை முழுவதிலும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு தலைசிறந்த பெறுமதியை வழங்குவதற்கான எமது அர்ப்பணிப்புடன் முழுமையாக இணைந்துள்ளது" என்று குறிப்பிட்டார்.

சிபிசி ஃபினான்ஸின் முகாமைத்துவப் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி உபுல் திஸாநாயக்க குறிப்பிடுகையில், "இலங்கை முழுவதும் உள்ள வாகனங்களுக்கு வலுவான காப்புறுதியை உறுதிசெய்வதில் இந்த கூட்டாண்மை ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது.

அமானா தகாஃபுல் இன்சூரன்ஸின் வலுவான நிதி நிலை மற்றும் தலைசிறந்த தயாரிப்பு வழங்கல், சிபிசியின் விரிவான எட்டுகையுடன் இணைந்து, வாடிக்கையாளர்களுக்கு உயர்மட்ட காப்புறுதித் தீர்வுகள் மற்றும் நிகரற்ற வசதிகளுடன் அவர்களை வலுவூட்டும்" என்று குறிப்பிட்டார்.

நிதிச் சேவைகள் துறையில் இந்த இரு முன்னணி நிறுவனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு, புத்தாக்கமான மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக்கொண்ட காப்புறுதித் தீர்வுகளை வழங்குவதன் மூலம் வணிக சமூகம் மற்றும் பொது மக்களுக்கு ஆதரவளிப்பதற்கான அவற்றின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது. சவாலான சந்தை சூழலுக்கு மத்தியில், இந்த கூட்டாண்மையானது அமானா தகாஃபுல் இன்சூரன்ஸின் நெகிழ்திறன் மற்றும் நம்பகமான காப்புறுதித் திட்டங்களை வழங்குவதிலுள்ள உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இது தனிநபர்களுக்கும் வணிகங்களுக்கும் விருப்பமான தெரிவாக அமைகிறது.

### அமானா தகாஃபுல் இன்சூரன்ஸ் (Amana Takaful Insurance) தொடர்பான விபரங்கள்:

அமானா தகாஃபுல் இன்சூரன்ஸ் நிறுவனமானது வாடிக்கையாளர்களை மையப்படுத்திய மற்றும் தொழில்சார் நெறிமுறை நடைமுறைகளை அடிப்படையாகக்கொண்ட தனித்துவமான ஓர் எண்ணக்கருவுடன் இலங்கையில் ஒரு முன்னணி காப்புறுதி நிறுவனமாக திகழ்ந்துவருகிறது. அமானா தகாஃபுல் இன்சூரன்ஸ் நிறுவனம் 1999ஆம் ஆண்டில் ஒரு பொது நிறுவனமாக கூட்டிணைக்கப்பட்டதுடன், 2006ஆம் ஆண்டுமுதல் கொழும்பு பங்குச்சந்தையில் நிரற்படுத்தப்பட்டுள்ள முழுமையான காப்புறுதி நிறுவனமாக மாறியது. அமானா தகாஃபுல் இன்சூரன்ஸ் இலங்கை முழுவதும் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கியவாறு 35இற்கும் மேற்பட்ட கிளைகளுடன் புவியியல்ரீதியான தனது அடிச்சுவட்டை விரிவுபடுத்தியுள்ளது. ISO 9001 தரச்சான்று அங்கீகாரம் பெற்ற நிறுவனமான அமானா தகாஃபுல் இன்சூரன்ஸ், 2005ஆம் ஆண்டு முதல் மாலைதீவில் தனது வெளிநாட்டு செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகிறது. இது ஒரு சுயாதீனமான பொது நிறுவனமாக அங்கு கூட்டிணைக்கப்பட்டு, 2011ஆம் ஆண்டில் மாலைதீவு பங்குச் சந்தையில் நிரற்படுத்தப்பட்டது. அமானா தகாஃபுல் இன்சூரன்ஸ் நிறுவனம் முழுமையான ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி தீர்வுகளை வழங்கிவருவதுடன், சமூகத்தின் பல்வேறு பிரிவுகளின் ஒட்டுமொத்த மருத்துவ சுகாதாரத் தேவைகளுக்கு ஏற்றவாறு பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட மருத்துவ சுகாதாரக் காப்புறுதித் திட்டங்களையும் வழங்கி வருகின்றது.

### சிபிசி ஃபினான்ஸ் லிமிட்டெட் (CBC Finance Limited) தொடர்பான விபரங்கள்

சிபிசி ஃபினான்ஸ் லிமிட்டெட் என்பது இலங்கையில் அதிக விருதுகளைப் பெற்றுள்ள, தொடர்ந்து 10 ஆண்டுகளாக உலகின் தலைசிறந்த 1,000 வங்கிகளின் மதிப்புமிக்க பட்டியலில் இடம்பிடித்து நாட்டுக்குப் பெருமை சேர்த்த வங்கியான கொமர்ஷல் வங்கியின் முழுமையான உரிமையாண்மையைக்கொண்ட ஒரு துணை நிறுவனமாகும். முன்பு செரண்டிப் ஃபினான்ஸ் என்ற பெயரைக் கொண்டிருந்த சிபிசி ஃபினான்ஸ், 2014ஆம் ஆண்டில் கொமர்ஷல் வங்கியால் கையகப்படுத்தப்பட்டது. இந்த நிறுவனம் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதி வர்த்தகச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் அங்கீகாரத்துடன் 1987ஆம் ஆண்டு இந்திரா ஃபினான்ஸ் என்ற பெயரில் ஸ்தாபிக்கப்பட்டது. நாடளாவிய ரீதியில் 13 கிளைகளுடன், இந்நிறுவனம் தனிநபர்கள் மற்றும் சிறிய, நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு பரந்த அளவிலான நிதிச் சேவைகளை வழங்கி வருகிறது.

# சிங்கப்பூர் மாநாட்டில் கலந்துகொண்ட யாழ்ப்பாண மாணவிக்கு கௌரவிப்பு!



பு.கஜிந்தன்

"சிறுவர் தலைமையிலான பரிந்துரைத்தல் மற்றும் அர்த்தமுள்ள பங்கேற்பு" எனும் நிகழ்ச்சித் திட்டத்துக்காக வேள்ட் விஷன் நிறுவனத்தால் தெரிவுசெய்யப்பட்டு, தென்னாசியா மற்றும் பசுபிக் நாடுகளின் பிரதிநிதிகளுடனான மாநாடொன்றில் கலந்துகொள்வதற்காக சிங்கப்பூர் சென்று அங்கு நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட மாணவிக்கு கௌரவிப்பு நடைபெற்றது.

ஏஞ்சல் சர்வதேச பாடசாலையில் தரம் 10இல் கல்வி பயிலும் ஜெயசீலன் குஜிதா என்ற மாணவியே கடந்த செவ்வாய்க்கிழமை (03) சங்கானை கலாசார மண்டபத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக இலங்கையிலிருந்து மூவர் தெரிவாகியிருந்த நிலையில் தமிழர் தரப்பிலிருந்து குஜிதா மாத்திரமே தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

# நீதியில்லாத நாடு நீதிபதி மூலம் உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது

## வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளர் லீலாதேவி

பு.கஜிந்தன்

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா பாதுகாப்புக் கருதி நாட்டைவிட்டு வெளியேறியமை மூலம் இலங்கை நீதி இல்லாத நாடு என்பது நிரூபணமாகிவிட்டதாக வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (04) யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தொடர்ச்சியாக வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் ஜெனீவாக்கும் உள்நாட்டு நீதிப் பொறிமுறையில் எமக்கு நம்பிக்கை இல்லை என்றே கூறி வருகிறோம்.

நாம் சர்வதேசத்திடம் கூறிவந்தது முல்லைத்தீவு நீதிபதி நாட்டை விட்டு அச்சுறுத்தல் காரணமாக வெளியேறியமை உள்நாட்டு நீதிப் பொறிமுறையில் நம்பிக்கை இல்லை என்பதற்கு தற்கசான்றாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை பெரும்பான்மை சிங்களவர்களுக்கு ஒரு நீதி, தமிழருக்கு ஒரு நீதியென வழங்கப்பட்டு வருவது இன்று நேற்று ஆரம்பித்த விடயம் அல்ல.

இதன் வளர்ச்சியாக நீதியைப் பாதுகாக்கின்ற நீதிபதிகளின் தீர்ப்புகளை மாற்றுமாறு கோரி அச்சுறுத்தல் விடுவதும் அவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுவதும் தமிழர் பகுதியான முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதிக்கு அரங்கேறியுள்ளது .

முல்லைத்தீவு குருந்தூர்மலை விவகாரம் மற்றும் மனிதப் புதைகுழி விவகாரம் ஆகியவற்றில் நீதியின்பால் நடந்துகொண்ட நீதிபதி சரவணராஜாவை சிங்கள ஆட்சி பீடம் அச்சுறுத்தி நாட்டை விட்டு வெளியேற்றியுள்ளது.

நீதிபதிக்கு நியாயம் கேட்டு வடக்கு, கிழக்கு தமிழர் வாழும் பகுதிகளில் போராட்டங்கள் வலுப்பெற்றுள்ள நிலையில், சர்வதேசம் இதனைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

நீதிபதி சரவணராஜாவின் வெளியேற்றம் சர்வதேசத்துக்கு உண்மை நிலையை எடுத்துக் காட்டியுள்ளதுடன், எமது வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் கேட்கும் சர்வதேச விசாரணையை சர்வதேசம் இனியாவது சிந்திக்க வேண்டும்.





ஆகவே, இலங்கையின் நீதித்துறை வலுவிழந்துள்ள நிலையில் இனியும் சர்வதேசம் மௌனம் காக்காமல் இலங்கை அரசுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் – என்றார்.

# பேசாலையில் கேரள கஞ்சா பொதியுடன் பெண் ஒருவர் கைது

மன்னார் நகர் நிருபர்

பேசாலை பொலிஸ் பிரிவிலுள்ள காட்டாஸ் பத்திரி கிராம பகுதியிலுள்ள வீடொன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த கஞ்சா பொதியுடன் பெண்ணொருவர் நேற்று முன்தினம் (4) மதியம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேசாலை இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மன்னார் பொலிஸ் குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினர் குறித்த வீட்டிற்குச் சென்று சோதனையை முன்னெடுத்தனர். இதன் போது மறைத்து வைக்கப்பட்டிருந்த கேரள கஞ்சா பொதியொன்றை மீட்டனர். அப்பொதியில் சுமார் 2 கிலோ 300 கிராம் கேரள கஞ்சா இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.



இதன்போது குறித்த வீட்டிலிருந்த 44 வயதுடைய பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மீட்கப்பட்ட கேரள கஞ்சா பொதி மற்றும் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட பெண் பேசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். பேசாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# அல்-அஸ்ஹர் ம.வி. தேசிய பாடசாலை ஆசிரியர்கள் இரத்த தானம் வழங்கிவைப்பு




மன்னார் நகர் நிருபர்

ஆசிரியர் தினத்தையொட்டி மன்னார் அல்-அஸ்ஹர் ம.வி. தேசிய பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் இணைந்து நேற்று முன்தினம் (4) காலை பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாமில் கலந்துகொண்டு இரத்த தானம் செய்தனர்.

மன்னார் அல்-அஸ்ஹர் ம.வி. தேசிய பாடசாலையின் சென். ஜோன்ஸ் கழகம் மற்றும் சுகாதாரக் கழகம் இணைந்து ஏற்பாடு செய்த குறித்த இரத்ததான முகாம் பாடசாலை அதிபர் எம்.வை.மாஹிர் தலைமையில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியின் உதவியுடன் இடம்பெற்ற குறித்த இரத்த தான முகாமில் குறித்த பாடசாலையில் கல்வி கற்பித்துக் கொடுக்கும் சுமார் 20 ஆசிரியர்கள் இரத்த தானம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுழிபுரம் மேற்கு கலைமகள் முன்பள்ளியின் சிறுவர் தினம்



சாவகச்சேரி நிருபர்

சங்கானை கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட சுழிபுரம் மேற்கு கலைமகள் முன்பள்ளியின் சிறுவர் தின நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை மாலை விமர்சையாகக் கொண்டாடப்பட்டன.

பாண்ட் வாத்திய இசையுடன் முன்பள்ளி மாணவர்கள் மாலை அணிவிக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகியிருந்தன.

இதன்போது சுழிபுரம் மேற்கு சமூக மட்ட அமைப்புகளால் பரிசில்கள், இனிப்புகள், குளிர் பானங்கள் வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் கலைமகள் முன்பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், கலைமகள் சனசமூக நிலையத்தினர், சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# சீசன் ரிக்கெட் வழங்குவதில் தாமதம்: பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிப்பு

ஏ.ஏ.எம்.பாயிஸ்

பலாங்கொடை இலங்கைப் போக்குவரத்துச் சபை டிப்போவால் பாடசாலை மாணவர்களுக்கான சீசன் ரிக்கெட் வழங்குவதில் ஏற்படும் தாமதம் காரணமாகப் பிரதேச பாடசாலை மாணவர்கள் பெரும் நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்நிலைமையால் மாணவர்கள் அதிக பணத்தைச் செலவிட்டு இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்களில் சீசன் ரிக்கெட் தாமதமாகும் தினங்களில் பாடசாலைக்குச் சென்று வருவதாகவும் இவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பொதுமக்கள் தற்போது எதிர்நோக்கும் பொருளாதாரக் கஷ்டங்களுக்கு மத்தியில் சீசன் ரிக்கட் கிடைக்காததால் ஏற்படும் மேலதிக செலவையும் சமாளிப்பது மிகக் கஷ்டமாக இருப்பதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்வாறான வீண் தாமதங்கள் ஏற்படாது மாணவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டுவரும் சீசன் போக்குவரத்து சலுகையில் பாதிப்பை ஏற்படுத்தாது டிப்போ நிர்வாகங்கள் செயற்பட வேண்டும் என இவர்கள் வேண்டுகின்றனர்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

# ஹப்புத்தளையில் புதையல் தோண்டிய நபர் சிக்கினார்



ராமு தனராஜா

ஹப்புத்தளை பகுதியில் நபரொருவர் அவரது வீட்டில் புதையல் தோண்டுவதாக பண்டாரவளை பிராந்தியப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய பண்டாரவளை பிராந்திய பொலிஸ் குழுவொன்று மேற்கொண்ட சோதனையின்போது அவரது வீட்டில் புதையல் தோண்டிக்கொண்டிருந்தபோது பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் புகையிரத வீதி ஹப்புத்தளைப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரிடமிருந்து புதையல் தோண்ட பயன்படுத்தப்படும் 02 மண்வெட்டிகள், பிளாஸ்ரிக் பக்கெட்டுகள், பூசணிக்காய்கள், பூக்கள், கறுப்புத் துணிகள், சாம்பிராணி உள்ளிட்ட பூஜைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



பண்டாரவளை பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் கலுபானவின் ஆலோசனைக்கமைய பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் அசோக தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பண்டாரவளைப் பொலிஸார் தெரிவித்தனர். விசாரணையின் பின்னர் சந்தேக நபரை பண்டாரவளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் இயங்கும் நோர்வூட் பிரதேச செயலகம்

## மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஸ்ரீதரன் தெரிவிப்பு



நோர்வூட் தியசிறிகமவில் தற்காலிக கட்டடமொன்றில் இயங்கும் நோர்வூட் பிரதேச செயலகத்தால் பிரதேச மக்களுக்கு உரிய வகையில் சேவைகள் கிடைப்பதில்லை - என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிதிச் செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

நோர்வூட் பிரதேச செயலகத்துக்கு விஜயம் செய்த ஸ்ரீதரன் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிந்துகொண்டதன் பின்பு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

நல்லாட்சி அரசாங்கத்தின்போது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக அம்பேகமுவ பிரதேச செயலகம், அம்பேகமுவ நோர்வூட் பிரதேச செயலகங்களாகப் பிரிக்கப்பட்டன.

இவ்வாறு பிரிக்கப்பட்டதன் பின்பு நோர்வூட் தியசிறிகமவில் உள்ள சிறிய கட்டடமொன்றில் நோர்வூட் பிரதேச செயலகம் உப பிரதேச செயலகமாக இயங்க ஆரம்பித்தது. அதன் பின்பு தற்போது நோர்வூட் பிரதேச செயலகம் என்று பெயர்ப்பலகை மாத்திரம் மாற்றப்பட்டுள்ளதேயொழிய பிரதேச செயலகத்துக்குரிய எவ்வித மான கட்டட வசதிகளும் சரி, ஏனையவசதிகளும் சரி இதுவரை ஏற்படுத்தப்படாத காரணத்தால் இங்கு பணிபுரிகின்ற அரச உத்தியோகத்தர்களும் பல்வேறு தேவைகளுக்காக வருகின்ற பொதுமக்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.




அம்பேகமுவ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 35 கிராமசேவகர் பிரிவுகளில் சுமார் 50 ஆயிரம் மக்கள் வாழ்கின்றனர். அம்பேகமுவ பிரதேச செயலகத்தில் சகல வசதிகள் இருந்தும்கூட 32 கிராமசேவகர் பிரிவுகள் உள்ள நோர்வூட் பிரதேச செயலகப் பிரிவில் 2,08,000 பேர் வாழ்கின்றனர்.

எனினும், நோர்வூட் பிரதேச செயலகத்துக்கு இதுவரையும் செயலாளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. தற்போது இந்தப் பிரதேச செயலகம் இயங்கும் இடத்தைப் பொருத்தமான இடமொன்றுக்கு மாற்றம் செய்யவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


எனவே, மக்களின் நலன் கருதி நோர்வூட் பிரதேச செயலகத்தை உரியவகையில் இயங்கச்செய்வதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஸ்ரீதரன் மேலும் தெரிவித்துள்ளார்.

# துணிச்சல்மிக்க இளைஞனால் மலைப்பாம்பு உயிருடன் பிடிப்பு

எம்.எம்.எம். ரம்ஸீன்

கொத்மலை, பாளுவத்த பகுதி வீடுகளில் வளர்க்கும் கோழிகள், பூனைகள் உட்பட சிறு பிராணிகளை வேட்டையாடி வந்த மலைப்பாம்பொன்றை பிரதேசவாசிகள் உயிருடன் பிடித்துள்ளனர்.

இம்மலைப்பாம்பு இரை தேடி கடந்த 3 ஆம் திகதி வீட்டுத் தோட்டத்தினுள் பிரவேசித்த சந்தர்ப்பத்தில் பிரதேச இளைஞனொருவன் துணிச்சலுடன் பாம்பைப் பிடித்துள்ளார். இம்மலைப்பாம்பை காட்டினுள் விடுமாறு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்ததைத் தொடர்ந்து காட்டினுள் விடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.






லிந்துலை, இராணிவத்தை தமிழ் வித்தியாலய பாடசாலையில் இடம்பெற்ற சிறுவர் தின நிகழ்வுகளின்போது....

படங்கள்: தலவாக்கலை நிருபர்

# ஆசிய விளையாட்டு விழா - 2023 கிரிக்கெட் அரையிறுதி ஆட்டங்கள் இன்று

சீனாவின் ஹாங்சூ நகரில் நடைபெற்றுவரும் ஆசிய விளையாட்டு விழாவின் ஆடவருக்கான கிரிக்கெட் போட்டியின் இரு அரையிறுதிப் போட்டிகள் இன்றைய தினம் நடைபெறுகின்றன.

இலங்கை நேரப்படி காலை 6.30 மணிக்கு நடைபெறும் முதல் ஆட்டத்தில் இந்திய - பங்களாதேஷ் அணிகளும் 11.30 மணிக்கு ஆரம்பமாகும் மற்றைய காலிறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் அணிகளும் பலப்பரீட்சை நடத்துகின்றன.

இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறும் இரு அணிகளும் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகும் அதேவேளை, தோல்வியடையும் இரு அணிகளும் வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் விளையாடும். இந்தப் போட்டிகள் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

இலங்கை அணி காலிறுதி ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் அணியிடம் தோல்வியைத் தழுவி அரையிறுதி வாய்ப்பை இழந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கை மகளிர் அணி வெள்ளிப் பதக்கத்தை வென்றிருந்தது.

## தொந்தரவு செய்ய வேண்டாம் - கோஹ்லி வேண்டுகோள்



உலகக் கிண்ணம் இந்தியாவில் நடைபெறுவதால் கோடிக்கணக்கான ரசிகர்கள் போட்டிகளை நேரில் காண டிக்கெட் வாங்கி காத்திருக்கின்றனர். போட்டிகளுக்கான டிக்கெட் விற்பனை ஏறக்குறைய ஒரு மாதத்திற்கு முன்பாகவே தொடங்கிவிட்டது. ஏறக்குறைய மூன்று கட்டங்களாக டிக்கெட் விற்பனை நடந்திருந்தது.

சென்னையில் 8ஆம் திகதி இந்தியா - அவுஸ்திரேலியா போட்டி நடைபெறவிருக்கிறது. அதுதான் இந்த ஆண்டு உலகக்கிண்ணத்தில் இந்தியாவின் முதல் போட்டி. பலமணி நேரமாக ஒன்லைன் வரிசையில் காத்திருந்த ரசிகர்கள் டிக்கெட் கிடைக்காமல் ஏமாற்றத்துடனே வெளியேறியிருந்தனர்.

டிக்கெட்டுக்கான டிமாண்ட் அந்தளவுக்கு கடுமையாக எகிறியிருக்கிறது. இந்தச் சூழலில்தான் டிக்கெட்டுகள் குறித்து விராட் கோஹ்லி நகைச்சுவையாக இன்ஸ்டாவில் ஸ்டோரி ஒன்றைப் பதிவிட்டுள்ளார்.

"உலகக்கிண்ணம் நெருங்கிவிட்டது. என்னுடைய நண்பர்களிடம் பணிவாக ஒரு விடயத்தைச் சொல்லிக் கொள்கிறேன். இந்தத் தொடர் முழுவதும் யாரும் என்னிடம் டிக்கெட் கேட்டு அணுக வேண்டாம். வீட்டிலிருந்தே மகிழ்ச்சியாக போட்டிகளைக் கண்டுகளியுங்கள்!" என கோஹ்லி கூறியிருக்கிறார்.

## மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி தேசிய மட்டத்துக்கு தெரிவு



பெரியநீலாவணை செய்தியாளர்

கல்முனை கல்வி வலயதிற்குட்பட்ட மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் 20 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணி மாகாண மட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணப் பாடசாலை மட்ட 20 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்டப் போட்டிகள் நிந்தவூர் மற்றும் காரைதீவு விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றன. 28 பாடசாலை அணிகள் பங்குபற்றிய இப்போட்டிகளில் மூன்றாம் இடத்தைத் தெரிவுசெய்வதற்கான போட்டியில் கிண்ணியா அல்- அஷ்ரக் தேசிய பாடசாலையை வீழ்த்தி ஷம்ஸ் மத்திய கல்லூரி அணி மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## உலகக்கிண்ண வரலாற்றில் முதல் முறை

13 ஆவது ஐ.சி.சி. உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் நேற்று ஆரம்பமான நிலையில், தொடரின் ஆரம்ப விழா நேற்று முன்தினம் அஹமதாபாத் நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெறவிருந்த நிலையில், அது திடீரென இரத்துச்செய்யப்பட்டது. இதற்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை. உலகக்கிண்ண வரலாற்றில் ஆரம்ப விழா நடைபெறாத முதல் சந்தர்ப்பமாக இது அமைகின்றது.

இந்தியாவின் முன்னணிக் கலைஞர்களாக ஆஷா போஸ்லே, சங்கர் மகாதேவன், ரன்வீர் சிங், அர்ஜித் சிங், ஸ்ரேயா கோஷல் உள்ளிட்ட கலைஞர்கள் இதில் பங்கேற்கவிருந்தனர். இந்நிலையில், பாரம்பரிய ஆரம்பவிழாவுக்குப் பதிலாக எதிர்வரும் 14ஆம் திகதியன்று நடைபெறும் இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டிக்கு முன்னதாக சிறப்பு விழாவொன்றை நடத்த பி.சி.சி.ஐ. தயாராக இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சாய்ந்தமருதைச் சேர்ந்த றிகாஸ் கராத்தேயில் தங்கம் வென்று சாதனை




எம்.எஸ்.எம்.ஸாகிர்

இரண்டாவது திறந்த சர்வதேச கராத்தே சம்பியன்ஷிப் போட்டி இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது சொடகன் கராத்தே குமுதே போட்டியில் எம்.எம்.றிகாஸ் தங்கப் பதக்கமும் காட்ட போட்டியில் ப்ரோன் பதக்கமும் பெற்று சம்பியனாகத் தெரிவாகி சான்றிதழுடன் பதக்கங்களையும் சுவீகரித்துக் கொண்டார்.

இலங்கை கராத்தே கூட்டமைப்பின் கிழக்கு மாகாணத்தின் தலைவரும் கராத்தே பயிற்றுவிப்பாளருமான சிஹான் முஹம்மத் இக்பால் ஆசிரியரின் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சிஹான் அலோசியஸ் இவருக்கான சான்றிதழ் வழங்கி பதக்கங்களை அணிவித்து கௌரவித்தார்.

## விவாகரத்து வழக்கில் வெற்றியீட்டிய தவான்

இந்திய கிரிக்கெட் வீரர் ஷிகர் தவான் தனது மனைவி ஆயிஷாவிடம் இருந்து விவாகரத்து கோரி தொடர்ந்த வழக்கில் அவருக்கு சாதகமான தீர்ப்பு கிடைத்துள்ளது.

டில்லி குடும்ப நீதிமன்றம் புதன்கிழமை இந்திய கிரிக்கெட் வீரர் ஷிகர் தவான் மற்றும் அவரைப் பிரிந்துள்ள மனைவி ஆயிஷாவுக்கும் விவாகரத்து வழங்கியுள்ளது. மனுதாரருக்கு (ஷிகர் தவான்) செய்த கொடுமையின் அடிப்படையில் அவர் விவாகரத்து பெற உரிமை உண்டு என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

இரு தரப்பும் பரஸ்பர சம்மதத்துடன் விவாகரத்து செய்ய ஒப்புக்கொண்டதாகவும் அவர்களின் திருமணம் நீண்ட காலத்துக்கு முன்பே முடிவுக்கு வந்துவிட்டதாகவும் நீதிபதி ஹரிஷ் குமாரின் தீர்ப்பில் கூறியிருக்கிறார். ஓகஸ்ட் 8, 2020 முதல் இருவரும் கணவன் - மனைவியாக வாழவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஷிகர் தவான் கடந்த 2012ஆம் ஆண்டு ஆயிஷா முகர்ஜியை திருமணம் செய்துகொண்டார். இருவருக்கும் ஸோராவர் என்ற மகன் உள்ளார். இவர்களின் திருமணத்துக்கு முன்பே ஆயிஷாவுக்கு அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒரு நபருடன் திருமணமாகி அவர்களுக்கு 2 மகள்களும் இருந்தனர்.

அந்த நபருடனான திருமண உறவை முறித்துக்கொண்டு நிரந்தரமாக இந்தியாவில் தன்னுடன் வசிப்பதாக உறுதி அளித்ததன் பேரில்தான் ஷிகர் தவான் ஆயிஷாவை மணம் முடித்துள்ளார். ஆனால், ஆயிஷா சொன்னபடி நடந்துகொள்ளாமல் முன்னாள் கணவருடன் மீண்டும் நெருக்கமாக இருந்துள்ளார். தனது 2 மகள்கள் மற்றும் மகன் ஸோராவருடன் அவுஸ்திரேலியாவுக்கே திரும்பியுள்ளார். இதனால் தனது மகனைப் பிரிந்து வேதனைக்கு உள்ளான ஷிகர் தவான், விவகாரத்து பெற முடிவு செய்தார்.

ஷிகர் தவானின் மகன் ஸோராவர் ஒவ்வொரு ஆண்டும் பாதி விடுமுறை நாட்களை தவான் மற்றும் அவரது குடும்பத்தினருடன் செலவிடும் வகையில், மகன் ஸோராவரை இந்தியாவுக்கு அழைத்துவர வேண்டும் என்றும் ஆயிஷாவுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஷிகர் தவான் விரும்பினால் அவுஸ்திரேலியாவுக்குச் சென்று மகனைப் பார்க்கவும், இருவரும் வீடியோ கோலில் சந்தித்து உரையாடவும் ஒத்துழைக்க வேண்டும் என ஆயிஷாவுக்கு நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.




## இன்றைய போட்டி




| பாகிஸ்தான் | | நெதர்லாந்து |
|---|---|---|
| 6 | நேருக்குநேர் | 0 |

அஹமதாபாத் - பி.ப. - 2.00 மணி

## விளையாட்டுத் துளிகள்

சீனாவில் நடைபெறும் ஆசிய விளையாட்டு விழாவில் நேபாள அணியுடனான கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக ஜெய்ஸ்வாலின் சதம் அமைந்தது. வெறும் 48 பந்துகளில் 7 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகளுடன் 100 ஓட்டங்களைக் குவித்தார். இந்த சதத்தின் மூலம் சர்வதேச ரி 20 கிரிக்கெட் போட்டியில் இளம் வயதில் சதமடித்த இந்திய வீரர் என்ற சாதனையை ஜெய்ஸ்வால் (21 வயது) படைத்தார். முன்னதாக இந்திய வீரர் சூர்யகுமார் யாதவ் (23 வயது) இந்தச் சாதனைக்கு சொந்தக்காரராக இருந்தார்.

******

அமெரிக்காவில் நடைபெறும் 2 ஆவது டிவிஷன் கால்பந்து போட்டியான யு.எஸ்.எல். சம்பியன்ஷிப்பில் சாக்ரமென்டோ ரிபப்ளிக் அணிக்கான முன்கள வீரராக டாவியன் கிம்புரு ஞாயிற்றுக்கிழமை களமிறங்கினார். இதன் மூலம் அமெரிக்க கால்பந்து வரலாற்றில் மிக இளம் வயது வீரர் (13 ஆண்டுகள் 7 மாதங்கள் 13 நாட்கள்) என்ற பெருமையைப் பெற்றார். இதற்கு முன் அக்ஸெல் கெய் கடந்த 2021இல் தனது 13 வயது 9 மாதங்கள் 9 நாட்களில் இருந்தபோது களம் கண்டதே சாதனையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

****

2023ஆம் ஆண்டு ஐ.சி.சி. ஆடவர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கான சர்வதேச தூதராக கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரை ஐ.சி.சி. நியமனம் செய்துள்ளது.

## அமரர் தங்கராசா பூமணி ஞாபகார்த்த கிண்ணம் பாலமுனை றைஸ்டார் வசம்




பொத்துவில் நிருபர்)

மட்டக்களப்பு, கோவில்போரதீவு உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்திய அமரர் தங்கராசா பூமணி ஞாபகார்த்த கிண்ணம் - 2023 கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை உதயதாரகை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

றைஸ்டார் அணியினருக்கு சம்பியன் கிண்ணமும் 50,000 ரூபா பணப்பரிசும் இரண்டாமித்தைப் பெற்றுக்கொண்ட அக்னி ஸ்டார் அணியினருக்கு கிண்ணமும் 25,000 ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டன.

உதயதாரகை விளையாட்டுக் கழகத்தின் தலைவர் மகேந்திரன் கோகிலராஜ் தலைமையில் இடம்பெற்ற இறுதிப்போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வில் உதயதாரகை கழகத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய ஆலோசகர்களுமான கே.சச்சிதானந்தம் மற்றும் ஞானப்பிரகாசம், திருமதி தியாகராஜா தேவராணி ஆகியோர் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

குறித்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த 64 முன்னணிக் கழகங்களின் அணிகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

## தங்க மங்கைக்கு ஒரு கோடி வழங்கும் கிரிக்கெட் நிறுவனம்

ஏ. அகீல் சிஹாப்

ஆசிய விளையாட்டு விழாவின் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கைக்கு தங்கப் பதக்கம் வென்றுகொடுத்த தருஷி கருணாரத்னவுக்கு ஒரு கோடி ரூபா பணப் பரிசை வழங்க இலங்கை கிரிக்கெட் நிறுவனம் முன்வந்துள்ளது.

பெண்களுக்கான 800 மீற்றர் இறுதிப் போட்டி புதன்கிழமை (4) இலங்கை நேரப்படி மாலை 4.55 மணிக்கு நடைபெற்றது. இப்போட்டியில் பங்கேற்றிருந்த இலங்கை வீராங்கனையான தருஷி கருணாரத்ன 2 நிமிடங்கள் 3.20 செக்கன்களில் போட்டித் தூரத்தை நிறைவு செய்து தங்கப்பதக்கம் கைப்பற்றி இலங்கைக்கு பெருமை சேர்த்தார்.

தருஷி கருணாரட்ன கைப்பற்றிய தங்கப் பதக்கமானது, 21 வருடங்களின் பின்னர் இலங்கைக்கு கிடைத்த தங்கப் பதக்கமாகும். மேலும் ஆசிய விளையாட்டு விழா வரலாற்றில் இலங்கை கைப்பற்றிய 12 ஆவது தங்கப்பதக்கம் இதுவாகும்.

இந்நிலையில், இலங்கை கிரிக்கெட் செயற்குழு ஒரு கோடி பணப்பரிசை வழங்கத் தீர்மானித்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனத் தலைவர் ஷம்மி சில்வா தெரிவித்துள்ளார். 21 வருடங்களின் பின்னர் இலங்கைக்கு தங்கப்பதக்கத்தைக் கொண்டுவந்த தருஷியை பாராட்ட வேண்டும் என இலங்கை கிரிக்கெட் நிர்வாகக் குழுவிடம் யோசனை முன்வைக்கப்பட்டதாகவும் அதன்படி இந்தப் பணப்பரிசில் வழங்கத் தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7